# உதயன்

வானிலை
கூ.வெ. 31 °C
கு.வெ. 24 °C
மழைக்கு சாத்தியம்

சுடர் 30 | கதிர் 115 | வள்ளுவர் ஆண்டு 2046 | பங்குனி 7, சனிக்கிழமை 21.03.2015


பொது நூலகம் கோண்டாவில் ... பிரதேச ...

## அத்துமீறிய மீன்பிடியை ஒருபோதும் அனுமதியோம்

கொழும்பு, மார்ச் 21
இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதை எந்தக் காலத்திலும் அனுமதிக்கப்போவதில்லை. எத்தனை பேச்சு நடத்தப்பட்டாலும் மீனவர்களது தீர்மானம் இதுவாகவே இருக்க வேண்டும்– இவ்வாறு தெரிவித்துள்ளார் கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா. நாடளாவிய ரீதியில் உள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று நடத்திய பக்.23

## மோடிக்கு இளைஞர் கைலாகு: றோ விசாரணை

யாழ்ப்பாணம், மார்ச் 21
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் தமிழ் இளைஞர் ஒருவர் கீரிமலையில் வைத்து கைகுலுக்கிய சம்பவம் தொடர்பாக, இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ' விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தியப் பிரதமரின் பயண ஏற்பாட்டில் நிகழ்ந்த பாரதூரமான பாதுகாப்பு ஒழுங்கீனமாக இந்தச் சம்பவத்தை இந்திய அரசு நோக்குவதாகவும், அதனாலேயே இது தொடர்பில் முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்திய பிரதமர் அலுவலக செயலகம் உத்தரவிட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, கடந்த சனிக்கிழமை கீரிமலைக்கு வீடு கையளிப்புக்கு வந்திருந்தார். பக்.24

# ஜனாதிபதி வருகையை மக்கள் புறக்கணிப்பு

### சர்வதேசத்தை ஏமாற்றும் நாடகத்தில் பங்கெடுக்கப் போவதில்லை எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
ஜனாதிபதி, பிரதமர் கலந்து கொள்ளும் மீள்குடியமர்வு ஆரம்ப நிகழ்வில் கலந்து கொள்ளப் போவதில்லை என அருட்தந்தையர்களும், பொதுமக்களும் தெரிவித்தனர். சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதற்காகச் செய்யப்படும் அந்த நாடகத்தில் தாம் பங்கெடுக்கப் போவதில்லை என்றும் அவர்கள் கூறினார்கள்.
வயாவிளான் கிழக்கு மீள்குடியமர்வுக்காக அனுமதிக்கப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து அவர்கள் தமது சொந்தக் காணிகளைக் காணும் ஆவலுடன் நேற்றுச் சென்றிருந்தனர். ஆனால் அதற்கு இராணுவம் அனுமதி வழங்கவில்லை. தோலகட்டிப் பிரதேசத்தில் அமைந்துள்ள அருட்தந்தையர்கள் மடத்துக்கு அண்மித்த பிரதேசத்துக்கும் இராணுவத்தினர் விடவில்லை.
இந்தநிலையில், நாளை மறுதினம் திங்கட்கிழமை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, முன்னாள் பக்.23



## ஏமாற்றம்

### ஆசையுடன் சென்ற வசாவிளான் கிழக்கு மக்கள் கண்ணீருடன் திரும்பினர்

யாழ்ப்பாணம், மார்ச் 21
உயர் பாதுகாப்பு வலயத்துள் அமைந்துள்ள வசாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு, மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டு, அழைக்கப்பட்ட மக்கள் நேற்று ஏமாற்றப்பட்டனர். அதனால் ஆத்திரமடைந்த அவர்கள் இராணுவத்தினருடனும், அரச அதிகாரிகளுடனும் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். 25 வருடங்களின் பின்னர் சொந்தக் காணிகளில் கால் வைக்கலாம் என்ற ஆசையுடன் வந்த மக்களை, இராணுவத்தினரும் அரசும் சேர்ந்து நேற்று ஏமாற்றித் திருப்பி அனுப்பியது.
வலி.வடக்கில் ஆயிரத்து நூறு ஏக்கர் விடுவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. அதற்கமைய கடந்த வெள்ளிக்கிழமை, வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வளலாய் கிராம சேவையாளர் பக்.24

## உங்களில் ஒருவராக 4,000 காசநோயாளர்

### மருத்துவர் சுதத் சமரவீர கூறுகின்றார்

யாழ்ப்பாணம், மார்ச் 21
"உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவிப்பின்படி சுமார் 4 ஆயிரம் பேர் காச நோயுடன் சிகிச்சை பெறாது எமது மக்கள் மத்தியில் வாழ்கின்றனர். அவர்கள் காச நோய்க் காரணியைப் பரப்புவதில் முக்கிய பங்காற்றுகின்றனர். அவர்களுக்குச் சிகிச்சையளிப்பது மிகவும் அவசியமானது." – இவ்வாறு சுகாதாரம் மற்றும் மருத்துவ அமைச்சின் காசநோய் ஒழிப்புக்கான தேசிய வேலைத் திட்டப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.
"இலங்கையில் காச நோயை ஒழிக்கவென உலகளாவிய நிதியம் 9 மில்லியன் அமெரிக்க டொலர் வழங்கியுள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு பக்.24

## ஆபத்தை ஏற்படுத்தும் மாசுக்கள் நீரில் இல்லை

### வடமாகாண சபை நிபுணர் குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
சுன்னாகம் பிரதேச நிலத்தடி நீரில் மனிதருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய நஞ்சு மாசுகள், எண்ணெய், கிறீஸ் போன்றவை இல்லை என்பது ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது என்று நிலத்தடி நீரில் கழிவுஎண்ணெய் தொடர்பாக ஆராய்வதற்காக வடக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட நிபுணர்குழு கூறுகின்து.
சுன்னாகம் மின் நிலையத்தைச் சூழ ஒரு கிலோமீற்றர் சுற்றுவட்டத்துக்குள் மேற் கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இந்த முடிவு பக்.24

## வயாவிளான் கிழக்கில் புதிய பாதுகாப்பு வேலி

### மக்கள் கண்முன்பாக இராணுவத்தினர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 21
இடம்பெயர்ந்த மக்கள் அவர்களது சொந்த நிலங்களிலேயே குடியமர்த்தப்படுவார்கள் என்று அரசு தெரிவித்து வரும் நிலையில், வசாவிளான் கிழக்கு மற்றும் பலாலி தெற்குப் பிரதேசங்களில், மக்களின் கண்முன்பாகவே இராணுவத்தினர் புதிய நிரந்தரப் பாதுகாப்பு வேலிகளை அமைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.
வசாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட காணிகள் பொதுமக்களிடம் விடுவிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கு அமைய, மக்கள் நேற்று குறித்த பகுதிக்குச் பக்.24

## வயாவிளானில் இராணுவம் மும்முரமாக விவசாயம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
வசாவிளான் கிழக்கில் மக்களை அனுமதிக்காத, உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் இராணுவத்தினரால் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தாம் விவசாயம் செய்து வருவதன் காரணமாகவே குறித்த பகுதிகளை மக்களிடம் கையளிக்கவில்லை – இவ்வாறு வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.
வலி.வடக்கு உயர் பாதுகாப்புவலயத்திலுள்ள வசாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு (ஜே/244) மக்கள் பாவனைக்கு நேற்று முதல் அனுமதிக்கப்படுவதாகக் கூறப்பட்டிருந்தது. ஆனாலும் வல்லை – அராலி பிரதான வீதியைத் திறந்துவிட்ட இராணுவத்தினர், வீதியின் இரு மருங்கிலும் உள்ள பொதுமக்களின் காணிகளுக்குள் செல்ல அனுமதிக்கவில்லை.
வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் ஆரம்பிக்கும் ஒட்டகப்புலம் பகுதியில் பக்.23

## விபூசிகா தாயுடன் இணைவது தாமதம்

### பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவின் அறிக்கை கோருகின்றது

யாழ்ப்பாணம், மார்ச் 21
சிறுமி விபூசிகா அவரது தாயுடன் இணைவதற்கு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் அறிக்கையைக் கோரியுள்ளது.
சிறுவர் நன்னடத்தை திணைக்களத்தின் பாதுகாப்பில் உள்ள விபூசிகாவை பக்.24

## பொறுப்பற்ற சாரத்தியம்: 10 வயதுச் சிறுவன் காவு

யாழ்ப்பாணம், மார்ச் 21
போக்குவரத்து விதிமுறையை மீறி, பொறுப்பற்று மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றதால் வீதியோரம் நின்றிருந்த 10 வயதுச் சிறுவன் ஒருவன் தூக்கி வீசப்பட்டு சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளான். இது தொடர்பில் உரிய விசாரணைகளை மேற்கொள்ளாது பொலிஸார் பின்னடித்துள்ளனர் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.
பூநகரி கிராயில் கடந்த திங்கட்கிழமை காலை இந்த பக்.24

## குடிதண்ணீரில் நஞ்சு: கண்டித்து நேற்று பேரணி



வலி.வடக்கு, மார்ச் 21
ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் குடிதண்ணீர் தாங்கியில் நஞ்சு கலக்கப்பட்டமையைக் கண்டித்தும், குற்றவாளிகளைக் கைது செய்யக் கோரியும் கண்டனப் பேரணி ஒன்று நேற்று நடத்தப்பட்டது. பக்.23

## கசிப்பு விற்றோருக்கு அபராதம்

கசிப்பு வைத்திருந்தமை, விற்றமை, அரச சீல் சாராயம் வைத்திருந்தமை போன்ற குற்றங்களுக்காக பளை, கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒரு பெண், ஒரு சிறுவன் மற்றும் ஒரு நபருக்கு நேற்று தலா 40 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து இருபது ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்று.

750, 450மில்லி லீற்றர் கசிப்பை தனது உடைமையில் வைத்திருந்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு கிளிநொச்சி, பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒரு பெண், ஒரு சிறுவன் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர்.

வழக்கை விசாரணைசெய்த கிளிநொச்சி மாவட்ட நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள், குற்றத்தை ஒப்பு கொண்டதன் காரணமாக தலா 40 ஆயிரம் ரூபா தண்டப் பணத்துடன் சிறுவனை 65ஆயிரம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறும் மற்றைய பெண்ணுக்கு தண்டப்பணம் கட்டத்தவறின்4மாதசாதாரணசிறைத்தண்டனையும் வழங்கி உத்தர விட்டார்.

அது போன்று அரச சீல் சாராயத்தை அனுமதி இன்றி விற்பனை செய்தார் என்ற குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு நேற்று கிளிநொச்சி மாவட் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேக நபர் ஒருவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், கட்டத்தவறின் ஆறு மாத சிறைதண்டனையும் வழங்கி மாவட்ட நீதிவான் எம்.ஐ. வகாப்தீன் உத்தரவிட்டார் (ற–21)

## குழந்தைகளை ஆயுதமாக்குவது ஏற்றுக்கொள்ள முடியாதது

### யாழ்.இந்துமத குருமார்கள் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

ஏழாலை மயிலங்காடு ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் குடிதண்ணீரில் நஞ்சு கலக்கப்பட்ட சம்பவத்துக்கு யாழ்.இந்துமத குருமார்கள் ஒன்றியத்தின் தலைவர் சபா.வாசுதேவக்குருக்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர்களது பெருமைகளை உலகத்துக்கு எடுத்தியம்பும் சமய, சமூக, அரசியல் தலைவர்களை எல்லாம் இந்தச் சம்பவம் தலைகுனிய வைத்துள்ளது. பத்திரிகைகள் மற்றும் ஊடகங்களிலும் இவ்வாறான சம்பவங்கள் வேறு பல நாடுகளில் நடைபெற்றுள்ளதை அறிந்திருக்கின்றோம், ஆனால் யாழ்ப்பாணத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது என்பதை எவராலும் ஏற்க முடியாதுள்ளது.''– என்று அவர் தெரிவித்துள்ளார்.

“போரின் மன அழுத்தத்தில் சோர்வுற்றிருக்கும் மக்களுக்கு பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் குடிதண்ணீரில் நஞ்சு கலந்த சம்பவம் மிக மிக வேதனையளித் துள்ளது. சின்னஞ்சிறு குழந்தைகளை தமது அபிலாஷைக்காக தமது ஆயுதங்களாகப் பயன்படுத்தியிருப்பது விலங்குணர்வை வெளிப்படுத்துவதாக உள்ளது. இந்தச் சம்பவத் துடன் தொடர்புடையவர்கள் உடன் கைது செய்யப்பட வேண்டும் இவர் களுக்கான தண்டனை பாரபட் சமின்றி வழங்கப்படவேண்டும்.” –என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற–14)

## நியமனம் கோரி கவனவீர்ப்பு

### கிராமிய சுகாதார தொண்டர்கள் நேற்று நடத்தினர்



கிராமிய சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியவர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி பண்ணையிலுள்ள சுகாதார அமைச்சு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன்னர் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியதாகவும் பின்னர் அதிகாரிகள் கூறியதன்படி தாம் பணிக்குச் செல்வதில்லை என்றும் தெரிவித்த அவர்கள், ஆனால் முன்னர் தம்முடன் வேலை செய்தவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது, தமக்கு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனிடம் தொடர்பு கொண்டபோது,

“180 நாள்கள் தொடர்ச்சியாக வேலை செய்தவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. குறித்த 13 பேரும் முன்னர் வேலை செய்த போதும் 2012 ஆம் ஆண்டுக்கு முன்னரே அவர்கள் பணியிலிருந்து திட்டம் முடிவுறுத்தப்பட்டதனால் நிறுத்தப்பட்டிருந் தனர். அவர்கள் 2 வருடங்களுக்கு மேலாக பணியாற்றவில்லை. அதனால் சுற்றறிக்கை அமைய அவர்களுக்கு நியமனம் வழங்கு வதில் தடை உள்ளது. எனினும் அவர்களது நியமனம் தொடர்பில் உரிய தரப்பினருடன் கதைத்து இயன்றளவு நடவடிக்கை எடுக்கப் படும்.”– என்று தெரிவித்தார். (ற)

## மன்னார் நகர சபை மண்டபத்துக்கு தனி வாயில்

மன்னார், மார்ச் 21

மன்னார் நகர சபை மண்டபத்தை அழகு படுத்தும் வகையில் மன்னார் நகர மண்டபத்திற்கு செல்ல தனி நுழைவாயில் மன்னார் நகர சபையால் அமைக்கப்பட்டு நேற்றுக் காலை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.



குறித்த நுழைவாயிலை மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், நகர சபையின் செயலாளர் லேனாட் லெம்பேட், நகர சபை உறுப்பினர்களான இரட்ண சிங்கம் குமரேஸ், பிரிந்தாவன நாதன் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

குறித்த நுழைவாயில் மன்னார் நகர சபையின் செயலாளர் லேனாட் லெம்பேட்டின் முயற்சியால் அமைக்கப்பட்டு அழகு படுத்தப்பட்டுள்ளதாக மன்னார் நகர சபை உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் தெரிவித்தார். (ற–56)

## கஞ்சாவுடன் ஒருவர் யாழ்.நகரில் கைது

யாழ்ப்பாணம்,மார்ச் 21

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாணம் திருநகரைச் சேர்ந்த நபர் ஒருவரை கஸ்தூரியார் வீதிப் பகுதியில் வைத்து பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்தனர்.

நேற்று இவரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்திய வேளை எதிர்வரும் இரண்டாம் திகதி வரை சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் பெசிவகுமார் உத்தரவிட்டார். (ற–103)

## கரைச்சிப் பிரதேச சபை நூலகம் நேற்றுத் திறப்பு

### வடக்கு முதலமைச்சர் திறந்துவைத்தார்



யாழ்ப்பாணம், மார்ச் 21

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் நூலக திறப்பு விழா நேற்று கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் அருகாமையில் நடைபெற்றது. நூலகத்தை வடக்கு முதல்வர் க.வி.விக்னேஸ்வரன் திறந்து வைத்தார்.

போரின் பின்னர் கிளிநொச்சியில் நூலகம் ஒன்று இல்லை. அதனால் நூலகம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற அனைவருடைய வேண்டுகோள்களை அடுத்து கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை முன்னர் கிளிநொச்சி பால்பண்ணை இருந்த கட்டடத்தொகு தியை அதிகாரிகள் மூலம் பெற்றுக்கொண்டு தற்போது அதை மீள் உருவாக்கம் செய்து நூலகமாக மாற்றியுள்ளது.

திறப்பு விழாவின்போது கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக உள்ள புகையிரத வீதியில் இருந்து விருந்தினர்கள் அனைவரும் மங்கல இசை, மாலை மணிகலன்களுடன் அழைத்து வரப்பட்டனர். நூலக கட்டடத்தொகுதியின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள தமிழ்தாய்க்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. பிரதேச சபையின் நூலகத்துக்கான பெயர்ப் பலகை திரை நீக்கம் செய்யப் பட்டு அதன் பின்னர் நூலகம் சம்பிர தாய பூர்வமாக மலர் மாலையை கழற்றி வடக்கு முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன், மாகாண சபை உறுப்பினர் களான பசுபதிப் பிள்ளை, அரியரட்ணம், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சத்தியசீலன், திட்டமிடல் பணிப்பாளர் கேதீஸ்வரன், கரைச்சி பிரதேச சபை செயலாளர், தவிசாளர், உறுப்பினர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற–21)

## நியமனங்களில் புறக்கணிப்பு என்று மன்னார் சுகாதார தொண்டர் கவலை

மன்னார், மார்ச் 21

வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுவரும் நிலையில் மன்னார் மாவட்டத்தில் வைத்திய சாலை மற்றும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைகளில் பல வருடங்களாக ஊதியம் எதுவும் அற்ற நிலையில் கடமையாற்றி வந்த சுகாதார தொண்டர்கள் பலருக்கு நியமனக்கடிதம் வழங்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுவதுடன், புதிதாக பலருக்கு நியமனக்கடிதங்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட சுகாதார தொண்டர்கள் நேற்றுக் காலை மன்னார் நகர சபையில் வைத்து தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சுகாகார அமைச்சர் சத்தியலிங்கம், வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் எஸ்.சிறாய்வா ஆகியோரை சந்தித்து தமது பிரச்சினைகளைத் தெரிவித்தனர்.

“மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றுகின்ற சுகாதார தொண்டர்களுக்கு நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை வவுனியாவில் இடம் பெறவுள்ளது. மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் தள வைத்தியசாலைகள், சுகாதார சேவைகள் பணிமனைகளில் சுமார் 4 வருடங்கள் முதல் 15 வருடங்களுக்கு மேலாக சிறிய ஊதியத்துடன் பணியாற்றி வந்த ஊழியர்களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்குவதாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இறுதியில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு நியமனக்கடிதம் வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலை காணப்படுகின்றது.''– என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

“சுமார் 4 முதல் 15 வருடங்கள் வரை சிறிய ஊதியத்துடன் கடமையாற்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்த தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என தெரிவித்தமைக்கு அமைவாக பல வருடங்களாக சம்பளம் இன்றிக் கடமையாற்றி வந்தோம். இறுதியில் எமது விவரங்கள் எவையும் அங்கு இல்லை. எமக்கு நிரந்தர கடிதம் வழங்கப்படமாட்டாது எனதெரிய வந்துள்ளது.”– என்றும் அவர்கள் கூறினர்.

பல வருடங்களாக சம்பளம் இன்றி கடமையாற்றிய தமக்கு நிரந்தர நியமனத்தை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் கோரிக்கை விடுக்கனர். (ற–56)

BUSINESS MANAGEMENT | 0777 692318
CAMPUS
JAFFNA




13 லட்சங்கள்
WOW !
கூப்பன்களை இன்றே நிரப்பி அனுப்புங்கள் பணத்தை அள்ளுங்கள்

கிரிக்கெட் கொண்டாட்டம்
2015 | மார்ச் 21 | சனிக்கிழமை

# அரையிறுதிக்குள் ஆஸி



## பெருகும் வாழ்த்துக்கள்

நடப்பு உலகக்கிண்ண தொடரின் காலிறுதி யாட்டத்தில் இந்தியா பங்களாதேஷை புரட்டி யெடுத்து அரையிறுதிக்கு தகுதிபெற்றது. இந்தியாவின் காலிறுதி வெற்றியைத் தொடர்ந்து பிரதமர் நரேந்திர மோடி, குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி மற்றும் பல்வேறு தலைவர் கள் இந்திய அணிக்கு வாழ்த்து தெரிவித் துள்ளனர்.

மோடி, – 'இது சிறந்த விளையாட்டு, சிறப் பான ஆட்டம்...!! மீண்டும் ஒரு முறை இந் திய அணிக்கு வாழ்த்துக்கள்.' என்று குறிப் பிட்டுள்ளார்.

**பிரணாப் முகர்ஜி–**' இந்திய அணியின் வெற்றி கள் தொடர வேண்டும். இந்திய அணி யின் விளையாட்டுத் திறனும் பங்களா தேஷ் அணியின் போராட்ட திறனும் பாராட்டும்படி இருந்தது' என்று குறிப்பிட்டுள்ளார். இவர்களை விட பல அரசியல் தலைவர்களிட மிருந்தும் இந்திய அணிக்கு வாழ்த் துக்கள் குவிந்து வருகின்றன. (ரி)

## பாசல் செய்தது பாகிஸ்தானை

பாகிஸ்தானின் தவறான களத்தடுப்புக்களும் ஹசில்வூட் டின் வேகமும் சிமித், வட்சனின் அரைச்சதங்களும் கை கொடுக்க பாகிஸ்தானை பாசல் செய்து அரையிறுதிக்கு தகுதிபெற்றது ஆஸ்திரேலியா.

காலிறுதி, விலகல் முறையிலான ஆட்டம். துடுப்பாட் டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என்று முழுவதிலும் அசைக்க முடியாத பலத்தில் ஆஸ்திரேலியா. சமீப காலமாக துடுப்பாட்டம் களத்தடுப்பு என்று இரண்டிலும் சொதப்பிவரும் நிலையில் பந்துவீச்சு பலமொன்றே அணிக்கு ஆறுதல்கொடுக்க எப்படியாவது ஆஸியை அசைத்துப்பார்ப்போம் என்ற எண்ணத்தில் களமிறங் கியது பாகிஸ்தான்.

நாணயச்சுழற்சியில் வெற்றி ஆனால் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார் மிஷ்பா. பந்துவீச்சுக்கு பழக்கமான ஆடு களத்தில் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது மிஷ்பா செய்த முதல் தவறு. சொந்த மண், பழக்கப்பட்ட ஆடுகளம், அதிகப்படியான ரசிகர்கள் இவை அனைத்தும் ஒன்றிணைந்து பலத்திற்கு மேல் பலம்சேர்க்க களத்தடுப்பில் ஆஸ்திரே லியா. களத்தில் செசாட் மற்றும் அகமட். இணைப்பாட் டத்தை பிரிந்தார் அகமட். பிரித்து வைத்தார் ஸ்ரார்க். சிறிது நேரத்தில் சொசாட்டை பத்திரமாக பவிலியனை நோக்கி வழி காட்டினார் ஹசில்வூட். பாகிஸ்தான் 24–2. களத்தில் சொகைல் மற்றும் பாகிஸ்தானின் தடுப்புச்சுவர் மிஷ்பா. மெல்ல மெல்ல அணியை ஆஸ்திரேலியாவின் பிடியில் இருந்து வெளியே கொண்டவர முனைப்புக்காட்டினார்கள். சிறிது வெற்றியும் கண்டனர். ஆனால் மிஷ்பா விடைபெற வேண்டியவர். விதி அவர் பக்கம் சார்பாக இருந்ததால் தப்பித்துக்கொண்டார். ஸ்ரார்க் வீசிய பந்தை பின்பக்கமாக தட்டிவிட திட்டமிட்டு அதனை அமுலாக்கம் செய்வதில் தோற்றார். பந்து விக்கட்டை தட்டிச்சென்றது ஆனால் 'பெயில்ஸ்' விழவில்லை. விதியின் விளையாட்டால் மிஷ்பா தப்ப முடிந்தது ஆனால் நிலைக்க முடியவில்லை. சில பந்துப் பரிமாற்றங்களிலேயே மக்ஸ்வெல்லின் சுழலில் சிக்கினார். தகர்க்கப்பட்டது

பக்கம் 04

## தீவுகள் விடைபெறுமா? வரலாறு மாறுமா?




நடப்பு உலகக்கிண்ண தொடரின் நான்காவது மற்றும் கடை சிக் காலிறுதியாட்டம் நியூஸிலாந்தில் இன்று நடைபெறுகின்றது. கடந்த இரண்டு உலகக்கிண்ண தொடர்களிலும் தொடர்ச்சியாக அரையிறுதிக்கு தகுதிபெற்ற நியூஸிலாந்து அணி தற்போது சொந்த நாட்டில் நடைபெறும் தொடரில் மிகவும் வலுவாக உள்ளது. சொந்த மண், பழக்கப்பட்ட ஆடுகளம், அதிகப்படியான ரசிகர்கள் ஆதரவு என அனைத்திலும் புத்துணர்ச்சியுடன் இருக்கும் நியூஸிலாந்து நடப்பு உலகக்கிண்ண தொடரிலும் காலிறுதியில் வென்று அரையி றுதிக்கு தகுதிபெறும் முனைப்

பக்கம் 04



## விதி வழிவிட்டது



நேற்றைய காலிறு ஆட்டத்தில் மிஷ்பா துடுப்பெடுத் தாடிய பொழுது பந்து விக்கட்டில் தட்டிச் சென்றா லும் விக்கட்டின் மேலே வைக்கப்பட்டிருந்த 'பெயில்ஸ்' விழாத காரணத்தினால் அதிஷ்ட வசமாகத்தப் பினார்.

நடப்பு உலகக்கிண்ண தொடரின் மூன்றாவது காலி றுதியில் நேற்றையதினம் ஆஸ்திரேலியாமற்றும் பாகிஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. உல கக்கிண்ண தொடருடன் ஓய்வைப் பெறுவதாக அறிவித்துள்ள மிஷ்பா நேற்றைய ஆட்டத்தின் போது தனது இடுப்பளவுக்கு உயர்ந்து வந்த பந்தை பின்பக்கமாக தட்டிவிடும் நோக்கத்தில் பந்தை திருப்ப முற்பட்டார். ஆனால் பந்து முழுவதுமாக மட்டையில் படாமல் இலேசாக தட்டிச் சென்று விக்கட்டையும் உராஞ்சிச் சென்றது. பந்து விக் கட்டை உராஞ்சிய பொழுது விக்கட்டில் பொருத் தப்பட்டுள்ள தானியங்கி மின்குமிழ்கள் ஒருமுறை ஒளிர்ந்துவிட்டு நின்றன. ஆனால் விக்கட்டின் மேலே வைக்கப்பட்டிருக்கும் 'பெயில்ஸ்' விழவில்லை. இதனால் மிஷ்பா ஆட்டமிழக்கவில்லை என அறி விக்கப்பட்டது. சங்கா

பக்கம் 04

## அரையிறுதியில் அனல் பறக்கும்

ஆஸ்திரேலியாவில் இருந்தபடி இந்தியாவின் காலிறுதி வெற்றியைக் கொண்டாடிக் கொண் டிருக்கும் முன்னாள் அணித்தலைவர் கங்குலி, அரையிறுதியில் இந்தியா –பாகிஸ்தான் மோதலை விட இந்தியா–ஆஸ்திரேலியா மோதலே சிறப் பாக இருக்கும் இதனால் இந்தியா ஆஸ்தி ரேலியா மோதல் அனல் பறக்கும் என்று கருத்து தெரிவித்துள்ளார்.

காலிறுதிக்கு ஆஸ்திரேலியா தகுதிபெற்ற பின் னர் பத்திரிக்கையாளர்களைச் சந்தித்த கங்குலி, 'அரையிறுதியில் இந்தியா–ஆஸ்திரேலியா மோதல்

பக்கம் 04

## பலிக்கடாவாகியதா பங்களாதேஷ் வெடித்தது கலவரம்

நடப்பு உலகக்கிண்ண தொடரின் மூன்றா வது காலிறுதி ஆட்டத்தில் பங்களாதேஷ் இந்தியாவிடம் படுதோல்வியடைந்தது. இந்த ஆட்டத்தில் இந்தியாவுக்கு சாதக மாக நடந்து கொண்டதாக தெரிவித்து பாகிஸ்தான் நடுவர் அலீம் தாரின் உருவ பொம்மையை பங்காளதேச ரசிகர்கள் எரித்தனர்.

இந்திய வீரர் ரோகித் சர்மா 90 ஓட்டங் களில் ஆடிக்கொண்டிருந்த போது, ஹொசைன் ஆடுகளத்தில் வீழ்த்தாமல் முழுதாக வீசிய பந்தில் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார் ரொகிட். ஆனால் அந்த

பக்கம் 04

## 900 கோடிகள் சிக்குமா வலையமைப்பு

உலகக்கிண்ண தொடரினை மையமாக வைத்து நடத்தப்பட்ட சூதாட்டத்தில் இதுவரை இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட 900கோடி கைமாற்றப்பட் டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

குஜராத் மாநிலத்தின் புறநகர் பகுதிகளில், உல கக்கிண்ண தொடரினை மையமாக வைத்து கோடிக்கணக்கில் சூதாட்டம் நடப்பதாக எழுந்த புகாரை தொடர்ந்து அங்குள்ள பண்ணை வீடு களில் நடத்திய

பக்கம் 04

## தீர்ந்தது பிடியெடுப்புச் சர்ச்சை




பங்களாதேஷுடனான காலிறுதியில் தவானின் பிடியெடுப்பு தவறு என பலரும் விவாதித்த நிலையில் ஐ.சி.சி. பிடியெடுப்பு சரி என புதிய கோணத்தில் படத்தினை வெளியிட்டுள்ளது.

# தீவுகள் விடைபெறுமா வரலாறு மாறுமா

புடனேயே இருக்கும்.
நியூஸிலாந்தினைப் பொறுத்த மட்டில் துடுப்பாட்டத்தில் நிதானம் என்றால் என்ன என்று கேட்கும் அளவுக்கு அதிரடி காட்டிக்கொண்டிருக்கும் மக்கலத்தின் வேட்டை இன்றும் தொடரும் பட்சத்தில் மே.இ.தீவுகள் நிலை பரிதாபமே. மக்கலம், குப்தில், வில்லியம்சன், ரெயிலர், எலியாட், அண்டர்சன் ரோஞ்சி, விக்டோரி என்று அச்சுறுத்தலான துடுப்பாட்ட வரிசையை அடுக்கி வைத்துள்ளது நியூஸிலாந்து. நியூஸிலாந்தின் பந்துவீச்சும் அணிக்கு பலத்திற்குமேல் பலம் சேர்க்கும் விதத்தில் அமைந்துள்ளது. அண்டர்சன், விக்டோரி பந்துவீச்சிலும் தவிர்க்க முடியாத ஆதிக்கம் செலுத்துவார்கள். இவர்களைவிட போல்ட், மில்னி, சௌத்தி போன்ற வேகங்களின் அச்சுறுத்தலும் தீவுகளுக்கு பெரியதொரு அச்சுறுத்தலாக இருக்கும்.
மே.தீவுகளைப் பொறுத்த மட்டில் நியூஸிலாந்தை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது சவாலானது. இருப்பினும் கடந்த ஆட்டத்தில் காயம்காரணமாக விலகிய கெயில் மீண்டும் அணிக்குள் வந்தது நியூஸியின் மனதில் ஒரு நெருடலை எந்த நேரமும் ஏற்படுத்திக் கொண்டிருக்கும். துடுப்பாட்டத்தில் சாமுவேல்ஸ் ராம்டின், சிம்மொன்ஸின் ஆதிக்கம் சிறந்த முறையில் அமைந்து பந்து வீச்சும் எழுச்சிகாணும் பட்சத்தில் 1996 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரையிறுதிக்கு தகுதிபெறாத அணி என்ற களங்கத்தை மே.தீவுகளால் துடைத்தெறிய முடியும். (ரி)

## 900 கோடிகள்

அதிரடி சோதனையில் சூதாட்ட தரகர்கள் கிரண்மாலா, டோம் பட்டேல் ஆகியோர் பிடிபட்டனர்.
அவர்களிடம் நடத்தப்பட்ட முதல் கட்ட விசாரணையில் உலகக் கிண்ண தொடரின் ஒவ்வொரு ஆட்டத்தின் போதும் சுமார் ரூ.20 கோடிக்கு (இந்திய மதிப்பில்) சூதாட்டம் நடந்ததாகவும், இதுவரை ரூ.900 கோடி(இந்திய மதிப்பில்) வரை சூதாட்டம் நடந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். இந்த சூதாட்டத்தில் ஹாவாலா கும்பலுக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளது. இது குறித்து அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். (ரி)


## விடைபெற்றார் மிஸ்பா

நடப்பு உலகக் கிண்ணத் தொடருடன் ஓய்வு பெறுவதாக அறிவித்த மிஸ்பா நேற்றைய பாகிஸ்தானின் தோல்வியை அடுத்து முடிவில் மாற்றம் இல்லை என அறிவித்துள்ளார்.
பாகிஸ்தானின் தடுப்புச் சுவர் என்று துடுப்பாட்டத்தில் வர்ணிக்கப்படும் மிஸ்பா நேற்றுடன் ஓய்வினை பெற்றதையடுத்து அப்ரிடி உள்ளிட்ட முன்னணி வீரர்கள், பாகிஸ்தான் ரசிகர்கள், பாகிஸ்தான் ஊடகங்கள் என அனைத்தும் கவலை தெரிவித்துள்ளன.



### அதிகூடிய ஓட்டங்கள்

| | | |
|---|---|---|
| 541 | சங்ககாரா (இலங்கை) | 7 ஆட்டங்கள் |
| 433 | ரெயிலர் (சிம்பாப்வே) | 6 ஆட்டங்கள் |
| 417 | வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா) | 7 ஆட்டங்கள் |
| 395 | டில்சான் (இலங்கை) | 7 ஆட்டங்கள் |
| 367 | தவான் (இந்தியா) | 7 ஆட்டங்கள் |



### அதிகூடிய இலக்குகள்

| | | |
|---|---|---|
| 18 | ஸ்ரார்க் (ஆஸ்திரேலியா) | 6 ஆட்டங்கள் |
| 17 | சமி (இந்தியா) | 6 ஆட்டங்கள் |
| 16 | ரியாஸ் (பாகிஸ்தான்) | 7 ஆட்டங்கள் |
| 15 | போல்ட் (நியுஸிலாந்து) | 6 ஆட்டங்கள் |
| 15 | தஹீர் (தென்னாபிரிக்கா) | 7 ஆட்டங்கள் |

## அரையிறுதியில் அனல் பறக்கும்

உலகக்கிண்ண தொடரில் மிகப் பெரிய ஆட்டமாகவும், தரமான வீரர்களுக்கிடையே நடக்கும் விறுவிறுப்பான ஆட்டமாகவும் இருக்குமென்று தெரிவித்தார். தான் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா ஆட்டத்தை காண ஆவலாக இருப்பதாகவும், தற்பொழுது இந்தியா இருக்கும் திறனில் ஆஸ்திரேலியாவை திணறடித்து வெற்றிபெற்றாலும் வியப்பில்லை' என்றார். (ரி)

## விதி வழிவிட்டது

ஆட்டமிழந்த பின்னர் பொழிந்த மழையை சங்காவின் ஆட்டமிழப்போடு தொடர்புபடுத்தி சங்கா ஆட்டமிழந்ததால்தான் மழை வந்தது என்று இலங்கை ரசிகர்கள் கூறியதைப்போல மிஷ்பா குறைந்த ஓட்டங்களுடன் விடைபெறுவதையும் அவ்வளவு சீக்கிரம் ஓய்வுபெறுவதையும் விரும்பாமல்தான் சற்று கனதியான ஓட்டத்தை பெற மிஷ்பாவுக்கு விதி வழிவிட்டது என்கிறார்கள் பாகிஸ்தான் ரசிகர்கள். (ரி)

## பலிக்கடாவாகியதா பங்களாதேஷ்



பந்து இடுப்பு உயரத்திற்கு மேல் வீசப் பட்டதால் முறையற்ற பந்து என்று நடுவர் உடனடியாக அறிவித்தார். ஆனால், மீள்பரிசீலனையில் அது சரியான பந்து போன்றுதான் தெரிந்தது. இந்த அதிர்ஷ்டத்தின் துணையுடன் உலகக்கிண்ண தொடரில் தனது முதலாவது சதத்தை எட்டினார் ரோகிட். முறையற்ற பந்து என்று அறிவித்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து பங்களாதேஷில் கிரிக்கெட் ரசிகர்கள் போராட்டம் நடத்தி னர்.
டாக்கா பல்கலைக்கழக மாணவர் பேசுகையில் 'நடுவர்கள் ஒருதலைப் பட்சமாக நடந்து கொண்டனர். நாங்கள் நேர்மையான முறையில் தோற்கடிக்கப்படவில்லை. அதனால் கவலையில்லை. இது ஒரு கொள்ளையாகும். நாங்கள் மோசமான முடிவுக்கு எதிராகவே போராடுகிறோம். இவற்றை சர்வதேச கிரிக்கெட் வாரியம் சோதனை செய்ய வேண்டும்' என்று கூறியுள்ளார்.
இதற்கு சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கண்டனம் தெரிவித்ததுடன் நடுவர்கள் நடுநிலையானவர்கள் ஐ.சி.சி. எப்பொழுதும் பக்கம் சாராத ஒன்று என்று [illegible]வித்துள்ளது. இந்தியாவின் மேல் பாகிஷ்தா னுக்கு எந்தளவு கோபம் உள்ளதோ அதேபோல் பாகிஸ்தானின் மீது பங்களாதேஷுக்கு கோபம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

# அரையிறுதிக்குள் ஆஸி

2015 உலகக் கிண்ணம்

ஆஸ்திரேலியா எதிர் பாகிஸ்தான்
6 இலக்குகளால் ஆஸ்திரேலியா வெற்றி

நாணயச் சுழற்சி பாகிஸ்தான்

பாகிஸ்தான்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| செஷாட் | C கிளார்க் B ஹசில் வூட் | 05 | 13 | 0 | 0 |
| அக்மட் | C வற்சன் B ஸ்ரக் | 10 | 16 | 01 | 0 |
| சொகைல் | C ஹடின் B ஜோன்சன் | 41 | 57 | 04 | 0 |
| மிஸ்பா | C பின்ஞ் B மக்ஸ்வெல் | 34 | 59 | 01 | 02 |
| அக்மல் | C பின்ஞ் B மக்ஸ்வெல் | 20 | 25 | 02 | 0 |
| மக்சூட் | C ஜோன்சன் B ஹசில் வூட் | 29 | 44 | 01 | 0 |
| அப்ரிடி | C பின்ஞ் B ஹசில் வூட் | 23 | 15 | 03 | 01 |
| ரியாஸ் | C ஹடின் B ஸ்ரக் | 16 | 22 | 02 | 0 |
| அடில் | C ஸ்ரக் B பல்க்னெர் | 22 | 15 | 01 | 0 |
| ஹரான் | C ஹடின் B ஹசில் வூட் | 05 | 04 | 0 | 0 |
| அலி | ஆட்டமிழப்பில்லை | 06 | 21 | 0 | 0 |
| உதிரிகள் | | | | | 10 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ரக் | 10 | 40 | 02 | 01 |
| ஹசில் வூட் | 10 | 35 | 04 | 01 |
| ஜோன்சன் | 10 | 42 | 01 | 0 |
| மக்ஸ்வெல் | 07 | 43 | 02 | 0 |
| வற்சன் | 05 | 17 | 0 | 0 |
| பல்க்னெர் | 7.5 | 31 | 01 | 0 |

TOTAL 213 (50)

1- 20 (அக்மட்)
2- 24 (செஷாட்)
3- 97 (.......)
4 - 112 (சொகைல்)
5 - 124 (அக்மல்)
6 - 158 (அப்ரிடி)
7 - 188 (மக்சூட்)
8 - 188 (ரியாஸ்)
9 - 195 (ஹரான்)
10 - 213 (அடில்)

ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வோர்ணர் | C அலி B ரியாஸ் | 24 | 23 | 03 | 0 |
| பின்ஞ் | LBW B சொகைல் | 02 | 05 | 0 | 0 |
| சிமித் | LBW B அடில் | 65 | 69 | 07 | 0 |
| கிளார்க் | C மைக்சூட் B ரியாஸ் | 08 | 11 | 0 | 0 |
| வட்சன் | ஆட்டமிழப்பில்லை | 64 | 66 | 07 | 01 |
| மக்ஸ் வெல் | ஆட்டமிழப்பில்லை | 44 | 29 | 05 | 02 |
| உதிரிகள் | | | | | 09 |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| சொகைல் | 7.5 | 57 | 1 | 0 |
| அடில் | 05 | 31 | 1 | 0 |
| அலி | 06 | 37 | 0 | 0 |
| ரியாஸ் | 09 | 54 | 2 | 0 |
| அப்ரிடி | 04 | 30 | 0 | 0 |
| சொகைல் | 02 | 07 | 0 | 0 |

TOTAL 216 (33.5)

1 - 15 (பின்ஞ்)
2 - 49 (வோர்ணர்)
3 - 59 (கிளார்க்)
4 - 148 (சிமித்)

ஆட்ட நாயகன்: ஹசில்வூட்





பாகிஸ்தானின் தடுப்புச்சுவர் சொகைலும் விடைபெற பாகிஸ்தான் மீண்டும் ஆஸியின் அழுத்தத்தில் அல்லோலகல்லோலப்பட்டது. மத்தியவரிசை வீரர்கள் குறிப்பிட்டு சொல்ல முடியாவிட்டாலும் ஆளுக்கொரு 20 ஓட்டங்களை சேர்த்து விட்டுச்சென்றனர். சீரான வேகத்தில் ஹசில்வூட் வழியனுப்பி வைத்துக்கொண்டிருந்தார். இக்கட்டான நேரத்தில் அடித்தாட திட்டமிட்டார் அப்ரிடி. இரண்டு மூன்று பந்துகள் எல்லைக்குச் செல்லத்தான் செய்தது. இருந்தும் எவ்வித பயனும் இல்லை முடிவில் பாகிஸ்தான் 213 ஓட்டங்களில் சுருண்டது. வோர்ணர், பின்ஞ், சிமித், கிளார்க், வட்சன், மக்ஸ்வெல், பல்க்நெர், ஹடின், ஜோன்சன் என்ற பலமான துடுப்பாட்ட வரிசை. துடுப்பாட்ட வரிசை என்பதை விட பெரும்படை என்பது பொருத்தமானதாக இருக்கும். ஆனால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கோ வெறும் 213. ஊதித் தள்ளிவிடும் என்ற பரவலான எதிர்பார்ப்பு பாகிஸ்தானியர்களிடமும் இருக்கவே செய்தது. எதிர்பார்ப்புக்களைப் பொய்யாக்கி 02 ஓட்டங்களுடன் ஏமாற்றமளித்தார் பின்ஞ். ஆஸி 15–1. 1992 ஆம் ஆண்டின் உலகக்கிண்ண தொடர் மீண்டும் ஒருதடவை அனைவரின் மனதிலும் வட்டமிட்டது. அவ்வாறு நடக்காதா என்று பாகிஸ்தான் ரசிகர்கள் ஏங்கினர் நடந்திடுமா என்று ஆஸி ரசிகர்கள் நடுங்கினர். ரியாஸின் வேகம் தலையை நோக்கி எகிறிப்பாய்ந்தது. வேகத்திற்கு ஏற்றால் போல் வெறுப்பேற்றவும் ரியாஸ் தவறவில்லை. வெறுப்பேற்றுவதற்கே பெயர்பெற்ற ஆஸியையே ஆட்டடிப்படைத்தார். ஆட்டங் கண்ட ஆஸியை படிப்படியாக கரைசேரக்கும் பணியில் வோர்ணரும் சிமித்தும். நிலைக்க முடியவில்லை வோர்ணரால். ரியாஸின் எகிறும் பவுன்சரில் விட்டால் போதும் என்று ஓடி ஒளிந்தார் கிளார்க். ஆஸி 59–3. நிரந்தரமாக இணைந்தனர் சிமித்தும் வட்சனும். ஆட்டத்தையும் தம்முடன் இணைக்கத் தவறவில்லை. ஆஸிக்கு சார்பாக முடிவை மாற்ற தீவிரமாக ஈடுபட்டனர். அதற்கு ஏற்றால்போல் பிடிகளும் கோட்டைவிடப்பட்டது. ஆளுக்கொரு அரைச்சதம் கடந்தனர் ஆஸியின் பக்கம் நின்மதிப் பெருமூச்சு. கடைசியாக மக்ஸ்வெல்லின் அதிரடியும் தவறாது தொடர்ந்தது. முடிவில் ஆஸ்திரேலியா 4 இலக்குகளை இழந்து 6 இலக்குகளால் வெற்றியீட்டியது. (ரி)




நேற்றைய ஆஸ்திரேலியாவின் காலிறுதி வெற்றிக்குப் பின்னர் சமூக வலைத்தளத்தில் பதிவான ஒரு நகைச் சுவைப் பதிவு.

# கூகுளாலேயே தேடப்படும் ஆட்டங்கள்





நடப்பு உலகக்கிண்ண தொடரின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா– பங்களாதேஷ் அணிகள் நேற்று முன்தினம் பலப்பரீட்சை செய்தன. இதை சிறப்பிக்கும் வகையில், கூகுள் இணையதளம் தனது முகப்பு பக்கத்தை மாற்றியமைத்திருந்தது.

இதன்படி கூகுளின் முகப்பு பக்கத்தில் வீரர்கள் கிரிக்கெட் விளையாடுவதைப் போலவும், அதன் இடது பக்கத்தில் பங்களாதேஷின் பச்சை – சிவப்பு தேசிய கொடியும், வலது பக்கத்தில் இந்தியாவின் மூவர்ண தேசியக்கொடியும் வரையப்பட்டு அதன் மீது கூகுள் என எழுதப்பட்டிருந்தது. நடப்பு உலகக்கிண்ண தொடரில் இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதிய லீக் ஆட்டத்தின் போதும், கூகுளின் முகப்பு பக்கம் இதேபோல் மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ரி)

# கத்துக்குட்டிகளை கவனிக்க வேண்டும்



உலகக்கிண்ண தொடரின் லீக் சுற்று முடிந்து, விறுவிறுப்பான காலிறுதி சுற்றும் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. அடுத்து 2019ஆம் ஆண்டில் நடக்கவுள்ள உலகக்கிண்ண தொடரில், சுவாரசியத்தை கூட்டும் வகையில், டெஸ்ட் அந்தஸ்து பெற்ற 10 அணிகளை மட்டும் விளையாட வைக்கவும், மற்ற கத்துக்குட்டி அணிகளை கழற்றி விடும் முடிவிலும் ஐசிசி உள்ளது. அதற்கு ஏற்றாற்போல், நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் எந்த கத்துக்குட்டி அணியும் காலிறுதிக்கு முன்னேறவில்லை. இது குறித்து அயர்லாந்து அணியின் முன்னாள் சகலதுறை வீரரான ஜோன்சன் கூறுகையில், 'நடப்பு உலகக்கிண்ண தொடரில் சிறிய அணிகள் விளையாடியதை பார்க்கையில் இரண்டு விடயங்கள் தெளிவாகிறது. முதலாவது, கத்துக்குட்டி அணிகள் துடுப்பாட்டத்தில் முழு உறுப்பினராக உள்ள அணிகளை நெருங்கி வந்து விட்டன. இரண்டாவது, பந்து வீச்சில் தொடர்ந்தும் சிறிய அணிகள் தடுமாற்றத்தை சந்திக்கின்றன. இதுவே அவர்கள் முன்னேற்றம் காண வேண்டிய பகுதியாகும் என்றார். தற்காலிக உறுப்புரிமை கொண்ட இந்தக் கத்துக்குட்டி அணிகள் வெளியேற்றப்பட்டாலும், ஆப்கானிஸ்தானின் சமியுல்லா சென்வாரி, ஐ.அ.இராச்சியத்தின் சைமன் அன்வர், ஸ்கொட்லாந்தின் கோட்சர் மற்றும் டேவி, அயர்லாந்தின் ஜோன் மூனி மற்றும் பல்பிர்னி ஆகிய வீரர்கள் கவனத்தை ஈர்த்துள்ளனர். இவர்கள் எதிரணி வீரர்களுக்கு மிகையான சவால்களை கொடுத்துள்ளனர்.' என்றார்.

(ரி)

## தினம் ஒரு பரிசுப் போட்டி 34

ஒரு நாள் ஆட்டங்களில் முதன் முதல் நான்கு தொடர் சதங்களை விளாசிய வீரர் யார்?

.................................................

பெயர் : .....................................

தே.அ.இல. : .....................................

முகவரி : .....................................

.....................................

தொலைபேசி இல.: .....................................

இந்தக் கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (22.03.2015) மாலை 6 மணிக்கு முன், 'தினமொரு பரிசு', உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலிலோ, உதயன் அலுவலகத்திலோ அல்லது எம்மால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களில் வைக்கப்பட்டுள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கலாம்.

தினமும் 2,500/= இருவருக்கு

கிருபா லேணர்ஸ்
Kiruba Learners
அரச அங்கீகாரம் பெற்ற A தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை
T.P: 021 222 4353
021 4923 200
0777 225 292
இல: 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தின் தொடர் நாயகன் யார்?

.....................

நடப்பு உலகக் கிண்ணத்தின் இறுதி ஆட்டத்தின் ஆட்ட நாயகன் யார்?

.....................

பெயர்: .....................

தே.அ.அ.இல. .....................

முகவரி. .....................

தொலைபேசி .....................

போட்டி முடிவுத் திகதி 26.03.2015

தலா 10,000/= 45 பேருக்கு

தலா 5,000/= 20 பேருக்கு

## BCAS CAMPUS JAFFNA 5 லட்சம் ரூபாவுக்கான பரிசுக் கூப்பன்

### மாபெரும் இறுதிப் பரிசுப் போட்டி

நடப்பு உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

.....................

பெயர்: .....................

தே.அ.அ.இல. .....................

முகவரி. .....................

.....................

தொலைபேசி .....................

போட்டி முடிவுத் திகதி 23.03.2015

1 ஆம் பரிசு 2 1/2 லட்சம் பணப்பரிசு

2 ஆம் பரிசு 1 1/2 லட்சம் பணப்பரிசு

3 ஆம் பரிசு 1 லட்சம் பணப்பரிசு

தலா 5,000/= 10 பேருக்கு

### போட்டி விதிகள்

- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
- தே.அ.அட்டை பெறும் வயதுக்கு குறைந்தவர்கள், பெற்றோரின் தே.அ.அட்டை இலக்கத்தை குறிப்பிட முடியும்.

MJ நியூ மைதிலி ஜுவலர்ஸ்
யாழ் மண்ணில் தன்னிகரில்லாதலைமை நிறுவனம்
தொ.பே: 021 221 7878/ 021 221 7878
E-mail: newmaithily@gmail.com
இல. 38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**லக்கி பான்சி கவுஸ்**
இருபாலைச்சந்தி, கோப்பாய்.
**மொடோன்**
பஸ்நிலையம் வீதி,நெல்லியடி.
**கவிதா**
350ஏ பிரதான வீதி,பருத்தித்துறை.
**கனன் போட்டோ**
165 பிரதான வீதி.பருத்தித்துறை.
**சூரியா பாமசி**
புதிய சந்தை,அச்சுவேலி.
**நகுலன்**
85 பருத்தித்துறை, வீதி நல்லூர்.
**தாட்சாயினி ஸ்ரோர்ஸ்**
3ஆம் சந்தி, கெருடாவில்.
**தர்மலிங்கம்**
கோவில் ஒழுங்கை, உடுப்பிட்டி.
**கலைச்சோலை**
இல 3 நவீன சந்தை, வல்வெட்டித்துறை
**அஞ்சலோ புக் சொப்**
ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறை.
**மாவடி ஸ்ரீ முருகன்**
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.

**தயாளன் ஸ்ரோர்ஸ்**
பலாலி வீதி, கோண்டாவில்.
**சிவசக்தி ஸ்ரோஸ்**
உரும்பிராய் மேற்கு, சிவகுலவீதி,
**சிவன் ஸ்ரோர்ஸ்**
பரமேஸ்வரா சந்தி,திருநெல்வேலி.
**தாஸ் ஸ்ரோர்ஸ்**
திருநெல்வேலி.
**ஓம் கணேசா**
இல1, புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு.
**பேரின்பநாதன்**
103,வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**பூபாலசிங்கம் புத்தகசாலை**
41. வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
**திருநீலகண்டன் ஸ்ரோர்ஸ்**
14. விதானையார் வீதி, சுண்டுக்குளி.


**சுரேஸ் ஸ்ரோர்ஸ்**
இல. 376 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
**அன்ரனீஸ் ஸ்ரோர்ஸ்** 19 புதுமை மாதா கோவில் கிழக்கு.
**சிவானந்தா கபே**
செட்டி தெரு நல்லூர்.
**ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ்**
சித்தங்கேணி வீதி, பண்டத்தரிப்பு.
**புஸ்பநாதன்**
பிரதான வீதி, சங்கானை
**சுசிலா தேவி அச்சகம்**
சித்தங்கேணிச்சந்தி, சித்தங்கேணி
**வானம்பாடி புத்தக நிலையம்**
பிரதான வீதி சுழிபுரம்.
**குலம் ஸ்ரோர்ஸ்**
சந்தையடி மானிப்பாய்.
**துர்க்கா புத்தகசாலை**
பஸ் நிலையம் சுன்னாகம்.

**கிருபா போட்டோ**
கே.கே.எஸ் .வீதி மல்லாகம்.
**பாக்கியா** கொக்குவில்.
**சிறிராம்** கைதடி சந்தி.
**பரம்ஸ்**
நவீன சந்தை சாவகச்சேரி.
**மணியம்**
ஏ–9 வீதி சாவகச்சேரி.
**அருள்நாயகி**
ஏ –9 வீதி கொடிகாமம்.
**கஜானன்**
அல்லாரை வீதி, மீசாலை சந்தி.
**அன்பரசன் புத்தகசாலை**
வித்தியாபுரம் ஒட்டுசுட்டான்.
**உயர்ச்சி புத்தகசாலை**
மல்லாவி.
**கோமதி நெற்கபே**
வெற்றிலைக்கேணி.
**கே.பி.கே.புத்தகசாலை**
24, பஸ் நிலையம் வவுனியா.

**வன்னி பேபி நீட்ஸ்** 55 ஏ மன்னார் வீதி குருமன்காடு வவுனியா.
**சோமசுந்தரம்**
ஏ – 9 வீதி மாங்குளம்.
**மோகன்** பளை.
**நகுலேந்திரன்**
31ஆம் கட்டை முழங்காவில்.
**ஜோதி புக்சொப்**
பெரிய கடை மன்னார்.
**சிவசாந்தி உணவகம்**
தாழ்வுப்பாடு வீதி மன்னார்.
**நிரஞ்சனா** தலைமன்னார்.
**பூநகரி(எம்.பி.சி.எஸ்)** பூநகரி.
**டிலசிகா**
124 கட்சன் வீதி வட்டக்கச்சி.
**மகிழன் களஞ்சியம்** தர்மபுரம்.
**பொதிகை புக்சொப்** 2 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.
**தாயன்பு** உடையார் கட்டு.

**சஜி புக் சொப்** ,
விசுவமடு.
**வரணா புக்சொப்**
755 கனகராசா வீதி திருநகர் கிளிநொச்சி.
**வவிசனா புக் சொப்**
குமரபுரம் பரந்தன்.
**ராஜா தேநீரகம்** உருத்திரபுரம்
**அபி புத்தகசாலை**
பிரதான வீதி முல்லைத்தீவு.
**ஸ்ரீ கருணா மல்ரி சொப்**
வரணி.
**விநாயகர் களஞ்சியம்**
அளவெட்டி.
**சிவலிங்கம் ஸ்ரோர்ஸ்**
வியாபாரி மூலை.
**குகன் ஸ்ரோர்ஸ்,**
நவாலி.
**நாகமுத்து ஸ்ரோர்ஸ்**
காரைநகர்.

பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நெருக்கடியான நிலையில் இருந்தாலும் குடும்பத்தில் மிக நல்ல முன்னேற்றங்கள் ஏற்படும். எந்தப் பிரச்சினையையும் சந்தித்து முறியடிக்கும் வல்லமையைப் பெறலாம்.

**இடபம்:** காரியத்தடைகள் நீங்கி அனுகூலம் பிறக்கும். மதிப்பு மரியாதை சுமாராகவே இருக்கும். வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தின் தேவைகள் பூர்த்தியாகும். புதிய வீடு வாங்க வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** குடும்பத்தில் சிற்சில பிரச்சினைகள் வரத்தான் செய்யும். எனவே ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போகவும். சிலர் தொழில் நிமித்தமாக குடும்பத்தை விட்டு பிரிய நேரிடலாம்.

**கடகம்:** உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு வேலைப் பளு அதிகரிக்கும். உடன் பணிபுரிவோரிடம் அனுசரணையாக நடந்து கொள்ளவும். சிலர் எதிர்பாராத இட மாற்றத்தைச் சந்திக்கலாம்.

**சிங்கம்:** சொந்தத் தொழில் புரிவோர் சிறிது சிரத்தை எடுத்து உழைக்க வேண்டியிருக்கும். கலைத்துறையினருக்கு முயற்சிகளின் பேரில் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

**கன்னி:** பண விஷயம் திருப்திகரமாக இருக்கும். ஆனால் எதிர்பார்த்த பதவி கிடைப்பதில் வாக்குவாதம் ஏற்படலாம். பெண்கள் குடும்ப ஒற்றுமைக்காக விட்டுக் கொடுத்துப் போக வேண்டியிருக்கும்.

**துலாம்:** எந்த வேலையிலும் உங்கள் தனித்தன்மை வெளிப்படும். தடைகளை முறியடித்துக் காரிய வெற்றி பெறலாம். வீடு, நிலம் ஆகியவற்றில் இருந்து வந்த தாமத நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்படும்.

**விருச்சிகம்:** தந்தை, தந்தை வழி உறவினர்கள், பிள்ளைகளுடன் கருத்து மோதல்கள் வரலாம். நண்பர்களிடத்தில் மனக்கிலேசம் ஏற்படலாம். எதிரிகளின் இன்னல்கள் இருக்கும் இடம் தெரியாமல் போகும்.

**தனுசு:** பலவிதமான பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். பின்தங்கிய நிலையிருப்பவர்கள். முன்னேற்றப் பாதையில் செல்வார்கள். நல்ல பணப்புழக்கம் இருக்கும்.

**மகரம்:** எடுத்த காரியம் அனுகூலத்தைக் கொடுக்கும். மதிப்பு மரியாதை சீராக இருக்கும். வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். குடும்பத்தில் தம்பதிகளிடையே இருந்து வந்த பிரச்சினைகள் சுமுகமாக மறையும்.

**கும்பம்:** வீட்டுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் கிடைக்கும். ஒருமுறைக்கு இருமுறை விசாரித்து வாங்குவது நல்லது. நண்பர்கள், உறவினர்கள் அன்னியோன்னியமாக இருப்பர்.

**மீனம்:** உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு உங்களை வந்து சேரும். மேலதிகாரிகளின் அனுசரணை இருந்துவரும்.




# உலகை சுருக்கும் முகநூல்

வங்கிக்குச் சென்று பணப்பரிமாற்றம் செய்தவர்கள், இணைய வங்கிகளில் பணப் பரிமாற்றம் செய்தவர்கள் இனி அங்குமிங்கும் அலையாமல் முகப் புத்தகத்தின் ஊடாகவே பணப் பரிமாற்றம் செய்ய முடியும்.

புதியதொரு அப்ஸை (சேவையை) முகப்புத்தகம் அறிமுகப் படுத்தியுள்ளது. மணிஓடரில் ஆரம்பித்து ஈ–காஷ் வரை வந்துள்ள பணமாற்று முறையை தற்போது முகப் புத்தகத்திலும் பயன்படுத்தமுடியும். முகநூலைப் பயன்படுத்தி பணப்பரிமாற்றம் செய்யும் சேவை, முதல் முதலாக அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்காக முகநூலில், டொலர் குறியீட்டு அடையாளம் இந்தச் சேவையை வழங்கும் அப்ஸ்ஸாக இருக்கும். இதனைத் தேர்வு செய்து வாடிக்கையாளரது டெபிட் கார்ட் அட்டை இலக்கத்தை பதிவு செய்து அவர்களுக்கென்று ஒரு தனிப்பட்ட அடையாள எண்ணை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

இதன் பின்னர் வாடிக்கையாளர்கள் அதில் குறிப்பிடும் பணத்தொகை விரைவில் உரிய நபருக்கு பரிமாற்றம் செய்யப்படும். சிலவேளைகளில் வாடிக்கையாளர்களின் கணக்கைப் பொறுத்து இதற்குச் சற்று காலம் எடுக்கக்கூடும். வாடிக்கையாளர்களின் கணக்கையும் அடையாள எண்ணையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அதற்கென அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புகளையும் அதில் மேற்கொள்ள முடியும்.






# கொஞ்சம் சிரிங்க பாஸ்...



நண்பர் 1 : 24 மணி நேரமும் நான் டிவி பாக்கணும். வருஷம் முழுக்க பாக்கணும், ஒரு நிமிஷம் விடாம பாக்கணும், ஆனா கண் மட்டும் பாதிக்காமல் இருக்கணும்..
நண்பர் 2 : அதுக்கு நீ டிவிய ஓப் பண்ணி தான் பாக்கணும்..
நண்பர் 1 : ?????

கணவன் : எனக்கு பயங்கர ஞாபக மறதி என்று, திட்டுவியே இன்றைக்கு எப்டி மறக்காம சாப்பாட்டு பெட்டியை அலுவலகத்திலிருந்து எடுத்துட்டு வந்தேன் பாரு.
மனைவி : மண்ணாங்கட்டி, இன்றைக்கு நீங்கதான் அலுவலகத்துக்கே போகலியே
கணவன் : ?????

# பிறந்த சிசுவையுமா கடத்துவார்கள் ?

ஜெசன் மத்தேயு பிரிஸ்டல், என்பவர் தடை செய்யப்பட்ட போதைக்கு அடிமையானவர். இவருக்கு பெண் சிசுவொன்று, அவரது வீட்டிலே பிறந்துள்ளது. இந்த நிலையில் சிசுவும் தாயும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். தந்தை போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்பதால் சிசுவும் பாதிப்புடனேயே பிறந்துள்ளது.

இதனால், சிசுவைப் பெற்றோரிடம் ஒப்படைப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகம் மறுத்துள்ளது. சிசுவை வைத்தியசாலையில் இருந்து எப்படியாவது வெளியில் கொண்டுவர வேண்டும் என மேற்படி நபர் எண்ணியுள்ளார். சிசுவைப் போர்வை ஒன்றினால் சுற்றி, பொலித்தீன் பையினுள் இட்டு அதனை வெளியில் கொண்டு வர முயற்சித்துள்ளார்.

எனினும் வைத்தியசாலையின் வாயிலில் பொருத்தப்பட்டிருந்த எச்சரிக்கை அலாரம் ஒலிக்க ஆரம்பித்தவுடன் வைத்தியசாலை அதிகாரிகளிடம் தந்தை, கையும் களவுமாக பிடிபட்டுள்ளார். சிசு பாதிப்புடன் பிறந்ததற்கும்; சிசுவை கடத்த முற்பட்ட காரணத்துக்காகவும் மேற்படி நபருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

# இப்படியொரு நடிகையா?

நடிகை தப்சி கவர்ச்சியாக நடிப்பதற்கு மறுத்து வருவதுடன், நீச்சல் உடையில் நடிக்க மாட்டேன் என்றும் கூறியுள்ளார். முத்தக் காட்சிகளில் நடிக்கவும் உடன்பாடு இல்லை என்று கூறும் தப்சி, அது மாதிரி நடிக்க வற்புறுத்தும் திரைப்படங்களைத் தவிர்ப்பதாக தெரியவருகிறது.

அண்மையில் ஹிந்தி திரைப்படமொன்றில் அவர் நடித்துக் கொண்டு இருந்தபோது வெள்ளைச் சேலை உடுத்தி மழையில் நனைவது போன்ற காட்சியை எடுக்க இயக்குநர் விரும்பியுள்ளார். இதற்காக தப்சியிடம் வெள்ளைச் சேலை கொடுக்கப்பட்டுள்ளது. அந்தச் சேலையை உடுத்திக் கொண்டு நனைந்தால் உடம்பு முழுவதும் தெரிந்து, ஆபாசமாக இருக்கும் என்று கூறி அப்படி நடிக்க தப்சி மறுத்து விட்டாராம்.

இதனையடுத்து சிவப்பு நிற சேலையை கொடுத்தனர். அதை உடுத்திக் கொண்டு மழையில் நனைந்து நடித்துள்ளார். தப்சியின் இந்த கவர்ச்சித் தடையினால் ரசிகர்கள் ஏக்கத்தில் உள்ளனராம்.

# வடக்கு, கிழக்கு தமிழருக்கு அதிகாரம் வழங்க வேண்டும்

## கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. சந்திரநேரு சந்திரகாந்தன் வலியுறுத்து

அம்பாறை, மார்ச் 21

வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் இறைமையின் அடிப்படையில் சுயாட்சி பெற்று, தங்களுடைய வாழ்க்கையை தாங்களே நடத்தக்கூடிய அதிகாரத்தைப் பெற்றவர்களாக மாற்றம் அடைவதற்குரிய வழிவகைகளை தற்போதைய அரசு ஏற்படுத்த வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு சந்திரகாந்தன் தெரி வித்தார்.

காணாமற் போனோர் தொடர்பான விடயங்களை ஆராயும் குழுவினரிடம் முறைப்பாடு செய்வது குறித்த விழிப்புணர்வுக்கூட்டம், திருக்கோவிலுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது உரையாற்றுகை யிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"கடந்த காலத்தில் அம்பாறை மாவட்டத்தில் கடத்தப்பட்ட வர்கள், காணாமற் போனவர்கள் தொடர்பான நிலைமையை அவர்களின் உறவுகள் வெளியிடுவது தொடர்பில் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்கள். இதனால், பாதிக்கப்பட்ட அதிகமான தமிழர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்யாமலும் சம்பவம் தொடர்பான ஆவணங்களை திரட்டாமலும் உள்ளனர்.

காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தரவுள்ளது. எனவே, பாதிக்கப்பட்டவர்கள் உரிய ஆவணங் களைத் தயார் செய்வதுடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருக்கோவிலிலுள்ள காரியாலயத்துக்கு வருகைதந்து அவை தொடர்பான விவரங்களை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள் ளப்படுகின்றனர். அத்துடன், இந்த விடயம் தொடர்பான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுவதாகவும்"– அவர் கூறினார். (வ)

# இந்திய மீனவர் மீதான தாக்குதலை தடுக்க திட்டங்களை தாக்கல் செய்க

## மத்திய அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, மார்ச் 21

இலங்கை கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதைத் தடுக்க என்ன திட்டங்கள் உள்ளன என்பது குறித்த விவ ரங்களை தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு வழக்கறிஞர் ஞானசேகரன் தாக்கல் செய்த மனுவில் இந்திய கடல் எல்லைப் பகுதியில், இலங்கை கடற்படையால் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்படுவதாக தெரிவித்திருந்தார். இந்திய மீனவர்களுக்கு கடல் எல்லைப் பகுதி சரியாகத் தெரியவில்லை என்று கூறியுள்ள மனுதாரர் அவர்களுக்கு தானியங்கி அடையாள நிலையம் கொண்டு வர வேண்டும், ஒவ்வொருவரது படகிலும் ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த மத்திய அரசு, இந்திய–இலங்கை ஒப்பந்தப்படி இலங்கை கடற்பகுதியிலோ, கச்சதீவிலோ இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க அதிகாரம் இல்லை என்று தெரிவித்திருந்தது. மேலும் தானியங்கி நிலையம் அமைப்பது தொடர் பாக குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும், முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டு வரவு உள்ள தாகவும் அதில் குறிப்பிட்டிருந்தது.

இந்தநிலையில் குறித்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல், நீதிபதி சுந்தரேஷ் அடங்கிய அமர்வு, முன்னோடித் திட்டம் குறித்த முழு விவரங்களை மத்திய அரசு தாக்கல் செய்ய உத்தரவிட்டது. மேலும் அதனைச் செய்து முடிப்பதற்குத் தேவையான கால அவகாசம் குறித்து ஜ்ன் 2 ஆம் திகதி இறுதி அறிக்கை தாக்கல் செய்யுமாறும் மத்திய அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (வ)

## கூட்டம்

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியப் பிரிவுச் சங்கத்தின் 14 ஆவது ஆண்டுப்பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சே.இராசவல்லவன் தலைமையில் நடைபெறவுள்ளது. (வ)




சிவபூமி பாடசாலை கோண்டாவில்

11 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் புதிய மண்டபத் திறப்பு விழாவும்

காலம்: இன்று (21.03.2015) சனிக்கிழமை காலை 9.00 மணி

தலைவர்: செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் (தலைவர் - சிவபூமிஅறக்கட்டளை)

பிரதமவிருந்தினர்: வைத்திய நிபுணர் Dr. கனகசபை தேவகாந்தன் தம்பதிகள்

சிறப்பு விருந்தினர்கள்: கந்தையா நீலகண்டன் (தலைவர் - அகில இலங்கை இந்துமாமன்றம்)

P.பாலசிங்கம் (இளைப்பாறிய பிரதம செயலாளர் - கிழக்கு மாகாணம், பணிப்பாளர் - சுவாமி இராமதாஸ் அறக்கட்டளை நிறுவனம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சிவபூமி பாடசாலை, கோண்டாவில்.

நிர்வாக சபை, சிவபூமி அறக்கட்டளை.

தொ.பே. 021 222 7938


## செருக்கல் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேகம்

தென்மராட்சி, மார்ச் 21

சாவகச்சேரி டச்சு வீதி செருக்கல் பிள்ளையார் ஆலய மகா கும் பாபிஷேகம் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை இடம் பெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை இடம்பெறும். பிரதிஸ்டா பிரதமகுரு சிவஸ்ரீ சோ.வாகீஸ்வரக் குருக்கள் தலைமையில் கும்பாபிஷேகக் கிரியைகள் இடம் பெறும். (வ–9)

# தமிழர் கிராமங்களை மீட்க பேதமின்றிச் செயற்படுவோம்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 21

தமிழ்க் கிராமங்கள் பின்னடைந்துள்ளமைக்கு போர் ஒரு காரணமாகக் கூறப்பட்டாலும், போர் முடிவடைந்து தற்போது ஐந்து வருடங்கள் கடந்துள் ளன. இருந்தபோதிலும், ஏன் இன்னமும் தமிழ்க் கிரா மங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்பது ஆச்சரியமாக உள்ளது என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர் மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணப்படும் அபிவிருத்திக் குறைபாடுகளை ஆராயும் கூட்டம், ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில் புதன் கிழமை நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

இத்தகைய பின்னடைவிலிருந்து தமிழ்க் கிராமங்களை மீட்டெடுப்பதற்கு நாம் அனைவரும் தமிழர், முஸ்லிம் என்ற பேதமில்லாது இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இன்னமும் நாம் போரை அல்லது வேறு காரணங்களை கூறிக்கொண்டே இருக்காமல், உடனடியாகச் செயலில் இறங்க வேண்டும். என்னுடைய முதலமைச்சர் பதவிக்காலத்தில் பின்னடைவாகவுள்ள தமிழ்க் கிராமங்களின் அபிவிருத்திக்கு முன்னுரிமை அளிப்பேன் என்பதை கடமைப் பொறுப்போடு கூற விரும்புகின்றேன். இனிமேல் தமிழ், முஸ்லிம் என்று பிரதேசங்களை பிரித்துப் பார்க்காது அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.

> சமூகத்தில் பின் தள்ளப்பட்ட தரப்பினர் யாராக இருந்தாலும், அவர்களது இன, மத பின்னணியை ஆராயாது பாதிக்கப் பட்டவர்களுக்காக குரல் கொடுக்கின்ற உயர்ந்த நாகரிகத்தை நாம் உரு வாக்கி காட்ட வேண்டும்

ஏறாவூர் நகரம் மற்றும் ஏறாவூர்ப் பற்று பிரதேசத் துக்கான வடிகாலமைப்பு முறைக்கான விஞ்ஞான தொழில்நுட்ப முறையில் அமைந்த திட்டம், பாழடைந்துள்ள ஏறாவூர் சந்தையை நவீன வசதிகளுடன் அமைத்தல், ஏறாவூர் நகரத்தில் தனியார் கட்டடத்தில் இயங்கும் பொலிஸ் நிலையத்தை நிரந்தரக் கட்டடத்துக்கு மாற்றுதல், ஏறாவூர் மற்றும் செங்கலடி நகரங்களிலுள்ள பொதுச்சந்தை, ஆறுமுகத்தான் குடியிருப்பு, செங்கலடி நூலகங்களை நவீன மயமாக்குதல், ஏறாவூர் போக்கு வரத்துச் சாலை அபிவிருத்தி உள்ளிட்ட 16 அபிவிருத்தித் திட்டங்கள் நிறை வேற்றப்படவுள்ளன. இதனால், இங்குள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் நன்மை அடைவதுடன், சமூக மீளிணக்கப்பாட்டுக்கும் பெருந் துணை புரியும்.

அதிகாரிகள் தங்களது கடமைகளை தூயமனதுடன் நிறைவேற்றுவார்களாயின் இன, மத, பிரதேச வேறுபாடுகளும் மனக்கசப்புக்களும் தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. ஏழைகள், பாதிக்கப்பட்டவர்கள், சமூகத்தில் பின்தள்ளப் பட்ட தரப்பினர் யாராக இருந் தாலும், அவர்களது இன, மத பின்னணியை ஆராயாது பாதிக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுக்கின்ற உயர்ந்த நாகரிகத்தை நாம் உருவாக்கி காட்டவேண்டும்" என்றார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் சறோஜினிதேவி சார்ள்ஸ், பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இந்திரகுமார் பிரசன்னா, அக்கரைப்பற்று மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவர் எம்.ஹனீபா மதனி உட்படபலர் கலந்து கொண்டனர். (வ)


TEDDSL

Sri Lanka Press Institute

அதியுயர் ஊடக விருதுகள் 2014

சிறந்த ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் 16 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களை அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டுச் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்குக் கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது.
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ.சிரிவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்குத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவா.



இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96, பேர்னார்ட் சொய்சா மாவத்தை, (கிருள வீதி), கொழும்பு - 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 10 ஏப்ரல் 2015 ஆகும்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
19.04.1938

மறைவு
19.02.2015

அமரர் செல்லையா இந்திரசித்து

பண்பினை உமதாக்கி - பொன்
சிரிப்பினை உமதாக்கி - இன்
முகத்தினை வழமையாக்கி - நற்
செயலினை சொந்தமாக்கி நின்ற தந்தையே!
நாள்கள் முப்பது சென்றாலும் ஆறவில்லை
எம் துயரம்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.
(லலிதா ஜுவலறி)


32/1A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி. 17164) (45.7.3)


# சவால்களை முறியடித்து தண்ணீர் தேவையை நிறைவு செய்வோம்

## உலக நீர் தினத்தில் திடசங்கற்பம் பூணுவோம் என்கிறார் அமைச்சர் ஹக்கீம்

கொழும்பு, மார்ச் 21



சுத்தமான குடிதண்ணீரை வழங்குவதில் எதிர்நோக்கும் சவால்களைமுறியடித்து, நாட்டு மக்களின் அன்றாட தண்ணீர்த் தேவையை நிறைவு செய்வதற்கு உலக நீர் தினத்தில் திட சங்கற்பம் பூணுவோம் என்று நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

உலக நீர் தினத்தை முன்னிட்டு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக் கருத்தரங்கு கல்கிஸை மௌண்ட் லவினியா ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

சிறு நீரக நோய்களைக் கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு ஜனாதிபதி விஷேட செயலணி ஒன்றை நியமிக்க முன்வந்தமை மகிழ்ச்சிக்குரிய விடயம். நவீன தொழில் நுட்பங்களைக் கையாண்டு தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் சுத்தமான நீரை பாவனையாளர்களுக்கு விநியோகிப்பதோடு, வழங்கப்படும் தண்ணீரின் தரம் குறையாதிருக்கவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

லபுகம, கலட்டுவாவ போன்ற இயற்கை வளம் மிக்க இடங்களில் அமைந்துள்ள இலங்கையின் பெரிய நீர்த் தேக்கங்கள், கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் வசிக்கும் பாவனையாளர்களின் தண்ணீர்த் தேவையை பெருமளவு நிறைவு செய்கின்றன. ஆனாலும் அவை 19 ஆம் நூற்றாண்டின் தொழில் நுட்பங்களையே கொண்டுள்ளன. அவற்றையும், நாடளாவிய ரீதியில் நீர் வழங்கும் ஏனைய திட்டங்களையும் நவீனமயப்படுத்துவதில் நாம் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றோம்.

இலங்கை மன்னர் காலத்தில் இருந்தே நீர் வளத்தைச் சிறப்பாகப் பயன்படுத்துவதிலும், நீர்ப்பாசனத்திலும் ஏனைய நாடுகளோடு ஒப்பிடும் பொழுது முன்னணியில் திகழ்ந்திருக்கிறது. நகர மயமாக்கல், கைத் தொழில் பேட்டைகளின் அதிகரிப்பு என்பன சூழல் மாசுபடுத்தலை ஏற்படுத்துவது போலவே, சுத்தமான நீரை பெற்றுக் கொள்வதிலும் கூடுதலான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. அத்துடன் கால நிலை மாற்றம் உலகளாவிய ரீதியில் நீர் நிலைகளையும் பாதித்து வருகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை அண்மைக்காலமாக இரசாயனக் கலவைகள், நிலக்கீழ் நீரின் தன்மை போன்ற காரணங்களால் சிறுநீரக நோயா ளர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகரித்து வருகின்றது. நீரைச் சுத்திகரித்து வழங்குவதில் நவீன கருவிகளின் பாவனையை தேசிய நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபை ஊக்குவிக்கின்றது. நாட்டில் வறட்சியும் நீண்ட காலங்களுக்கு நிலவுவதால் சுத்தமான நீரைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கு கின்றனர். இவ்வாறான நிலைமை களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுப்பது தொடர்பில் உலக வங்கி உயரதிகாரிகளோடு பேச்சு நடத்தினோம்' என்று தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில் நாட்டின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட அனைத்துப் பகுதிகளிலிருந்தும் வருகை தந்திருந்த தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர்களும், உயரதிகாரிகளும் பங்குபற்றியிருந்தனர். அத்துடன் அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆராச்சி, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் பொறியியலாளர் கே.ஏ.அன்சார், பொது முகாமையாளர் பி.டபிள்யூ. ஆர் பாலசூரிய, பேராசிரியர் ரஞ்சித் பிரேமலால் டீ சில்வா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ–10)


# 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்
03.04.1994

மறைவு
08.02.2015



கடந்த 08.02.2015
சிவபதமடைந்த எமது
அன்புச் செல்வம்

அமரர் முத்துலிங்கம்
பிரசாந்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளை (22.03.2015) ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் (24.03.2015) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி தென்கிழக்கு, கைதடி.

குடும்பத்தினர்.

(55600)(4.7.3)


# யூ.எஸ்.எயிட்டின் நிதியுதவியுடன் மட்டு.மக்களுக்கு சுத்தமான நீர்

மட்டக்களப்பு, மார்ச் 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுத்தமான நீர்பெற வசதியற்ற சமுதாயங்களுக்கு சுத்தமான நீர் வழங்கும் நிகழ்வை ஐக்கிய அமெரிக்கா ஆரம்பித்துள்ளது. இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

யூ.எஸ்.எயிட்டின் ஐக்கிய அமெரிக்க வெளி நாட்டு இடர் உதவி அலுவலகத்தின் ஊடாக இந்த செயற்றிட்டத்துக்கு நிதி உதவி வழங்கப்படுகின்றது. மட்டக்களப்பில் 2012 – 2014 காலப்பகுதியில் 2 ஆயிரத்து 762 நீர் இணைப் புக்கள் வழங்குவதற்கும், 40 கிணறுகள் மற்றும் 420 மல சல கூடங்கள் அமைப்பதற்கு யூ.எஸ்.எயிட்டால் வழங்கப்பட்ட 63 மில்லியன் ரூபா உதவித் தொகையுடன் இணைந்ததாக இந்த நிதி வழங்கப் படுகின்றது. ஐக்கிய அமெரிக்காவின் சுத்த மான குடிதண்ணீர் திட்டம் தொடர்பில் மட்டக் களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் கூறுகை யில்,

'அதிகளவில் இடருக்கு உள்ளாகும் மாவட்டங்களில் ஒன்றாக மட்டக்களப்பு உள்ளது. இங்கு வாழும் மக்களில் பெரும் பாலானோரின் வாழ்வாதாரம் காலநிலை யில் தங்கியுள்ளது. இதனால் அவர்கள் வறுமை யில் இருந்து மீளமுடியாதவர்களாகவே உள்ளனர். இந்த நிலையில் இடர் மறு சீரமைப்பு மற்றும் அபாயத் தணித்தல் திட்டத் தில் யூ.எஸ்.எயிட்டின் நீண்டகால ஒத்துழைப்பு வரவேற்கத்தக்கது' என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் சர்வதேச அபிவிருத் திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தைச் சேர்ந்த புயி மன் கூறுகையில்,

'இந்தத் திட்டம் மட்டக்களப்பு பகுதியில் கிராமங்களில் நிலவும் வறட்சி மற்றும் வெள்ள இடர் களை எதிர்கொள்ளக்கூடிய திறனை விரிவாக்கும். சுத்தமான நீர் மற்றும் பராமரிப்பு போன்ற வசதிகளை உறுதி செய்வதற்கு உள்ளூர் சமுதாயங்கள் மற்றும் உள்ளூராட்சி அரசுடன் இணைந்து பணியாற்ற எதிர்பார்க் கின்றோம்' என்றார். (வ–10)


# ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
பரமேஸ்வரி
பரிபூரணநாதன்

மலர்ந்தது
16 . 03 . 1943

உதிர்ந்தது
01 . 04 . 2014

சந்தான சங்கரிகள் சரம் சரமாய்த் தந்தவளே
தொத்தான நினைவுகளைக் கோதிக் கோதிப் பார்க்கிறோம்
தழுபத் தோராண்டுகள் நீள் புவியில் நீ வாழ்ந்தாயம்மா
ஒருபத்திர் மாதங்கள் ஆகுதம்மா நிம்மதியை நாம் தொலைத்து
விஜய வருடம் சித்திரை மாதம் பூர்வபக்கத்திதியை தன்னில்
கஜமுகனருளால் இன்னல்கள் மாய்ந்த எங்களம்மா
பங்கஜம் மேனாம் தேவியர் போலே வாழ்ந்தனள் புவியில்
அங்கஜன் போலொரு வீரமாய் வாழ்ந்து மறைந்தனள் எம்மம்மா

இன்று (21.03.2015) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவு தினப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

'பொன்மணிவாசா,'
34, உக்குளாங்குள வீதி, பண்டாரிக்குளம், வவுனியா.
T.P: 077 611 0010

குடும்பத்தினர்.

(56236)(4.3.7)



# கண்ணீர் அஞ்சலி



எமது
நிறுவனத்தின்
பிரபல
வணிகக்கல்வி
ஆசிரியர்
பிரதீபன்
அவர்களின்
அன்புத்தந்தை
பொன்னையா சக்திவடிவேல்
அவர்கள் 18.03.2015
புதன்கிழமை அமரத்துவம்
அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த
கவலை அடைவதோடு
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயக்குநர்,
ஆசிரியர்கள், பணியாளர்கள்,
பொருளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம், இணுவில்.

(சி.17159) (45.3.7)


# வலயக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்பக் கோரிக்கை

வவுனியா வடக்கு கல்வி வலய்த்தில் உள்ள வலயக் கல்விப்பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்புமாறு கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் கடமையாற்றிய வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி பராசக்தி ஓய்வுபெற்ற பின்பு அந்த இடத்துக்கு புதிய வலயக் கல்லிப் பணிப்பாளர் எவரும் நியமிக்கப்படவில்லை. தற்காலிகமாக வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் கடமையாற்றும் திருமதி செ.அன்ரன் சோமராஜா கடமையாற்றுகிறார். இரண்டு கல்வி வலயங்களிலும் ஒருவர் கடமையாற்றுவது அலுவலக நிர்வாகத்தைச் செயற் படுத்துவதற்குக் கடினமானது இது குறித்து அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் புதிய கல்விப்பணிப்பாளர் ஒருவரை நியமிக்குமாறு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ–402)

# தென்மராட்சியில் நடைபெற்ற மாணவருக்கான கண் பரிசோதனை

தென்மராட்சி,மார்ச் 21

தென்மராட்சி கல்வி வலயமும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாணவர்களுக்கான கண் பரிசோதனை முகாமொன்றை நடத்தின.

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 61 பாடசாலைகளைச் சேர்ந்த 578 மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். யாழ்.போதனா மருத்துவமனை கண் சிகிச்சை நிபுணர் மலரவன் கடந்த மாதம் வலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட அனைத்துப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்பொன்றை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் நடத்தியிருந்தார்.

அதன் பிரகாரம் பாடசாலைகளின் ஆசிரியர்களால் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கண் பரிசோதனைகளில் இனங் காணப்பட்ட மாணவர்கள் கண் பரிசோதனை முகாமுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

சொம்ஸ் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட இந்தக் கண் பரிசோதனையில் கொழும்பிலிருந்து கண் பரிசோதனைக் குழுவினர் வருகை தந்திருந்தனர்.

பரிசோதனையில் பார்வையில் குறைபாடு காணப்பட்ட மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி பெறவும். சில மாணவர்கள் மேலதிக பரிசோதனைகளுக்காக யாழ்.போதனா மருத்துவமனை கண் சிகிச்சைப் பிரிவுக்கும் பரிந்துரை செய்யப்பட்டனர். (வ-9)

# குருதிக்கொடை முகாம் இன்று

வவுனியா, மார்ச் 21

வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் மாபெரும் குருதிக்கொடை முகாம் இன்று நடைபெறவுள்ளது.

வவுனியா இரத்த வங்கியில் இரத்தப் பற்றாக்குறையை அடுத்து, தமிழ்தேசிய இளைஞர்கழகத்தால் இன்றுசனிக்கிழமை காலை08.30 மணிமுதல் 12.30 மணிவரை வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் குருதிக்கொடை முகாம் நடத்தப்படவுள்ளது. (வ-402)

# பொத்துவில் நீரோடையில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

அம்பாறை, மார்ச் 21

பொத்துவில் இலுக்குச்சேனை வயல் நீரோடையில் இருந்து நேற்று முன்தினம் வியாழக் கிழமை காலை குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.



மீட்கப்பட்டவர் பொத்துவில் கிராம சேவகர் பிரிவில் வசித்த அபுல்ஹசன் இஸ்மாயில் அப்துல் றஸாக் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை காலை வரம்பு கட்டும் வேலைக்குச் சென்ற மேற்படி குடும்பஸ்தருக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து சக தொழிலாளிகள் அவரை மருத்துவமனைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளனர். அதைஅடுத்து அவர் பொத்துவில் ஆதார மருத்துவமனையை நோக்கி வரும்போது நெஞ்சுவலி அதிகரித்துள்ளது. இதனால் அவர் மயக்கமுற்று வீதியின் அருகில் இருந்த வயல் நீரோடையில் விழுந்துள்ளார். உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தந்தை என்றும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரி விக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த பொத்துவில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சட்டத் தரணி முனாஸின் உத்தரவுக்கு அமைவாக சடலம் பொத்துவில் ஆதார மருத்துவம்னைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பிலான மேலதிக விசா ரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-10)


## அலுவலக உதவியாளர்

யாழ். வணிகர் கழக
அலுவலகத்துக்கு அலுவலக உதவியாளர்
(Peon) தேவை. விண்ணப்பங்களை 27.03.2015
ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல்
வேண்டும். அல்லது நேரடியாகக் கையளிக்கலாம்.
இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். யாழ். வணிகர் கழகம்.
(சி.17163) (45.3.7)

## விற்பனையாகிறது

* 2008 - 2013 வரையான புத்தகங்களைக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் 2014 ஆம் ஆண்டு கடந்த கால வினா விடைப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
* 2014 ஆம் ஆண்டு கடந்தகால வினாவிடைப் புத்தகம் தனித்தும் வழங்கப்படும்.
* 20% விலைக்கழிவு வழங்கப்படும்.
(மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு)

**எமது வெளியீடுகள்:**

கணக்கீடு, பொருளியல், வணிகக்கல்வி, அளவையியலும், விஞ்ஞான முறையும், பொதுசாதாரண பரீட்சை, வணிகப்புள்ளிவிவரவியல், மனைப்பொருளியல், பௌதீகவியல், இரசாயனவியல், வரலாறு (இலங்கை), வரலாறு (ஐரோப்பா), வரலாறு (இந்தியா), சித்திரக்கலை, உயிரியல், அரசறிவியல்.

தொடர்புகளுக்கு:

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, K.K.S.Road.
யாழ்ப்பாணம்.
021 222 2573

லங்கா புத்தகசாலை
F.L.1.14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12.
தொலைநகல்: 011 - 245 9431
தொலைபேசி: 011 - 234 1942
(57864) (45.7.3)

## கட்டாக்காலி கால்நடை பகிரங்க ஏலவிற்பனை

தாவடி கமக்கார அமைப்பினால் 14.03.2015 ஆம் திகதி அன்று பிடிக்கப்பட்ட கட்டாக்காலி கால்நடைகளான 3 பசுக்கள் இதுவரை உரிமை கோரப்படாத காரணத்தினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| தவிட்டு மாவெள்ளை | -5 வயது |
| மாவெள்ளை | -4 வயது |
| கறுப்பு | -2 வயது |

ஏலத் திகதி: 23.03.2015
இடம்: J/194 தாவடி வடக்கு,
கிராம சேவையாளர் அலுவலகம்
நேரம்: மாலை 4 மணி

ஏலத்தில் வெற்றி பெறுபவர் முழுப் பெறுமதியையும் காசாகச் செலுத்தி உடனடியாக கால்நடையை அப்புறப்படுத்துதல் வேண்டும்.
தகவல்: தலைவர்,
கமக்கார அமைப்பு, தாவடி,
T.P:077 902 9491 (57967) (4.3.7)

## Holy Family Convent Jaffna PAST PUPILS ASSOCIATION

**ANNUAL GENERAL MEETING-2015**

All members of the above Association are invited for the Annual General Meeting Which will be held on **22nd of March 2015 at 3.30 p.m** in the school hall. Members are kindly requested to renew their membership during the Meeting. The Past Pupils who wish to join the Association could do So at the beginning of the Meeting. We request the members to contribute generously to the Fund Raising Raffle to be conducted by the Association.

**President,**
**Principal,**
**Holy Family Convent, Jaffna.**
(57946)(4.3.7)



## கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ பொங்கல் விழாவின் போது வியாபாரம் செய்ய விரும்பும் வியாபாரிகளுக்கான அறிவித்தல்

மேற்படி நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் விழா எதிர்வரும் 03.04.2015 வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இது தொடர்பான கடை ஏலம் எதிர்வரும் 22.03.2015 ஞாயிறு நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்பவர்கள் காலை 10.00 மணிக்கு ஆலயத்திற்கு வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

அத்துடன் சைக்கிள், மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் நடத்த விரும்புபவர்களும் அன்றைய தினம் ஆலயத்துக்கு வருகை தரவும்.

குறிப்பு: ஏல விற்பனையில் எவருக்கும் கடன் வழங்கப் படமாட்டாது.

ஆலய பரிபாலன சபையினர், (51386)(4.3.7)
புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயம்.

## நாற்றுக்கள்

நல்லின கத்தரி, மிளகாய் நாற்றுக்கள் அளவெட்டியில் விற்பனைக்குள்ளன.
4 பரப்பு நடுகைக்கு பீற்றூட் நாற்று தேவை.
தொடர்பு: மூர்த்தி 077 860 4493
(57973)(4.3.7)

## கணினி மலிவு விற்பனை

HP Full Set Computer
24750/= மட்டுமே
FREE - NK PHONE (இலவசம்)
HP DELL ASUS 3rd 4th 5th Generation
சகல விதமான LapTop களும் மலிவு விலையில் உண்டு.
ST. ANTONY'S
187, KKS ROAD,
JAFFNA TOWN
021 222 4865
0750698608
(16 ஆவது வருட சேவையில்)

## பணியாளர்கள் தேவை

யாழ் Hospital Road இல் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள Sylo Ice Cream மற்றும் உணவகத்துக்குத் திறமையான Tea மேக்கர் சிற்றுண்டி தயாரிப்பாளர்கள், சப்பிளை செய்யக்கூடிய நபர்கள் உடன் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
உடன் தொடர்புகொள்ளவும்: 077 771 0785 (57977) (45.3.7)

## டெக்னீசியன்ஸ் தேவை

கொழும்பில் இயங்கும் எமது நிறுவனத்துக்கு நன்கு அனுபவமும் திறமையும் உள்ள டிஸ் அன்ரனா பொருத்துநர் மற்றும் Electronic`s Repair செய்யத் தெரிந்த Technicians இருவர் தேவை. அனுபவமுள்ளவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும். திறைமைக்கேற்ப 50.000/= வரை வழங்கப்படும் (Over time உட்பட) உணவு, தங்குமிடம் உண்டு. உடன் தொடர்புகொள்ளவும்.
Sats Tech Engineer`s
Call: 077 771 0785 (குமார்) (57978) (45.3.7)

## வீடு வாடகைக்கு

அரியாலை தபாற்கட்டைச் சந்தி, (ஏ9 வீதி) அருகில் வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு: 077660 4832 (57933) (4.3.7)

## விற்பனைக்கு

Nano கார்மொடல்-2011, மைனர் 2 சிறி கார், சணல், யமுனாபாரி ஆடுகள், ஜப்பான் துவிச்சக்கர வண்டிகள் HONDA Lanser 50 மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குள்ளன.
(57921) (4.3.7) தொடர்பு: 077 918 1018

## காணி விற்பனைக்கு

அல்லப்பிட்டியில் அமைந்துள்ள 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பெரிய Farm போன்ற நிறுவனங்களுக்கு உகந்தது.
தொடர்பு: 077 835 0478
(57960) (4.3.7)

## சிங்கள மொழி கற்றுக்கொள்ள

கிளிநொச்சி மாவட்டத்தில் சிங்களம் எழுத, வாசிக்க, கதைக்க விரும்பிய நேரத்தில் விரும்பிய இடங்களில் சகல வயதினருக்கும்
தொடர்பு: ஆசிரியர் க.விவேகானந்தன்
எடிஷன் கல்வியகம் 077 442 2098 (51391) (4.3.7)

## விற்பனைக்கு

தேங்காய் எண்ணெய் ஊற்றும் சிறிய இயந்திரம், கபிநெற், HP லப்ரொப் A/C அவுட்டோர்கள் என்பன விற்பனைக்குள்ளன. (57974) (45.3.7)
தொடர்பு: 078 523 9724

## மணமக்கள் தேவை

* 88 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 43 பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்ற தாதிய மணமகளுக்கு பட்டதாரி மணமகன் கனடாவில் தேவை.
* 87 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 27 பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டன் மணமகளுக்கு இஞ்சினியர், எக்கவுண்டன் மணமகன் தேவை.
* 80 இல் பிறந்த 8 இல் சூரியனும் செவ்வாயும் 56 பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 10 இல் சூரியனும் செவ்வாயும் 36 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற MSc இஞ்சினியர் மணமகனுக்கு BSc, CIMA, மணமகள் தேவை.
* 78 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 20 பாவமுடைய BSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 86 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 17 பாவமுடைய BSc கடல் பரிசோதகர் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 34 பாவமுடைய MSc இஞ்சினியருக்கு பட்டதாரி மணமகள் தேவை.
* 83 இல் பிறந்த 8இல் செவ்வாய் 64 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் மணமகள் தேவை.
* 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 21 பாவமுடைய டாக்டர் மணமகனுக்கு டாக்டர் மணமகள் தேவை.
* 84 இல் பிறந்த 1 இல் செவ்வாய் 73 பாவமுடைய சிவில் இஞ்சினியர் மணமகனுக்கு BSc, CIMAமுடித்த மணமகள் தேவை.
* 71 இல் பிறந்த 7இல் செவ்வாய் 42¾ பாவமுடைய (BA) ஆசிரியருக்கு ஆசிரியை மணமகள் தேவை.
* 81 இல் பிறந்த 11இல் சூரியனும் செவ்வாயும் 15½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்றுவந்துள்ள எக்கவுண்டன் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, முடமாவடி.
(57966) (45.3.7) T.P.077 607 0862

## Majestic Cineplex Jaffna

கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




பிளட்டினம் 10.30 / 2.30 / 6.30
சில்வர் 10.15am / 6.15pm
சில்வர் 2.15pm
ப்ரொன்ஸ் 10.30 / 2.30 / 6.30
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

# பெண்ணை ஏமாற்றி பணம் பெற்ற இளைஞன் கைதானார்

யாழ்ப்பாணம், மார்ச் 21
திருமணம் செய்வதாக கூறி பெண்ணிடமிருந்து 7 லட்சம் ரூபா பணத்தை பெற்று ஏமாற்றிய இளைஞர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுநீதிமன்றகட்டளையின் பேரில் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார்.
சுன்னாகம் கந்தரோடைப் பகுதியைச் சேர்ந்த குறித்த பெண்ணுடன் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொலைபேசி மூலம் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட குறித்த இளைஞன் அவரை தான் காதலிப்பதாகவும் திருமணம் புரியப்போவதாகவும் உறுதியளித்துள்ளார்.
அதனை உண்மை என்று நம்பிய பெண்ணிடமிருந்து தனது வங்கிக் கணக்குக்கு பணம் அனுப்புமாறு கேட்டுக் கொண்டுள்ளார். குறித்த பெண்ணும் அவர் பணம் கேட்கும் போதெல்லாம் சிறு சிறுதொகையாக வங்கியில் பணத்தை வைப்பு செய்துள்ளார்.
2014ஆம் ஆண்டு வரை குறித்த பெண்ணிடமிருந்து ஏழு லட்சம் ரூபா வரை பெற்றுக் கொண்ட இளைஞர் 2014ஆம் ஆண்டு மேத மாத காலப்பகுதியில் வேறோரு பெண்ணை திருமணம் புரிந்துள்ளார்.
அதனை அடுத்து தான் ஏமாற்றப்பட்டதை அறிந்து கொண்ட குறித்த பெண் யாழ்ப்பாண விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார். அதனையடுத்து வங்கி அறிக்கையைப் பெற்றுக் கொண்ட பொலிஸார் அந்தக் குற்றச் செயலுடன் தொடர்புடைய வவுனியா பம்பைமடுவைச் சேர்ந்த இளைஞரை கைது செய்து வியாழக்கிழமை யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். குறித்த இளைஞரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ.சிவ குமார் உத்தரவிட்டார்.
இளைஞன் பணம் கேட்கும் போதெல்லாம் தன்னிடம் பணம் இல்லா விட்டால் கடன் வாங்கியும் தன்னுடைய நகைகளை வங்கியில் அடைவு வைத்து பணத்தை பெற்றும், தான் அவருக்கு பணத்தை அனுப்பி வைத்ததாக பெண் நீதிமன்றில் தெரிவித்தார். (வ-103)

# இனவாதத்தைத் தூண்டும் வகையில் சிலரது பரப்புரைகள்

## இடமளிக்கக் கூடாது என்கிறார் விக்கிரமபாகு கருணாரட்ண

கொழும்பு, மார்ச் 21
நாடு நல்லாட்சிப் பாதையில் பயணிக்கும் இத்தருணத்தில், இனவாதத்தைத் தூண்டும் வகையில் சிலர் பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றனர். அதற்கு இந்த நாட்டு மக்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.
இவ்வாறு தெரிவித்தார் நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண.
'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' என்ற அமைப்பின் ஊடகவியலாளர் மாநாடு புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது. அதில் அவர் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:
"தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் குறைந்தது நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை முதலில் நடைமுறைப் படுத்தவேண்டும். நல்லிணக்க ஆணைக்குழு மஹிந்த ராஜபக்ஷவால் நிறுவப்பட்டதாகும். இதில் மாற்றுக்கருத்து எதுவும் கிடையாது. அதில், காணிப்பிரச்சினை மற்றும் நல்லிணக்கம் சம்பந்தமாகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இத்தருணத்தில் இவ்வாறான அறிக்கைகள் நல்லிணக்கத்துக்குச் சாதகமாக அமையலாம்.
இன்று நாட்டு மக்கள் ஒன்றாக வாழக்கூடிய சூழல் உதயமாகியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசுடன் இணைந்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொள்ளவேண்டும். தமிழ் மக்களின் காணிப்பிரச்சினைக்கு கண்டிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால உரிய தீர்வை முன் வைப்பார்.
இராணுவத்தினரும் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றனர். எனவே, இன்று சிறுபான்மை சமூகத்தினர் சுதந்திர மாக வாழக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. இதற்கு சேறு பூசும் வகையில் சிலர் இனவாதத்தைத் தூண்டிவிடுகின்றனர். இவ்வாறான விடயங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் – என்றார். (வ)

# நல்லாட்சியை சீர்குலைக்கும் வகையில் எந்தவொரு சட்டத்துக்கும் இடமளியோம்

## ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21
சிறுபான்மை சமூகத்தின் பிரதி நிதித்துவத்தைக் குறைக்கும் வகையிலோ, நல்லாட்சியை சீர்குலைக்கும் வகையிலோ எந்தவொரு சட்ட திருத்தத்தையும் கொண்டுவர இடமளிக்கப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய மாகாண சபை உறுப்பினரும் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான அஸாத் ஸாலி தெரிவித்தார்.
'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பு புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அஸாத் ஸாலி மேற்கண்டவாறு கூறினார்.
அவர் அங்கு மேலும் கூறியதாவது :
"ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் மாற்றுத் தேர்தல் முறை மூலமே அடுத்த தேர்தலைச் சந்திக்க வேண்டும்; 19ஆவது திருத்தச்சட்டத்தை உடனடியாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நடைமுறைப் படுத்த வேண்டும் என்று இந்தக் கட்சியினர் கூறி வருகின்றனர். அவர்கள் கூறுவதுபோல் 19 ஆவது திருத்தச் சட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாது.
தொகுதிவாரி தேர்தல் முறை நடைமுறைபடுத்தப்படுமானால் சிறு பான்மை சமூகத்தின் பிரதிநிதித்துவம் கணிசமான அளவு குறைவடைய வாய்ப்புள்ளது. இது தொடர்பாக செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய நிறைவேற்று சபைக் கூட்டத்தில் பேசினோம்.
அத்துடன், ஜனாதிபதி தெளிவாக எங்களிடம் ஒரு விடயத்தைக் கூறியுள்ளார். அதாவது, சிறுபான்மை தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகக் கொண்டுவரும் எந்தவொரு சட்ட திருத்தத்துக்கும் தாம் இடமளிக்கப்போவதில்லை என்று அவர் உறுதியளித் துள்ளார்.
இப்பொழுதுள்ள ஜனாதிபதி இருக்கும் வரை அதிகாரத்தில் அவர் இருக்கலாம். நாடாளு மன்றத் தேர்தலுக்குப் பின்னர் ஜனாதிப்தியின் அதிகாரத் தைக் குறைக்கலாம். இல்லாவிடின் மீண்டும் காடையர்களும், திருடர்களும் ஆட்சிக்கு வந்தால் இந்த நாடு அதல பாதாளத்துக்குள் போவதைத் தடுக்க முடியாது. எனவே, எதிர்க்கட்சியினர் ஜனாதிபதி மைத்திரிபாலவின் நல்லாட்சியை சீர்குலைப்பதை நிறுத்தி விட்டு நாட்டு மக்களின் நலன் கருதி செயற் படவேண்டும்.
கொழும்பு துறைமுகத்தில் கொள்கலன் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க அரசு முன் வரவேண்டும். நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க கோல்ட் ஸ்டார் என்ற வெளிநாட்டுக் கம்பனியிடம் 300 கொள்கலன்களைக் கொள்வனவு செய்து பணியில் ஈடுபடுத்தப் போவதாக பரப்புரையில் ஈடுபடுபவர்கள் பொய்ப் பிரசாரம் செய்துவருகின்றனர். இது தொடர்பாக ஒரு விசாரணையை நடத்தி அதன் பின்புலத்தைக் கண்டறிய வேண்டும்.
இந்த நாடு நல்லாட்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கும் இத்தருணத்தில் சிலர் இதனை நாசமாக்கப் பார்க்கின்றனர். இதற்கு இடமளிக்கக்கூடாது. ஊழல் செய்த வர்களை உடனடியாக சட்டத்தின்முன் நிறுத்த வேண்டும்" – என்றார். (வ)


# மரண அறிவித்தல்

## குழந்தைவேலு இராஜகோபால்



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு இராஜகோபால் 18.03.2015 புதன் கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற குழந்தைவேலு- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், நந்தேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விஜயராஜா மற்றும் செல்வநாயகி ஆகியோரின் அன்பு மருமகனும், ஓம்பிரகாஷ், காயத்திரி, விஜயராஜசோழன், நதிரா கிருஷ்ணா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், கார்த்திகா, மகடலினா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, இராஜேந்திரம், பரஞ்சோதி, ஆனந்தபசுபதி, கமலாதேவி மற்றும் இராஜேஸ்வரி, யோகாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பாலசிங்கம், கெங்காதேவி, காலஞ்சென்றவர்களான ராஜரத்தினம், நடராஜா மற்றும் சிறீஸ் கந்தராஜா, லோகேஸ்வரன், லிங்கேஸ்வரன், லோகேஸ்வரி, கௌரீஸ்வரன், திலகேஸ்வரி, சிறிஈஸ்வரி, ஞானேஸ்வரன், கெங்கேஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும், சுபாகினியின் பாசமிகு சித்தப்பாவும், பாலேஸ்வரன், அனுஷா, செல்வச்சந்திரன், பிரியா, சிறிரஞ்சனி, கமலராஜன், யோகராஜன், ஜீவரஞ்சினி, ராஜராஜன், கஜேந்திரன், சிந்துஜா ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் M-15 பம்பலப்பிட்டி தொடர்மாடியில் உள்ள அவரது இல்லத்தில் மார்ச் 20, 21 ஆம் திகதிகளில் அஞ்சலிக்காக வைக்கப்படும். 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்தில் காலை 10.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி மதியம் ஒரு மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 161 1802, 077 918 8792,
077 680 1927, 077 359 7068 (C/15519) (4.3.7)

# மரண அறிவித்தல்

## முருகப்பர் சுப்பையா

(ஓய்வுநிலை அதிபர்- பரந்தன் இந்து ம.வி)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் இல.48, குமரபுரம், பரந்தனில் வசித்தவரும் தற்போது கனடா, ஸ்காபறோவில் வசித்து வந்தவருமாகிய முருகப்பர் சுப்பையா 20.03.2015 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.
அன்னார் மனோரஞ்சிதம்மா (ஓய்வுநிலை ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், இந்திரா (பதிவாளர், பரந்தன்), இந்திரநாதன் (USA), இறஞ்சனா (ஓய்வுநிலை ஆசிரியை), மனோகரன் (பிரதேசசபை உறுப்பினர்- கரைச்சி), குலேந்திரன் (USA), சுபசீலி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மநாதன் (ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்), யோகநாதன் (ஓய்வுநிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர்), மஞ்சுளா(USA), ஜெயந்தினி, சத்தியாதேவி (USA), கருணாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், மாலதி, சுகந்தன், பாரதி, லதாங்கி, குமணன், ஆரணி, சாந்தரூபன், நிவேதா, ஹரி, ஆதவன், வைஷ்ணவி (மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்), பிரதீப் (ஆசிரியர்- கிளி/இந்துக்கல்லூரி), திருநயனி, ஜெனதீபன், ஜனார்த்தனன், துவாரகன், விவேக்கா, இந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, இராமநாதர், சபாபதிப்பிள்ளை, மருதலிங்கம், இராமலிங்கம், நாகமுத்து, நாகமணி (ஓய்வுநிலை அதிபர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நித்திலன், நித்திலா, ஆதூரியன், அட்சரன், சரண்யன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும். துயர்பகிர்வு மகன் மனோகரன் அவர்களின் D 5 R.B.I பெரிய பரந்தனில் உள்ள இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
(51392)(4.3.7) 077 025 8681, 077 833 9665, 077 615 1855


# சாவகச்சேரி நகரசபைக்கு விரைவில் இணையத்தளம்

சாவகச்சேரி நகரசபையின் இணை யத்தளம் விரைவில் ஆரம்பிக் கப்பட வுள்ளது.
இதற்கான ஏற்பாடுகள் நகர சபையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
இணையத்தள ஆரம்ப நாளில் வாழ்த்துச்செய்திகளை பிரசுரிக்க அனைவரிடமும் பெற வேண்டும் என்று வியாழக்கிழமை நடை பெற்ற நகரசபை யின் மாதாந்தக் கூட்டத் தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் மகளிர் தினம்

யாழ்ப்பாணம், மார்ச் 21
பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் மகளிர் தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு நடைபெற வுள்ளது.
இல-62, கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவை கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்விற்கு திருமதி நவரட்ணம் சந்திரா தலைமை வகிக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கி.தயாபரி, சுன்னாகம் கலைவாணி சனசமூக நிலையத் தலைவர் திருமதி எஸ்.சிவாஜினி ஆகி யோர் கலந்துகொள்ளவுள் ளனர்.
இந்த நிகழ்வில் 'பெண்களை வலுவூட்டும் கூட்டுறவு' எனும் தலைப்பில் பிரபா கந்தசாமி ஐயர் சிறப்புரை வழங்கவுள்ள துடன் கைதடி தென்மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க கலைக்குழுவின் 'எண்ணித் துணிவோம்' சிந்துநடைக் கூத்து, யாழ்.பல்கலைக்கழக உளவியல் துறை சமுதாய வழி காட்டல் மன்றத்தின் 'பண்டைய இலக்கியங்கள் பெண்களை பெருமைப்படுத்து கின்றதா? சிறுமைப்படுத்துகின் றதா?' என்ற தலைப்பில் பட்டிமன்றம் போன்றன நடைபெறவுள்ளன.
நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள் ளனர். (வ-10)

# வினா விடைப்போட்டி

வடமராட்சி லயன்ஸ் கழகம் வதிரி பரமானந்த சிறுவர் இல்ல பிள்ளை களின் கல்வி மேம்பாடு கருதி வதிரி பரமானந்த சிறுவர் இல்லத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை முற் பகல் 10.30 மணிக்கு வினா– விடைப் போட்டியை நடத்தவுள்ள தாக வடமராட்சி லயன்ஸ் கழக செய லாளர் அறிவித் துள்ளார். (வ-35)

# பாபாவின் சாவடி ஊர்வலம்

ஸ்ரீசீரடி சாயி பாபாவின் பிறந்த தினமான ஸ்ரீராம நவமியை முன்னிட்டு நல்லூர் நாவலர் வீதியிலுள்ள ஸ்ரீசீரடி பாபா ஆலயத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை இலட்சார்ச்சனை நடைபெறவுள்ளது.
இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் சாவடி ஊர்வலம் (பல்லக்கு உற்சவம், ஆலயத்தில் இருந்து மருதடி வீதி ஊடாக றக்கா வீதி, இராசாவின் தோட்ட வீதியூடாக நாவலர் வீதியை அடைந்து மீண்டும் ஆலயம் சேரும். (ஓ)



# உலக சாதனை படைத்த அப்பிள்

ஸ்மார்ட் போன்கள், ஐபேட், கணினி தயாரிப்பில் முன்னணியில் திகழும் அப்பிள் தொழில்நுட்ப நிறுவனம், உலக சாதனை படைத்துள்ளது. அதாவது, கடந்த காலாண்டில் ஒரு லட்சத்து 10 ஆயிரம் கோடி ரூபா இலாபம் ஈட்டி உலக சாதனை படைத்துள்ளது.



வணிக நிறுவனம் ஒன்று இந்த அளவு பெரிய இலாபத் தொகையைப் பதிவு செய்துள்ளமை உலகளவில் இதுவே முதல் முறை என்று ஹோவர்டு சில்வர் பிளாட் என்ற மதிப்பீட்டு நிறுவனம் கூறியுள்ளது. கடந்த பண்டிகை சீசனில் அப்பிள் போன்களின் விற்பனை எதிர்பார்த்ததை விட அதிகளவில் இடம்பெற்றதும் குறிப்பாக சீனாவில் விற்பனை அதிகரித்ததுமே இந்த மிகப் பெரும் இலாபத்துக்குக் காரணமாக அமைந்தது என்று அந்த நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.

# அப்பிளின் iOS 9 விரைவில் அறிமுகம்

அப்பிள் நிறுவனம் iOS 8.1.3 என்ற தனது புதிய இயங்குதளப் பதிப்பை அறிமுகம் செய்துள்ளது.

இதேவேளை இந்த வருடம் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் மாதம் அளவில் iOS 9 இயங்குதளத்தை அறிமுகம் செய்யத் தீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவித்தல் எதிர்வரும் ஜுன் மாதம் இடம்பெறவுள்ள World Wide Developer Conference நிகழ்வில் விடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் iPhone 6 \u®D iPhone 6 Plus ஆகிய சாதனங்கள் iOS 9 இயங்குதளத்தில் செயற்படக் கூடியதாக இருக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.





# இயங்கு தளத்தைக் கொண்ட ஸ்மார்ட் டேபிள்

ஸ்மார்ட் கைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம் ஆகிய சாதனங்களின் வரிசையில் ஸ்மார்ட் டேபிளும் (மேசை) உருவாக்கப்பட்டுள்ளது.

46 அங்குல அளவுடைய தொடுதிரையைக் கொண்ட இந்தச் சாதனம் விற்பனைக்கு வரவுள்ளது.

மேலும் இது 64 மில்லி மீற்றர்கள் தடிப்புடையதாக இருப்பதுடன் விண்டோஸ் 8.1 மற்றும் கூகுளின் அன்ரோயிட் கிட்காட் இயங்குதளங்களில் செயற்படக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர 2.0dGHz Rockchip RK3288 processor, பிரதான நினைவகமாக 2GB RAM, 16GB சேமிப்பு நினைவகம் என்பனவும் தரப்பட்டுள்ளன.

இதன் விலை 8000 டொலர்கள் ஆகும்.

# விசேட கூற்று தொடர்பில் சபையில் கருத்து மோதல்

## சபாநாயகர் தலையிட்டு முடிவுக்குக் கொண்டு வந்தார்

கொழும்பு, மார்ச் 21

23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் நாடாளுமன்றத்தில் விடுக்கப்படும் விசேட கூற்றுத் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்த் தரப்பினரிடையே நேற்றுமுன்தினம் சபையில் கருத்து மோதல் ஏற்பட்டது. அதையடுத்து சபாநாயகர் தலையிட்டு அந்தக் கருத்து மோதலை முடிவுக்குக் கொண்டு வந்தார்.

பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயம் தொடர்பில் 23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தரப்பினரால் கேள்விகள் முன்வைக்கப்படும். அந்தக் கேள்விகளுக்குப் பிரதமர் பதிலளிப்பார். அவர் குறிப்பிட்ட நேரத்தில் சபையில் சமுகமளித்திருந்திருக்காவிட்டால் அவர் சார்பில் சபை முதல்வர் பதிலளிப்பார்.

இவ்வாறான நிலையில், நேற்றுமுன்தினம் சபையில் 23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் 'தேசத்திற்கு மகுடம்' தொடர்பில் ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார, அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடம கேள்வி எழுப்பியிருந்தார்.

அந்தக் கேள்விக்குப் பதிலளித்த சமுர்த்தி அமைச்சர் சஜித் பிரேமதாஸ, தனது அமைச்சுக்குப் பொறுப்பான விடயம் தொடர்பில் மட்டும் பதிலளித்துக் கொண்டிருந்தார்.

அதன்போது குறுக்கிட்ட வாசுதேவ நாணயக்கார, "23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் எழுப்பப்படும் கேள்விக்கு தனிப்பட்ட அமைச்சு என்ற அடிப்படையில் பதிலளிக்காது, அரசு என்ற அடிப்படையில் பொதுவாக பதிலளிக்க வேண்டும்" – என்றார்.

அதையடுத்து கருத்து வெளியிட்ட அமைச்சர் சஜித் பிரேமதாஸ, "எனக்குப் பொறுப்பான அமைச்சு தொடர்பில் மட்டுமே என்னால் பதிலளிக்க முடியும். ஏனைய அமைச்சுகள் தொடர்பில் பதிலளிக்கும் தகுதி எனக்கு இல்லை" என்று கூறினார்.

இதன்பின்னர் சிறப்புரிமைப் பிரச்சினையொன்றை எழுப்பிய எதிர்க் கட்சித் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா,

"இது வாய்மூல விடைக்கான கேள்வி அல்ல. 23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயம் தொடர்பாகவே கேள்வி எழுப்பப்படும். கடந்த ஆட்சியில் இதுபோன்ற கேள்விகளுக்கு நாம் உரிய முறையில் பதில்களை வழங்கியிருந்தோம். எனவே, இந்தக் கேள்விக்கு அரசின் சார்பிலேயே பதிலளிக்கப்பட வேண்டும்" என்றார்.

அதன்போது கருத்து வெளியிட்ட சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, 23/2ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயம் தொடர்பிலேயே கேள்வி எழுப்பப்படும். எனவே, அமைச்சு என்ற அடிப்படையில் அல்லாது அரசு என்ற வகையில் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கப்பட வேண்டும். அவர் (சஜித் பிரேமதாஸ) முதலாவது முறை யாக அமைச்சுப் பதவி ஏற்றிருப்பதாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது" என்றார்.

இதன்பின்னர் கருத்து வெளியிட்ட அமைச்சர் சஜித் பிரேமதாஸ, "நான் ஒரு தடவை அல்ல. 10 தடவைகள் அமைச்சுப் பதவி வகித்தாலும், எனது அமைச்சுக்குப் பொறுப்பான விடயம் தொடர்பில் மட்டுமே பதிலளிப்பேன்" – என்றார்.

அதன் பின்னர் மீண்டும் எழுந்த வாசுதேவ நாணயக்கார, "எனது கேள்விக்குப் பிரதமரின் சார்பில் பதிலளிப்பவர் யார்" என்று கேள்வி எழுப்பினார்.

அதையடுத்து கருத்து வெளியிட்ட அமைச்சரும், சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல, "நீங்கள் (வாசுதேவ நாணயக்கார) அமைச்சர் சஜித் பிரேமதாஸவிடம்தான் கேள்வி எழுப்பியுள்ளீர்கள்" என்றார்.

அதன் பின்னர் கருத்து வெளியிட்ட சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, "ஆம். அமைச்சர் சஜித் பிரேமதாஸவை நோக்கித்தான் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இருப்பினும், 23/2 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் எழுப்பப்படும் கேள்விக ளுக்கு அரசின் சார்பில் பதிலளிக்க வேண்டும்" என்று கூறி அங்கு உருவாகியிருந்த கருத்து மோதலை முடிவுக்குக் கொண்டுவந்தார். (த)

# கள்ளுத் தவறணை அமைக்க எதிர்ப்பு

தென்மராட்சி, மார்ச் 21

சாவகச்சேரி கோயிற் குடியிருப்பு பிரிவில் உள்ள கடற்கரையை அண்டிய பகுதியில் கள்ளுத் தவறணை அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

கச்சாய் வீதி ஓராம் கட்டைய டியில் தனியார் காணியிலுள்ள கள்ளுத் தவறணையை, அந்த இடத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்துக்குச் சொந்தமான காணியில் குடியிருப்புக்களை அண்டிய இடத்தில் அமைப்பதற்கே மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

குடியிருப்புக்களை அண்டியுள்ள அந்தப் பகுதியில் கள்ளுத் தவறணை அமைக்க அனுமதிக்க வேண்டாம் என அந்த ஒழுங்கையில் வசிக்கும் மக்கள் சாவகச்சேரி நகர சபையிடம் முறையிட்டுள்ளனர்.

அந்த முறைப்பாட்டுக் கடிதம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நகர சபைக் கூட்டத்தில் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டு சபை உறுப்பினர்களால் கள்ளுத் தவறணை அமைக்க அனுமதிப்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது. (வ-9)

# ஏப்ரல் 7 க்கு முன்னர் சாதாரண தர முடிவுகள்

நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை ஏப்ரல் 7ஆம் திகதிக்கு முன்னர் வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார , கடந்த வருடம் டிசெம்பெர் 8ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சை முடிவுகளை ஏப்ரல் 7ஆம் திகதிக்கு முன்னராக நாடளாவீய ரீதியில் வெளியிட முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (த)

# விபத்தில் காயமடைந்த மாணவன் 5 தினங்களின் பின்னர் உயிரிழப்பு

தென்மராட்சி, மார்ச் 21

பேத்தியுடன் சென்ற வேளையில் பூநகரிப் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளுடன் மோதுண்ட 10 வயது பாடசாலை மாணவன் 5 தினங்களின் பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

கடந்த திங்கட்கிழமை பூநக ரியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்ற வேளையில் மோட்டார் சைக்கிளால் மோதுண்ட சாவகச்சேரி சக்தியம்மன் வித்தியாலய மாணவன் அங்கிருந்து யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காததால் நேற்று அதிகாலை அவர் உயிரிழந்தார்.

சாவகச்சேரி கந்தையா வீதியைச் சேர்ந்த வசந்தகுமார் சங்கீர்த்தனன் (வயது – 10) என்னும் மாணவனே உயிரிழந்தவராவார். பூநகரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

## நூதனசாலைத் தாக்குதல்: 23 பேர் சாவு ; 9 பேர் கைது



துனிஷ்,மார்ச் 21
பார்டோ நூதனசாலையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய 9 பேரைத் துனிஷியன் பாதுகாப்பு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.
ஆபிரிக்க நாடான துனிசியாவின் தலைநகர் துனிஷில் உள்ள பார்டோ நூதனசாலையில் கடந்த புதன்கிழமை தீவிரவாதிகள் அதிரடியாக நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன் போது நூதனசாலையில் இருந்த சுற்றுலாப்பயணிகளில் 19 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது டன் 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.
காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் அவர்களில் மேலும் 4 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்ப வத்தால் 23 பேர் இதுவரை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது சந்தேகத்தின் பெயரில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கைது செய்யப்பட்டவர்களில் 5 பேர் இந்தச் சம்பவத்துடன் நேரடித் தொடர்புடையவர்கள் என்றும் ஏனைய 4 பேரும் தாக்குதலுக்கு உதவி புரிந்தவர்கள் எனவும் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (14)

# தீவிரவாதத்தை கைவிட்டால் பேச்சுக்குத் தயார்



டில்லி,மார்ச் 21
அனைத்து இரு தரப்புப் பிரச்சினைகளுக்கும் பாகிஸ்தானுடன் பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு இந்தியா தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பேச்சு அமைதியான, தீவிரவாத தாக்குதல்கள் இல்லாத சூழ்நிலையில் தான் நடத்தப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
அண்மையில் பாகிஸ்தானுக்குச் சென்ற இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் எஸ். ஜெய்சங்கர் பாகிஸ்தான் வெளியுறவுத் துறைச் செயலர் அய்சாஸ் சவுத்ரியை சந்தித்துப் பேசியுள்ளார்.
இந்தச் சந்திப்பின் போது லாகூர் பிரகடனம், சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில், இரு தரப்புக்கும் இடையே உள்ள பிரச்சினைகளுக்குப் பேச்சுமூலம் தீர்வுகாண இந்தியா தயாராக உள்ளது. எனவும், அதே நேரத்தில் எல்லைக் கட்டுப்பாட்டை மதித்து பாகிஸ்தான் நடக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.
அத்துடன் தீவிரவாதத்தைத் தூண்டுவதைப் பாகிஸ்தான் நிறுத்த வேண்டும். அமைதியான சூழ்நிலையொன்றில்தான் இந்தப் பேச்சுக்கு இந்தியா தயாராக உள்ளது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளார். (14)



## தீவிரவாதிகளின் பிடியில் 39 இந்தியர்கள்

டில்லி,மார்ச் 21
போரால் பாதிக்கப்பட்டுள்ள ஈராக்கில், தொழில் புரிந்து வந்த 39 இந்தியர்கள் ஐ.எஸ். தீவிரவாதிகள் கையில் சிக்கியுள்ளனர். நீண்ட நாள்களாக ஐ.எஸ். பிடியில் உள்ள அவர்களை மீட்க உதவுமாறு துருக்கிக்கு இந்தியா கோரிக்கை விடுத்துள்ளது.
இது தொடர்பாக துருக்கி வெளியுறவுத்துறை அமைச்சர் மெவ்லுட் கவுசொக்லுவுடன் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் பேசியுள்ளார். ஐ.எஸ். தீவிரவாதிகளிடமிருந்து 39 இந்தியர்களை விடுவிப்பது தொடர்பாகவும், பிராந்தியத்தில் நிலவும் தீவிரவாத மிரட்டல்களை எதிர்கொள்வது தொடர்பிலும் விவாதித்துள்ளார்.
கடந்த வருடம் மொசூலில் இந்தியப் பணியாளர்கள் ஐ.எஸ். தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட போது, அவர்கள் எங்குள்ளனர் என்பது பற்றிய தகவல்களைத் துருக்கி நாடுதான் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அதேசமயம் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள இந்தியப் பிரதமர் மோடி, துருக்கி செல்வது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது. (14)

## மகனைக் கொன்ற தந்தைக்கு 20 வருடங்கள் சிறை


நியூயோர்க், மார்ச் 21
பீசாவில் எலி விஷத்தைக் கலந்து கொடுத்து தனது பெற்ற மகனையே கொன்ற தந்தைக்கு அமெரிக்க நீதிமன்றம் 20 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.
அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் புறநகர் பகுதியான ப்ராங்க்சைச் சேர்ந்த 49 வயதான லியானார்டோ எஸ்பினால் என்பவர், தனது மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டுத் தான் தற்கொலை செய்வதாக கடிதம் ஒன்றை எழுதி வைத்துள்ளார். அதன் பின்னர் தமது மகள் மற்றும் மகனுக்கு விஷம் கலந்த பீசாவை சாப்பிடக் கொடுத்து தானும் சாப்பிட்டுள்ளார்.
பீசாவைச் சாப்பிட்ட மகள் வாந்தி எடுத்ததால் வீட்டில் உள்ளவர்கள் வருவதை அவதானித்த எஸ்பினால் மகனைத் தூக்கிக் கொண்டு குளியலறைக்குள் மறைந்துள்ளார். சம்பவம் தொடர்பாக அறிந்த எஸ்பினாவின் தாயார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார். குளியலறைக்குள் இருந்த தொட்டியில் நீரில் மூழ்கியிருந்த மகனையும் தந்தையையும் பொலிஸார் மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.
இதன் போது மகன் உயிரிழந்துள்ளார். தந்தையார் சிகிச்சையின் பின்னர் காப்பாற்றப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தந்தை மீது வழங்குத் தொடுத்ததை அடுத்து 20 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (14)



சென்னை வள்ளுவர் கோட்டம் பகுதியில் கோடை வெயிலின் உஷ்ணத்தைக் குறைக்க குளு குளு தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளன. (14)

# சீனாவில் பாறைகள் சரிந்து சுற்றுலாப் பயணிகள் சாவு

பீஜிங், மார்ச் 21
சீனாவில் சுற்றுலாப் பயணிகள் மீது பாறைகள் சரிந்து விழுந்ததில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் போது பலர் படுகாயம் அடைந்துள்ளனர்.
சீனாவின் குய்லின் பகுதி மலையடிவாரத்தில் உள்ள நீர்நிலையில் சுமார் 20 சுற்றுலாப் பயணிகள் நேற்று முன்தினம் படகுச் சவாரிக்காகக் காத்திருந்தனர். அதன் போது மலையில் இருந்து 3 மீற்றர் அகலமான பாறைகள் சரிந்து விழுந்துள்ளன. அதில் சிக்கி சம்பவ இடத்திலேயே 4 பேர் உயிரிழந்துள்ளனர்.



படுகாய மடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பயனளிக்காமல் மேலும் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.
சுற்றுலாப் பயணிகளில் பலர் தைவானைச் சேர்ந்தவர்கள் எனவும் விபத்து நடந்த பகுதி வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் சீனாவின் முக்கிய இடமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)


## அமெரிக்க தூதருக்கு கொலை மிரட்டல்

வொஷிங்டன், மார்ச் 21
ஜப்பானுக்கான அமெரிக்கத் தூதராகப் பணியாற்றி வரும் கரோலின் கென்னடிக்குக் கொலை மிரட்டல் விடுத்த நபரை அந்த நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
அமெரிக்காவில் படுகொலை செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ஜோன் எப் கென்னடியின் மகளான கரோலின், கடந்த நவம்பர் 2013 ஆம் ஆண்டு டோக்கியோவில், ஆசிய நாடுகளுக்கான முதல் பெண் தூதராகப் பதவியேற்றுக் கொண்டார்.
இந்த நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கரோலினுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஜப்பான் மற்றும் அமெரிக்க அதிகாரிகள் கொலை மிரட்டல் தொடர்பாக தீவிர விசாரணையில் ஈடுபட்டனர். இந்த விசாரணைக்குப் பின்னர் ஒகினோவாவைச் சேர்ந்த 52 வயதான நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஒகினோவாவில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி அல்பிரட் மேகிள்பைக்கிற்கும் இந்த நபரே கொலை மிரட்டல் விடுத்துள்ளதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. (14)



## ஆப்கானிஸ்தானில் இளம்பெண் கொடூரமாக அடித்துக் கொலை

காபூல்,மார்ச் 21
ஆப்கானிஸ்தானில் இளம்பெண்ணொருவர் கிராமமக்களால் கொடூரமாக அடித்துக் கொலை செய்யப்பட்டுத் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளார்.




காபூல் நகரில் உள்ள பள்ளிவாசலொன்றின் அருகாமையில் வசித்து வந்த 27 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளார். குறித்த பெண் குர்ஆனை எரித்தார் எனக் குற்றஞ்சாட்டி அந்தப்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து இந்தக் கொடூரமான தண்டனையைக் வழங்கியுள்ளனர்.
குறித்த பெண்ணைக் கல் மற்றும் தடிகள் கொண்டு கடுமையாகத் தாக்கிக் கொன்ற பின்னர் ஆற்றின் ஓரத்தில் தூக்கி எறிந்து தீ வைத்துக் கொளுத்தியுள்ளனர். இதற்கிடையே குறித்த பெண் மனநலம் பாதிக்கப்பட்டவர் என அப் பெண்ணின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ஆப்கானிஸ்தான் பொலிஸார் 4 பேரைக் கைதுசெய்துள்ளனர். இந்தக்கொலைச் சம்பவம் தொடர்பான வீடியோவும் சமூக வலைதளங்களில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மனித உரிமைகள் ஆணையமும் இந்தச் சம்பவத்துக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (14)

# சீனா-ஜப்பான் இடையே மீண்டும் பேச்சு ஆரம்பம்

டோக்கியோ, மார்ச் 21
சீனா மற்றும் ஜப்பான் நாடுகளுக்கிடையே நிலவிவரும் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் இரு நாடுகளும் மீண்டும் பேச்சை ஆரம்பித்துள்ளன.
கிழக்குச் சீனக் கடற்பகுதியில் மக்கள் வசிக்காத சில தீவுகளை ஜப்பான் தனக்குச் சொந்தமானது என அறிவித்துள்ளது. அந்தத் தீவுகளைச் சீனாவும் உரிமை கோரியுள்ளது. இதனால் கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் இந்த இரு நாடுகளுக்கும் இடையில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. இரு நாடுகளினதும் போர்க்கப்பல்கள் கிழக்குச் சீனக் கடற்பகுதியில் மாறிமாறிச் சுற்றி வந்து கொண்டிருந்தன. இந்தப்பிரச்சினையால் இரு நாடுகளுக்கும் இடையே போர் வெடிக்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் இந்தப் பிரச்சினைகளைப் பேசி தீர்க்கும் வகையில் இரு நாடுகளின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கிடையே நேற்று பேச்சு நடந்துள்ளது. இதன் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே நிலவிவரும் பதற்றமான சூழ்நிலையை மாற்ற முடியும் என்று ஜப்பான் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். (14)





## பெண்கள் செல்பி எடுக்க தாய்லாந்தில்கட்டுப்பாடு

பாங்கொக்,மார்ச் 21
பெண்கள் தங்களது மார்புப் பகுதி தெரியும்படி செல்பி எடுக்கக் கூடாது, இதனை மீறினால் 5 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனத் தாய்லாந்து அரசு உத்தரவிட்டுள்ளது.
செல்பிக்களில் சிலர் தங்களை ஆபாசமாக எடுத்து, அவற்றைச் சமூக வலைதளங்கள் மூலமாக வெளியிடுகின்றனர். இதனால் பெண்கள் பெருமளவு பாதிக்கப்படுகிறார்கள். எனவே, தாய்லாந்து அரசு இந்தப் புதிய உத்தரவைப் பிறப்பித்துள்ளது.
செல்பி எடுப்பதற்குத் தனது நாட்டு பெண்களுக்கு கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இதன்படி, செல்பியில் தாய்லாந்துப் பெண்கள் மார்புப் பகுதியில் இறக்கமாக போட்டோ எடுக்கக்கூடாது. இதனை மீறுபவர்களுக்கு 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், நாட்டின் கலாசாரம் மற்றும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் கலாசார அமைச்சகம் தெரிவித்துள்ளது.(14)



ஜப்பானின் சிறிய கிராமங்களில் மக்கள் தொகை அதிகரிக்கப்படவேண்டுமெனத் தனி நபர் ஒருவர் பாடசாலை மற்றும் வீதியோரங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உருவப் பொம்மைகளை அமைத்துள்ளார். (14)

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் சாவு
### பாகிஸ்தானில் விபத்துச் சம்பவத்தில்

இஸ்லாமாபாத், மார்ச் 21
பாகிஸ்தானில் உள்ள கைபர் பக்துன்ங்க்வா மாகாணத்தில் ஜீப் ஒன்று நேற்று பள்ளத்தில் கவிழ்ந்துள்ளது: சம்பவத்தில் பெண்கள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.
பக்துன்ங்க்வா மாகாணத்தில் உள்ள மான்சேராவை சேர்ந்த ஒரு குடும்பத்தினர் பாலகோட்டில் இருந்து சங்கார் என்ற பகுதிக்கு ஜீப்பில் பயணம் செய்து கொண்டிருந்தனர். இதன்போது திடீரென கட்டுப்பாட்டை இழந்த ஜீப் அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்துள்ளது. இந்த சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும், 3 பேர் காயம் அடைந்துள்ளனர். பொலிஸ் மற்றும் மீட்புக்குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மீட்பு பணியில் ஈடுபட்டனர். (14)



## உலகைச் சுற்றுகிறது சூரியகல விமானம்

வாரணாசி, மார்ச் 21
உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியிலிருந்து மியன்மாருக்கு புறப்பட்ட சோலார் இம்பல்ஸ் விமானம் நேற்று அந்த நாட்டின் மாண்டலே நகரில் தரையிறங்கியுள்ளது.
சூரிய சக்தியால் இயங்கும் உலகின் ஒரே விமானமான சோலார் இம்பல்ஸ்-2 உலகைச் சுற்றி வருகிறது. இந்த நிலையில் வாரணாசியிலிருந்து புறப்பட்ட அந்த விமானம் வங்காள விரிகுடா மற்றும் மிக உயரிய மலைச்சிகரத்தைக் கடந்து ஆயிரத்து 400 கி.மீ தூரம் பறந்து மாண்டலேவில் வெற்றிகரமாக தரையிறங்கியுள்ளது. அதனைத் தொடர்ந்து சீனாவில் உள்ள சாங்கிங் மற்றும் நான்ஜிங் ஆகிய இடங்களில் தரையிறங்குவதுடன் அதன்பின்னர் அமெரிக்காவுக்குப் புறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் மீது ஊழல் வழக்கு

பாங்கொக், மார்ச் 21
தாய்லாந்து நாட்டின் முன்னாள் பிரதமர் யிங்லக் ஷினவத்ரா தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, தேசிய பாதுகாப்புச் சபைத் தலைவர் தாவில் பிளையன்ஸ்ரீயை பணியிடமாற்றம் செய்ததாக தொடரப்பட்ட வழக்கில், கடந்த வருடம் யிங்லக் ஷினவத்ராவின் பதவி பறிக்கப்பட்டது.
இதனையடுத்து அந்த நாட்டில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. இராணுவத் தளபதியாக இருந்த பிரயுத் சான் ஓச்சா பிரதமரானார். இந்த நிலையில் யிங்லக் ஷினவத்ரா, சந்தை விலையை விடக் கூடுதல் விலைக்கு விவசாயிகளிடமிருந்து அரிசி கொள்முதல் செய்து அரசுக்குப் பல கோடி பெரும் நிதி இழப்பை ஏற்படுத்தியுள்ளதாக ஊழல் முறைப்பாடு எழுந்துள்ளது. இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் குற்ற விசாரணை நடைபெற்றது. இதன்போது யிங்லக் ஷினவத்ராவுக்கு எதிராக பெரும்பாலான உறுப்பினர்கள் குரல் கொடுத்தனர். இது தொடர்பான முதற் கட்ட விசாரணை எதிர்வரும் மே மாதம் மேற்கொள்ளப்படும் எனவும், யிங்லக் ஷினவத்ரா மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 10 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (14)

## மகளுக்காக 43 வருடங்கள் ஆணாக வாழ்ந்த தாய்

கெய்ரோ, மார்ச் 21
எகிப்து தலைநகர் கெய்ரோவைச் சேர்ந்த சிசா அபு தாவோக் என்ற பெண்ணின் கணவர் கடந்த 43 வருடங்களுக்கு முன்னர் இறந்துள்ளார்.
கணவர் இறந்ததால் அவரது வாழ்க்கை கேள்விக்குறியானதுடன் அவர் அப்போது கர்ப்பிணியாகவும் இருந்துள்ளார். ஆனால் அவர்களது குல வழக்கப்படி கணவனை இழந்த பெண் வேலைக்குச் செல்ல முடியாது. அடுத்தவர்களிடம் கையேந்தித் தான் வாழ வேண்டும்.
இதற்குச் சிசா அபுவின் தன்மானம் இடம் கொடுக்கவில்லை. தனது சொந்த உழைப்பில் வாழ வேண்டும் என விரும்பினார். இந்த நிலையில் சிசா அபுவுக்கு 'ஹடா' என்ற பெண் குழந்தை பிறந்தது. தனது மகளைக் கௌரவமாக வளர்க்க அவர் விரும்பினார். இதனால் ஒரு ஆண் போன்று வேடம் அணிந்து கட்டட வேலைக்குச் சென்றார். அதன் மூலம் கிடைத்த வருமானத்தில் தனது மகளை வளர்த்துப் படிக்க வைத்தார். இவ்வாறு 43 வருடங்கள் தனது வாழ்க்கையைக் கழித்தார். அதன் பின்னர் வேடத்தைக் கலைத்துப் பெண்ணாக வாழ விரும்பினார். ஆனால் அவரது மகள் 'ஹடா'வுக்கு திருமணமாகிக் குழந்தை பிறந்த போது 'ஹடா' நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையானார். எனவே, மீண்டும் தொடர்ந்து ஆண் வேடத்திலேயே பணிகளைத் தொடர்ந்து தனது மகளையும், குடும்பத்தையும் காப்பாற்றி வருகின்றார். அவரது சேவையைப் பாராட்டி அவருக்குச் சமூக சேவை நிறுவனமொன்று இலட்சியத்தாய் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. (14)



# கிழமைகள் பலன்கள்

பிறந்த திகதி, பிறந்த நட்சத்திரம் போன்று ஒருவர் பிறப்பெடுக்கும் கிழமையும் அதிமுக்கியமானது. கிழமைகள், ஒருவரது பண்பு நலன்களுக்கும் அதன் விளைவான அவர்களுடைய செயற்பாடுகளின் பலாபலன்களுக்கும் காரணமாக அமைவது உண்டு. எண்கணித அடிப்படையில் கிழமைகள், குறிப்பிட்ட கிழமையில் பிறந்த அன்பர்களது குணநலன்கள், அவர்களுக்கான பலாபலன்கள், அவர்கள் கடைப் பிடிக்க வேண்டிய பரிகார வழிபாடுகள் குறித்து விளக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி நாமும் அறிவோம்.

**ஞாயிற்றுக்கிழமை**

கடின வேலைகளையும் மிக எளிதாகவும் திறமையாகவும் முடித்து சாதனை படைப்பார்கள். சொன்னதைச் செய்வார்கள். இயலாது எனில் மௌனம் சாதிப்பார்கள். உற்றார்– உறவினருக்கு உதவும் குணம் கொண்டவர். இவரது தலைமையின் கீழ் பலபேர் பணி புரிவார்கள்.

**நன்மை கிடைக்கும் திகதிகள்**

ஞாயிற்றுக்கிழமையுடன் 1, 10, 19, 28 ஆகிய திகதிகள் இணைந்திருக்க பிறந்தவர்களுக்கு, எதிலும் இரட்டிப்பு மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சிகளை இந்தத் திகதிகளில் ஆரம்பிக்கலாம்.

**ஏற்றம் தரும் வயது காலங்கள்**

19, 28, 37, 45, 55, 64, 73

**வளம் தரும் கிழமை வெள்ளி வழிபாடு**

வெள்ளியன்று சூரிய உதயத்துக்குமுன் எழுந்து காலைக்கடன்களை முடித்து, ஆதித்ய ஹ்ருதயத்தை பாராயணம் செய்வதால், நல்ல பலன்களைப் பெற லாம். ஆயுள் விருத்தி உண்டாகும். தந்தையிடமும், பெரியோரிடமும், ஆன்றோரிடமும் ஆசிபெற வேண்டும். தெய்வ வழிபாடுகளில் கோதுமைப் பண்டத்தால் நைவேத்தியம் செய்தல் நலம்.

**திங்கட்கிழமை**

சாந்தமான மனம் படைத்தவர். இனிமை, அன்பு, உதவும் உள்ளம் உள்ளவர். எதிரிகளையும் நண்பர்களாகப் பாவிப்பர். தர்ம– நியாயங்களைக் கடைப்பிடிப்பதில் உறுதி உள்ளவர். அவர்களுக்குச் சொந்தத் தொழில் கைகொடுக்கும். குளிர்ச்சியான தேகம் உடையவர்.

**நன்மை கிடைக்கும் திகதிகள்**

இவர்கள் 2, 7, 11, 16, 20, 25, 29 ஆகிய திகதிகளில் புதிய தொழில் தொடங்குதல், பொருள்களை வாங்கி சேகரித்தல், சுப நிகழ்ச்சிகள் செய்வது சிறப்பு.

**ஏற்றம் தரும் வயது காலங்கள்**

20, 29, 38, 47, 56, 65, 74 இந்த வயதுகள் நடக்கும் போது திருப்திகரமான திருப்பங்கள் உண்டாகும்.

**வளம் தரும் கிழமை திங்கட்கிழமை பரிகார வழிபாடு**

திங்கட்கிழமைகளில் அதிகாலையில் எழுந்து காலைக் கடன் முடித்து நீராடி, தாயை வணங்கி ஆசிபெறுவதால் சிறப்பான பலன்கள் கிடைக்கும். அத்துடன், சக்தி தலங்களுக்குச் சென்று வெள்ளை நிறப் பூக்களால் அம்பாளுக்கு அர்ச்சனை செய்து வழிபடுவதும் விசேஷம். கற்கண்டு கலந்த நைவேத்தியங்களைப் படைத்து வழிபடலாம்.

**செவ்வாய்க்கிழமை**

செவ்வாய்க்கிழமையில் பிறந்தவர்கள் பலரிடமும் பலவிதமான யோசனைகளைக் கேட்பார்கள். ஆனாலும் தான் வைத்ததே சட்டம்; தான் நினைப்பதே சரி எனும் மனப்போக்குடன் திகழ்வார்கள். நல்லவர்களுக்கு நல்லவர்; கெட்டவர்களுக்கு கெட்டவராகத் திகழ்வார். அதனாலேயே பலருக்கும் இவரைப் பிடிக்காது. ஆனால், அதைப் பற்றி இவர்கள் கவலைப்பட மாட்டார்கள். நியாய– தர்மத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்.

**நன்மை கிடைக்கும் திகதிகள்**

9, 18, 27 ஆகிய திகதிகளில் புதிய முயற்சிகளை கையிலெடுத்தால் பல நன்மைகள் கிடைக்கும்.

**ஏற்றம் தரும் வயது காலங்கள்**

18, 27, 36, 45, 54, 63, 72 ஆகிய வயதுகளில் நல்ல திருப்பங்கள் உண்டாகும்.

**வளம் தரும் கிழமை வியாழன் பரிகார வழிபாடு**

செவ்வாய்க்கிழமைகளில் அதிகாலை எழுந்து நீராடி, அரளிப்பூவால் முருகப்பெருமானை அர்ச்சித்து வழிபட்டால், வாழ்க்கை வளம்பெறும். அன்றைய மாலைப் பொழுதில் ஸ்ரீபைரவரை வழிபடுதல் விசேஷம். துவரம் பருப்பால் செய்த நைவேத்தியத்தை சமர்ப்பிப்பது சிறப்பு.

# குடும்பம் ஒரு கோயில்



மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பார்கள். ஒரு குடும்பத்தின் பெண் நல்லவளாக அமைந்துவிட்டால் அந்தக் குடும்பம் அமைதியாய், அழகாய் அமையும். இதனை அக் குடும்பத்தலைவன் அதாவது கணவன் புரிந்து கொள்ள வேண்டும்.

தன்னலம் கருதாதவள் அடக்கம், அமைதி, அன்பு, பொறுமை மட்டுமின்றி அறநெறியால் கூறப்பட்ட பெண்மைக்கான அத்துணை நற்குணங்களும் அமையப் பெற்றவள் ஒரு நங்கை நல்லாள். கட்டிய மஞ்சள் கயிறுக்குக் கட்டுப்பட்டு கணவனுக்காக, அவன் குடும்பத்திற்காக, குழந்தைகளுக்காகத் தன்னலம் கருதாது குடும்பநலம் பேணுபவளாக ஒரு சுமைதாங்கியாய் வாழ்ந்து குடும்பத்திற்குள் தன்னை தொலைத்துக்கொள்கிறாள்.

**பண்புள்ள குடும்பம்**

அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால் அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவாகும் என்பது வள்ளுவன் வாக்கு. சச்சரவு, அன்பின்மை, குரோதம், வன்மை, பொறாமை, கணவன் மீது வஞ்சம், மனைவி மீது இரக்கமின்மை, குழந்தைகளிடம் அன்பு செலுத்தாமை போன்ற பல்வேறு காரணங்களினால் சில குடும்பங்கள் புயலின் நடுவே சிக்கிய சிறுபடகின் நிலையில் உள்ளன. குடும்பம் என்பது பெரும் காற்றாலும் அணையாத ஜெகஜோதியாய் மிளிர வேண்டும்.

**மனம்விட்டுப்பேச வேண்டும் :**


கணவன், மனைவிக்குள் எவ்வித தாழ்வு மனப்பான்மையும் இன்றி ஆணும், பெண்ணும் சம அந்தஸ்துக் கொண்ட உயிரிகள் தான் என்ற எண்ணமே குடும்பத்தை நல்லதொரு முன்னேற்றப்பாதைக்கு எடுத்துச் செல்ல ஏதுவாக அமையும். இன்றைய வரவு என்ன? செலவு என்ன? சேமிப்பு என்ன? பிள்ளைகளின் நலன்குறித்த கலந்துரையாடல், மனம்விட்டுப்பேசுதல் ஒன்றே குடும்பத்தில் ஏற்படும் குழப்பங்களுக்கு மிகப்பெரிய தீர்வு. இருவரிடையேயோன புரிதல் மிக முக்கியம். இதையே 'புரிதல் இல்லாத வாழ்வு கொத்தும் பாம்போடு வாழ்வதற்குச் சமமானது' என்கிறார் வள்ளுவர். வயதிற்கு வந்த பெண், ஆண் பிள்ளைகளிடமும் உலக யதார்த்தத்தைப் பதிவு செய்ய வேண்டும். அதற்கான நேரத்தை கண்டிப்பாக ஒதுக்க வேண்டும். ஆனால் பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் பேசநேரமின்றி தொலைக்காட்சி முன்னும், பிள்ளைகள் கணினி முன்னும் அமர்ந்து முடங்கிக்கொள்கின்றனர். பின்னர் எவ்வாறு அன்பு பரிமாற்றம் கிடைக்கும். புராணக்கதைகள், நன்னெறி கதைகளைக் கூறும் தாத்தா, பாட்டிகள் பல வீடுகளில் இல்லை. அவர்கள் முதியோர் இல்லத்திற்கு வலுக்கட்டாயமாகத் தள்ளப்பட்டு விட்டனர். தொலைக்காட்சி வடிவில் வந்த பேய் நம்மை ஆட்டிப்படைக்கின்றது. அதற்கு அடிமையாகிவிட்டு குடும்பத்தினருடன் குதூகலமாய் பேசிடாமல் தனித்தனி தீவாய் நம்மை சுற்றி மட்டும் ஒரு கூட்டுப்புழுவாய்க் கூடுகட்டி வாழப் பழகியதை நாம் முற்றிலும் உடைத்தெறிய வேண்டும்.

**விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் :**

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்பார்கள். ஒரு குடும்பத்தின் பெண் நல்லவளாக அமைந்துவிட்டால் அந்தக் குடும்பம் அமைதியாய், அழகாய் அமையும். இதனை அக் குடும்பத்தலைவன் அதாவது கணவன் புரிந்து கொள்ள வேண்டும். ஒருவருக்கொருவர் அன்பினை பரிமாறி, குடும்ப நலனில் அக்கறை செலுத்தி, விட்டுக்கொடுத்து குடும்பம் அமைதிப் பூங்காவாக நறுமணம் தரும் நந்தவனமாக அமைந்திடப் பாடுபட வேண்டும். குடும்பம் என்பது நல்லதொரு இரட்டை மாட்டுவண்டி போன்றது. அதில் கணவன், மனைவி ஒருங்கிணைந்து செல்ல வேண்டும். ஆளுக்கொரு திசையில் சென்றால் வண்டி இயங்குவது பிரச்சினை தான். தற் போதுள்ள காலகட்டத்தில் குடும்ப ஒற்றுமை சீர்குலைந்து ஆணும், பெண்ணும் சண்டையிட்டு பொலிஸ், நீதிமன்றம் என அலையும் நிலை உள்ளது. ஒருவருக்கொருவர் அன்பிற்கு அடிமையாகிக் கட்டுண்டு இருக்க வேண்டுமே தவிர அதிகாரம் காட்டி வெட்டுண்டு கிடப்பது எந்த வகையில் நியாயம். இருவரும் வேலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டால் ஆண்களும் பெண்களுக்கு வீட்டு வேலைகளில் உதவ வேண்டும். அதன்மூலம் பெண்களுக்குச் சுமை குறையும். இவ்வாறு பல்வேறு வழிமுறைகளைக் கடைபிடித்தால் குடும்பம் எப்போதும் கோயிலாகவே இருக்கும்.



# வாசகர் திருமுகம்



## விலைகள் குறைக்கப்படாதது ஏன்?

வரவு–செலவுத் திட்டத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டும், பெரும்பாலான உணவகங்களில் உணவுப் பண்டங்களின் விலைகள் குறைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சில உணவகங்களில் கண்துடைப்புக்காக உணவுப் பண்டங்களின் விலையைச் சிறிதளவு குறைத்துள்ளார்கள். குறைத்த விலையை ஈடு செய்வதற்காக உணவுப் பண்டங்களின் உருவ அமைப்பைச் சிறியதாகக் குறைத்தோ அல்லது தரத்தைக் குறைத்தோ தயாரிக்கின்றார்கள். இந்தப் பண்டங்களுக்கு, கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க முடியாது. ஒவ்வொரு உணவகமும் வெவ்வேறான உருவ அமைப்பிலும், வெவ்வேறான தரத்திலும் உணவுப் பண்டங்களைத் தயாரிப்பதனால் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்கமுடியாது.

பெரும்பாலான உணவகங்கள் தாங்களே உணவுப் பண்டங்களைத் தயாரித்து விற்பனை செய்கின்றன. இவ்வாறு இருக்கின்றபோது யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க உணவகம், வெளியாள்களிடமிருந்தே உணவுப்பண்டங்களைக் கொள்முதல் செய்து குறைந்த விலையில் பொருள்களை விற்றுக்குறைந்த இலாபத்தைப் பெறுகின்றது. வரவு–செலவுத் திட்டத்துக்குப் பின் யாழ்.பல நோக்குக் கூட்டுறவு உணவகத்தில் விலைகள் குறைக்கப்படவில்லை. ஏற்கனவே நிர்ணயித்து விற்கின்ற விலைகள் மிகவும் குறைவானதாக இருப்பதால் அவர்கள் விலைக் குறைப்புச் செய்யவில்லை. அங்கு விற்கப்படுகின்ற விலையிலும் பார்க்க குறைவாக எந்த உணவகமும் விற்றதில்லை. அந்த உணவகத்தில் விற்கப்படுகின்ற உணவுப் பண்டங்களின் விலைகள் சிலவற்றைத் தருகிறேன். பிளேன் தேநீர் ரூபா 10, பால்தேநீர் 20, இடியப்பம் 4, தோசை 10, பிட்டு 10, உழுந்துவடை, கடலைவடை, சுசியம், போண்டா, வாய்ப்பன், கேசரி, சம்சா, றொல்ஸ், மோதகம், தொதல், பயிற்றம் உருண்டை ஆகியன 15, கறி பணிஸ் 20, ஜாம்பணிஸ் 25, பேஸ்ரி 20, பணிஸ் 10, கொம்பு பணிஸ் 15, சோடா வடி 32, சோடா மீடியம் ரூபா 47 என்ற விலைகளில் விற்கப்படுகின்றன.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உணவகத்தில் குறைவான விலையில் விற்கின்றபோது, மற்றைய உணவகங்கள் இதே போன்று குறைந்த விலையில் ஏன் விற்க முடியாது? எனவே மக்களின் நன்மை கருதி ஏனைய உணவகங்களும் விலை குறைப்புச் செய்து தரமான உணவுகளை வழங்குமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*இ.இராஜேந்திரா, அரியாலை.*

## சிவன் வடக்கு வீதி சீரமைக்கப்படுமா?


காங்கேசன்துறை வீதியையும் மானிப்பாய் வீதியையும்இணைக்கும் யாழ்/வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு முன்பாகச் செல்லும் வீதி, நீண்ட காலமாகச் சீரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகிறது. இந்த வீதி வழியாக பாடசாலைகளுக்கு செல்லும் மாணவ, மாணவியர் தினமும் படும் சிரமம் சொல்லும் தரமன்று. அதுவும் மழை பெய்தால் வீதியில் தேங்கி நிற்கும் வெள்ளம் அவர்களின் சீருடைகள், பாதணிகளைப் பாதிப்புறச் செய்வதுடன் பாடசாலை உபகரணங்களுக்கும் தீங்கு விளைவிப்பதாக உள்ளது.

இந்த வீதிக்குடியிருப்பாளர்களும், வர்த்தகர்களும், இந்த வீதியைப் பயன்படுத்தும் காரைநகர், மாதகல், இளவாலை செல்லும் அரச மற்றும் தனியார் பேருந்துகளும் பலத்த சிரமத்துடனேயே பயணம் செய்ய முடிகிறது. அன்றாடம் இந்த வீதியைப் பாவிக்கும் பல நூற்றுக்கணக்கானோரின் நலனைக் கருத்தில் கொண்டு இந்த வீதியைச் செப்பனிட உரிய அதிகாரிகள் முன்வர மாட்டார்களா?

மேலும் இந்த வீதி வழியாகத்தான் வண்ணை வேம்படி விநாயகர், கதிரேசன், வைஸ்தீஸ்வரர், அங்குசபாசப் பிள்ளையார் ஆகிய கோயில் சுவாமிகளும் வீதிவலம் வருகின்றனர் என்பதும், தற்சமயம் வண்ணை வைத்தீஸ்வரர் கோயில் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

*கி.வே.கிருஷ்ணானந்தன்,சிவன்பண்ணை வீதி.*

கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# நொண்டிக் குதிரைக்கு சறுக்கியது சாட்டு

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் ஆட்சியில் அமரும் பெரும்பான்மை அரசுகள் அனைத்தும் ஒரே எண்ணப்பாட்டையும் கருத்தொற்றுமையையும் கொண்டுள்ளன என்பது நாம் ஏற்கனவே அறிந்த விடயம்.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தொடரும் இந்த இனப்பிரச்சினைக்கு ஒரு நீதியான–நிலையான–நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கான முயற்சிகள் எதுவும் வெற்றியளிக்கவில்லை. இதனால் இந்தப் பிரச்சினை நீண்டுகொண்டே செல்கின்றது. ஆட்சிக்கும் வரும் பெரும்பான்மை அரசுகள், தமிழினத்தை தமது அடிமைகள் போன்று நடத்த முற்படுவதன் காரணமாகவே தீர்வை ஏட்டுவதற்கான இழுபறி நீண்டுகொண்டே செல்கின்றது. ஐக்கிய இலங்கைக்குள் சிங்கள இனம் அனுபவிக்கும் அதே உரிமைகள், சலுகைகள், வசதிகள் , வாய்ப்புகள் அனைத்தையும் தமிழினத்துக்கும் வழங்க வேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பு. அனைத்து இனங்களும் சமமாக நடத்தப்படவேண்டும் என்று தமிழர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறார்கள்.

ஆயினும், சிங்களப் பேரினவாத அரசுகள் தமிழினத்தை சிங்களவர்களுடன் சரிசமமாக எண்ணி, உரிமைகளை வழங்க முன்வராததால் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் முடிவின்றித் தொடர்ந்து இழுபடுகின்றது. தொடர்ச்சியாக உரிமைகள் மறுக்கப்பட்ட வந்த நிலையில், தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். ஆயுதப் போராட்டத்தின் மூலமே இனிமேல் உரிமைகளை வெல்ல முடியும் என நினைத்த அவர்கள் அந்தப் போராட்டத்தை ஒரு தலைமையின் கீழ் நகர்த்திச் சென்றார்கள். ஆயுதப் போராட்டம் தோற்றம் பெறுவதற்கான அடி அத்திபாரத்தை ஏற்படுத்திக் கொடுத்ததும் சிங்கள அரசுதான். சிங்கள அரசின் கடும் போக்கும், தமிழர்களுக்கு நாட்டுக்குள் இழைக்கப்பட்ட அநீதிகளுமே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தது.

அந்த ஆயுதப் போராட்டமும் கடந்த 2009ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாக இலக்கை எட்டாமல் முடிந்துபோனது. போராட்டம் நடைபெற்ற காலத்தில் போர் முடிவடைந்த பின்னரே இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிச் சிந்திக்கலாம் என்று கூறிவந்த இலங்கை அரசு, போராட்டம் முடிவடைந்து 6 ஆண்டுகள் கடந்தும் தீர்வுபற்றி மூச்சும் காட்டவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்னெடுப்பதற்கு பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன, தெரிவுக்குழு அமைக்கப்படுகிறது என்று சாட்டுப் போக்குகளைக் கூறி சர்வதேசத்தை ஏமாற்றியதே தவிர, தீர்வுக்காக அது உருப்படியாக எதையும் செய்யவில்லை. அந்த நிலை இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

முன்னர், ஆட்சியில் இருந்த மஹிந்த அரசு இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தை எவ்வாறு இழுத்தடித்து காலம் கடத்தியதோ அதேபோன்றே, மாற்றம் என்று சொல்லிக்கொண்டு ஆட்சியில் அமர்ந்த மைத்திரி அரசும் அச்சொட்டாகச் செய்கிறது.

100நாள் திட்டத்துக்கு நாட்டில் ஒரு புரட்சியையே உண்டுபண்ணி விடுவேன் என்று பறை தட்டிக்கொண்டு, கதிரையில் அமர்ந்த மைத்திரி தமிழர் தீர்வு விடயத்தில் கிஞ்சித்தும் அக்கறையற்றவராகவே இருந்துவருகிறார் என்பது தெளிவாகிறது.

கடந்த புதன்கிழமை கொழும்பில் ஊடகங்களின் ஆசிரியர்களை சந்தித்துப் பேசிய ஜனாதிபதி மைத்திரிபால, அங்கு வெளியிட்ட கருத்துக்கள் இனப்பிரச்சினை தொடர்பான மைத்திரி அரசின் நிலைப்பாட்டை கேள்விக் குறியாக்கியுள்ளன.

“இனப்பிரச்சினை தீர்வுபோன்ற சிக்கலான விடயங்கள் தற்பொழுது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா. பொதுத்தேர்தலின் பின்னர் அமைக்கப்படும் தேசிய அரசே, 13ஆவது அரசமைப்புத் திருத்தம், இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் பிரதான பிரச்சினைகள் குறித்து பரிசீலனை செய்யும். பொதுத் தேர்தலின் பின்னரே இவை நடக்கும். அதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்று பத்திரிகை ஆசிரியர்கள் மத்தியில் கூறியிருக்கிறார் மைத்திரி.

ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய வாக்குகளினால் மட்டுமே மஹிந்தவை வீழ்த்தி, ஆட்சிக் கதிரையில் மைத்திரியால் அமர முடிந்தது. தமிழர்களின் வாக்குப் பலமே மைத்திரியை வெற்றிபெறச் செய்ததுடன், மஹிந்தவையும் வீழ்த்தியது. இதனால், மைத்திரிக்கு இப்போது தமிழர்களின் வாக்குப் பலம் மட்டுமே தேவையாக உள்ளது. அதனால்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வை சிக்கலான விடயம் என்று கூறி, தட்டிக்கழித்துவிட்டு பொதுத் தேர்தலே முன்னர் நடக்கும் என்று கூறியிருக்கிறார். இதன்மூலம் தான் மீண்டும் ஆட்சிக் கதிரையில் அமர்வதற்கு தமிழர்களின் வாக்குகளை பயன்படுத்த முனைகிறார் ,அவர். வெற்றி பெற்று, ஆட்சியில் அமர்ந்துவிட்டால் பின்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தை தொடர்ந்தும் இழுத்தடித்துச் செல்லலாம் என்று அவர் எண்ணுகீறார் போலும். இவ்வாறு எண்ணும் மைத்திரி, ஒன்றை மறந்துவிடக் கூடாது.

நாட்டின் சிறுபான்மையினராக இருந்தாலும்கூட இலங்கையின் ஜனாதிபதிக் கதிரையில் யாரை அமர வைப்பது என்பதை தீர்மானிக்கும் தனிப்பெரும் சக்தியாக தமிழர்களே உள்ளார்கள். அந்தச் சக்தி மூலமே வீழ்த்தப்பட்டார் மஹிந்த. ஆட்சிக்கு வந்தார் மைத்திரி. அதே பலத்தின் மூலம் மைத்திரியையும் வீழ்த்துவது ஒன்றும் தமிழர்களுக்கு கடினமான விடயம் அல்ல. அவர்களுக்கு உரிய உரிமைகள், அரசியல் அபிலாசைகள் உரியவாறு வழங்கப்படாமல் இனப்பிரச்சினை தீர்வு விடயம் பெரும்பான்மையின் ஆட்சிக் கதிரைகளுக்காக இவ்வாறு இழுத்தடிக்கப்படுமானால், மஹிந்தவுக்கு நேர்ந்த அதே கதிதான் மைத்திரிக்கும்.

பத்தி எழுத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விடாக்கண்டன் கொடாக்கண்டன் நிலை என்றுதான் மாறுமோ.........?

இலங்கையின் அரசமைப்புக்குப் புதிதாகத் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கு, மைத்திரிபால சிறிசேன அரசு முடிவு செய்தமை பழைய செய்தி.

அந்த முடிவை, நாடாளுமன்றில் தீர்மானமாக முன்வைத்து, அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தமாக நிறைவேற்றுவதற்குப் புதிய அரசு நடவடிக்கை மேற்கொள்ள உள்ளமை இப்போதைய தகவல்.

உத்தேச அரசமைப்புத் திருத்தத்தை அமைச்சரவை அங்கீகரித்ததால், ஏற்றுக்கொண்டதால், அது அவசர சட்டமூலமாக, நாடாளுமன்றின் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படும். அதுவே நாடாளுமன்ற விதியுமாகும்.

மேலும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்வது குறித்து, அமைச்சரவை கடந்த வாரம் விசேடமாகக் கூடி ஆராய்ந்து, முக்கிய முடிவுகளை மேற்கொண்டது.

அமைச்சரவையின் குறிப்பிட்ட தீர்மானத்தின் சில முக்கிய அம்சங்கள் வருமாறு:

* ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை (சராசரி அளவுக்கு)மட்டுப்படுத்துதல்.

* நாடாளுமன்றத்தின் மேலாண்மையை அதிகரித்தல்.

*பிரதமருக்கு உரிய அதிகாரங்களை மேலும் வலுப்படுத்துதல்.

*ஜனாதிபதியின் பதவிக் காலத்தை இரண்டு தடவைகளுக்கு மட்டுப்படுத்தல்.

*ஜனாதிபதியின் பதவிக் காலம் ஒன்று, ஐந்து வருடங்களாக மட்டுப்படுத்தப்படும்.

*இனம் சார், மதம் சார் ஒற்றுமையைப் பேணுவதும், அதனை உறுதிப்படுத்துவதும் ஜனாதிபதியின் முக்கிய கடமைகளில் குறிப்பிட்டத்தக்கதாக அமைகின்றன.

*தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதில் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

*நீதித்துறை சுயாதீனமாக இயங்கவும், சுயாதீன ஆணைக்குழுக்கள் செயற்படவும் வகை செய்தல்.

உத்தேச பத்தொன்பதாவது அரசமைப்புத் திருத்தத்துக்கான திட்ட வரைவு, அறுபத்திரெண்டு பக்கங்களைக் கொண்டது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால், அது அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆயினும், தேர்தல் முறைமைகளைத் திருத்துவது தொடர்பில் இறுதித் தீர்மானம் அமைச்சரவையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் ஓர் "ஓட்டையாகவே" தெரிகிறது.

அந்த ஓட்டையை அடைக்கும் திறனும், வலுவும் புதிய அரசிடம் உண்டா என்ற சந்தேகம் தமிழ் மக்களின் மனங்களில் (குத்தும் முள் போன்று) உயர்ந்து நிற்கிறது.

இற்றைக்கு மூன்று வருடங்களுக்கு முன்னரும், அரசமைப்புக்குப் பத்தொன்பதாவது திருத்தம் கொண்டுவரப் போவதாகப் புலுமாசு காட்டப்பட்டிருந்தமை ஞாபகத்துக்கு வருகிறது.

அதிகாரப் பரவலாக்கலைப் பலமுள்ளதாக்குவதற்கு, அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கி, அதற்கு மாற்றீடாக - மாகாண முறைமையை மாற்றி, வடக்கு - கிழக்கு இணைந்த அர்த்தமுள்ள அதிகாரப் பரவல் கொண்ட, பத்தொன்பதாவது அரசமைப்புச் சீர்திருத்தம் கொண்டு வரப்படும் -- என்று அப்போதைய மஹிந்த அரசு புலுமாசு காட்டியதை, இலகுவில் மறக்க முடியுமா, என்ன....?

அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் வரப்போகிறது. அதற்கென்றே நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படும் என்றும் "வெறும்வாய் சப்பியது" மஹிந்த அரசு.

ஆனால், ஏதோ "நல்லகாலம்" தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சந்தேகம் கொண்டு அதில் பங்கு கொள்ளாமல் ("நாசுக்காக") தட்டிக்கழித்திருந்தனர்.

அதன் பின்னர், மொத்தத்தில் நடைபெற்றது என்ன? இணைக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு மாகாணங்கள், அமைச்சர் வீரவன்சவின் ஊடாகத் தொடரப்பட்ட வழக்கின் தீர்ப்பின் மூலம் ஒரேயடியாகப் பிரிக்கப்பட்டது.

இதனை இங்கு குறிப்பிடுவதற்கும் ஒரு காரணம் உண்டு.


தென்னிலங்கையில் எவர் தலைமையில், எந்த அரசியல் கட்சி பதவிக்கு வந்தாலும் --

அந்த அரசு தமிழ் மக்களுக்கான உரிமைகளில் எவற்றைத்தானும் வழங்க முன் வந்தாலும் ஹெல உறுமய போன்ற சிங்களக் கடும் கோட்பாடுடைய சக்திகள் அதற்கு இடம்கொடுக்குமா என்பது சந்தேகத்திலும் சந்தேகமே.

கொழும்பில் - தென்னிலங்கையில் -- பதவியைக் கவ்வும் எந்த அரசியல் கட்சியும் மேற்சொன்ன சாராரை எதிர்க்கவோ, பகைக்கவோ விரும்பார். ஏனெனில் அவையும், காலத்துக்குக் காலம் தமது நிலைப்பாடுகளை வாய்ப்புக்காக மாற்றிக் கொள்பவையே!

### தவறாகப் பயன்படுத்தப்பட்ட நிறைவேற்று

# அதிகாரங்கள்




■சேரலாதன்

இந்த நாட்டின் பெரும் சாபக்கேடாக கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக இருந்து வருவது ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரங்கள் என்பதை இலங்கை மக்கள் அனைவரும் அறிந்து கொண்டுள்ளனர். ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா 1977 இல் இடம்பெற்ற தேர்தலில் பெற்ற அமோக வெற்றியைத் தொடர்ந்து சர்வ அதிகாரங்களையும் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதியாக தம்மை மாற்றிக் கொண்டார். இந்த நிறைவேற்று அதிகாரங்களின் பிரகாரம் நீதித்துறை ஜனாதிபதியின் முன்னால் மண்டியிட்டு அடிமைப்பட்ட நிலையில் காணப்பட்டது.

நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டுள்ள ஜனாதிபதி எத்தகைய பெரிய குற்றமொன்றைப் புரிந்தாலும் அவரை நீதிமன்றங்கள் உட்பட எவருமே கேள்வி கேட்கமுடியாத நிலை காணப்பட்டது.

ஜனாதிபதி ஒரு சர்வாதிகாரியாகவே செயற்பட்டார். இந்த நிலையில் எவருமே எதிர்பார்க்காத நிலையில் மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்தி பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன தமது தேர்தல் பரப்புரைகளின்போது தாம் ஜனாதிபதியாகத்தெரிவானால்ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்கள் இல் லாது ஒழிக்கப்படுமென அறிவித்திருந்தார். அவரது இந்தக் கூற்று மக்களின் அமோக ஆதரவைப் பெற்றது. அரசியல் கட்சிகள் பலவும் அதனை ஆதரித்தன. இறுதியில் தேர்தல் முடிவுகள் மைத்திரிக்குச் சார்பாகவே அமைந்துவிட்டது. அவரும் தாம் வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. தற்போது அது தொடர்பான வாதப்பிரதி வாதங்களும் இடம்பெற்று வருகின்றன.



தற்போதைய அரசின் பிரதான பங்காளிக்கட்சிகளில் ஒன்றான ஹெலஉறுமய இந்த விடயத்தில் தீர்க்கமாக இருந்து வருவதையும் காணமுடிகின்றது. அதேவேளை ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களில் எட்டை இல்லாதொழிப்பது தொடர்பாக ஹெல உறுமயவைச் சேர்ந்த அமைச்சர் சம்பிக்க ரணவக்க சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு தற்போது பதவி வகிக்கும் ஜனாதிபதிக்கு சில அதிகாரங்கள் இருக்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆனால் எதிர்காலத்தில் பதவி வகிக்கப்போகும் ஜனாதிபதிகள் நிறைவேற்று அதிகாரங்கள் எவற்றையும் கொண்டிருக்க மாட்டார்கள். இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. ஜே.ஆருக் குப்பிறகு கடந்த காலங்களில் பதவிக்கு வந்த ஜனாதிபதிகள் தமக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்கள் நீக்கப்படுமென வாக்கு றுதி வழங்கிவிட்டு பின்னர் அதைக் காற்றில் பறக்க விட்ட நிலையே காணப்பட்டது. நிறைவேற்று அதிகாரங்களால் தமக்குக் கிடைத்த வரப்பிரசாதங் களை இழந்து விடுவதற்கு அவர்கள் விரும்பாததே இதற்கான பிரதான காரணமாகும். அந்த அதிகாரங்கள் இல்லாதொழிக்கப்பட்டுவிட்டால் ஜனாதிபதிப் பதவி வெறும் பொம்மை போன்று மாறிவிடுமென்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும். அரசமைப்பின் பிரகாரம் ஆறு வருடங்களோ அல்லது பன்னிரண்டு வருடங் களோ ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்து அதன் சுகத்தை அனுபவிக்க விரும்பும் அரசியல் வாதிகள் அந்தச் சுகத்தை இழப்பதற்கு எளிதில் துணிய மாட்டார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எல்லோருக்கும் மேலாகச் சென்று தமக்கு வழங்கப்பட்ட நிறைவேற்று அதிகாரங்களை தவறாகப் பயன்படுத்தினார். ஒரு சர்வாதிகாரி போன்றே நடந்தும் கொண்டார். மேலும் இரண்டு தடவைகளுக்கும் மேலாக ஜனாதிபதிப் பதவியில் அமர்வதற்குத் துடித்தார். மக்களையும், தன்னைச் சுற்றியிருந்தவர்களையும் நம்பாத அவர் சோதிடர்களை முழுமையாக நம்பினார். அவர்களின் ஆலோசனைப் பிரகாரம் தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அதில் மண் கவ்வினார். தற்போது கொழும் பில் கிடைத்த ஆடம்பர வாழ்வை மறந்து தமது சொந்த ஊரில் அடைபட்டுக் கிடக்கின்றார்.

ஆனால் தற்போதைய ஜனாதிபதி, ஜனாதிபதி பதவிக்கான ஆயுளை ஐந்து ஆண்டுகளாக வரையறை செய்ததுடன் ஒருவர் இரண்டு தடவைகளுக்கும் மேலாக ஜனாதிபதிப் பதவியில் நீடிக்க முடியாதவாறு அரசமைப்பில் மாற்றங்களைச் செய்யவுள்ளார்.

ஆனால் நேர்மையான ஒருவரிடம் நிறைவேற்று அதிகாரங்கள் இருப்பதில் தவறில்லை. அதனால் பல அனுகூலங்களும் உள்ளன. உதாரணமாக சிகிரியாவில் உள்ள புராதன ஓவியத்தின்மீது தனது பெயரைப் பொறித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட அப்பாவியான உதயசிறி என்னும் பெண்ணின் விடுதலைக்கு ஜனாதிபதி தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி உதவுவார் என்ற நம்பிக்கை தற்போது ஏற்பட்டுள் ளது.

ஆகவே தற்போதைய ஜனாதிபதி சில முக்கிய நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருப்பதே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும்.

எதிர்காலத்தில் பதவி வகிக்கப்போகும் ஜனாதிபதிகள் நிறை வேற்று அதிகாரங்கள் எவற்றையும் கொண்டிருக்க மாட்டார்கள். இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மு.தமிழ்மணி

# இலங்கையின் தேசிய கீதமும் இன பேதங்களும்

இலங்கையின் தேசிய கீதத்தை தமிழ்மொழியில் பாடுவதைத் தடைசெய்ய சிவில் நிர்வாக, கல்வித்துறை மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு உரிமையோ, அதிகாரமோ இல்லை. இது அரசமைப்பு உரிமையாகும். இதைத் தடை செய்வது சட்டவிரோதமாகும். இது சட்ட பூர்வ உரிமை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவரான மனோ கணேசனிடம் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கடந்த 17ஆம் திகதி அன்று இடம்பெற்ற நிறைவேற்றுச் சபைக் கூட்டத்தில் வைத்து இந்த உறுதியை வழங்கியுள்ளார்.

கடந்த 2013ஆம் ஆண்டு சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் தமிழ்ப் பகுதிகளிலும் தமிழ் பேசுகின்ற முஸ்லிம் பிரதேசங்களிலும் தமிழ் பாடசாலைகளிலும் மற்றும் பிற தேசிய நிகழ்வுகளிலும் தமிழில் தேசியகீதம் பாடப்பட்டது. அதற்குப் பின்னர் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ தேசியகீதத்தை தமிழில் பாடுவதற்குத் தடைவிதித்திருந்தார். சிங்கள மொழியில் மட்டுமே பாடப்படுதல் வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. தேசிய கீதம் தமிழ்மொழியிலோ, சிங்கள மொழியுடன் தமிழ்வரிகள் கலந்தோ இசைக்கப்படலாகாது என்றும் மஹிந்த ராஜபக்ஷ நல்லிணக்க அமைச்சராக இருந்த வாசுதேவ நாணயக்காரவிடம் தெரியப்படுத்தியிருந்தார். இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கோடு செயற்பட்ட அமைச்சரான வாசுதேவ நாணயக்காரவின் தமிழில் தேசிய கீதம் பாடப்படுதல் வேண்டும் என்ற தீவிர முயற்சியானது வெற்றி பெறமுடியவில்லை.

இலங்கையில் தேசிய கீதம் ஆனந்த சமரக்கோன் என்பவரால் 1940ஆம் ஆண்டு இசை நிகழ்ச்சிக்கென எழுதப்பட்டு பாடப்பட்டது. இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் 1952 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வின்போது நாட்டுப் பண் என்ற அங்கீகாரத்துடன் இந்தப் பாடல் இசைக்கப்பட்டது. சேர்.எட்வின் விஜயவர்த்தன என்பவர் தலைமையில் அரசால் நியமிக்கப்பட்ட குழு இந்தப் பாடலை தேசிய கீதமாக ஏற்று அறிவித்தது. இந்தப் பாடலுக்கான தமிழ் வசனங்களை மு.நல்லதம்பி என்பவர் உருவாக்கிக் கொடுத்திருந்தார்.



சிங்கள மொழியில் எழுதப்பட்ட தேசிய கீதம் அரசு முறை விழாக்களில் இசைக்கப்பட்டது. அதேபோல் தமிழ் மொழியில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டு தமிழில் உள்ள தேசிய கீதம் தமிழர்கள் வாழுகின்ற பகுதிகளில் பிரதான நிகழ்வுகளின் போது இசைக்கப்பட்டது. தமிழ்ப் பாடசாலைகளில் தமிழில் தேசிய கீதத்தைப் பாடுதல் வழமையான ஒன்றாகவே இருந்து வந்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் தமிழர்களின் தாய்மொழியைச் சிதைப்பதிலும் அழிப்பதிலும், தமிழர் பண்பாடுகளையும் கலாசாரங்களையும் தமிழர்கள் மத்தியில் இருந்து அடியோடு நீக்குவதிலும் தமிழுணர்வினை இல்லாமற் செய்வதிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். அத்துடன் தமிழில் தேசிய கீததைப் பாடுவதைத் தடை செய்ய வேண்டும். சிங்கள தேசத்தில் அதுவும் பௌத்தநாட்டில் எப்படித் தமிழில் தேசிய கீதம் இசைக்க முடியும் எனமஹிந்தவுக்கு நெருங்கிச் செயற்பட்ட இனவாதிகளான விமல் வீரவன்ச, உதயகம்மன்பில உட்பட மஹிந்தவுடன் இருந்த சிரேஷ்ட அமைச்சர்களும் சேர்ந்து மஹிந்தவுக்கு அறிவுரை கூறியிருந்தனர். சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதம் தமிழர்களைப் பாட வைக்க வேண்டும் என்ற இறுமாப்பில் இருந்த மஹிந்தவுக்கு இதுவும் ஒரு சரியான சந்தர்ப்பம் அமைந்துவிட்டது. திட்டமிட்ட இனவாதச் செயற்பாடுகளில் ஒன்றே தமிழில் தேசிய கீதத்தை பாட வைக்காமல் சிங்கள மொழியில் பாட வைத்தது என்று கூற முடியும்.

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்று வரையில் தமிழினத்தின் எந்த விதமான பிரச்சினையும் தீர்ந்தபாடில்லை. தீர்த்து வைப்பதற்கு எந்தவொரு சிங்கள அரசுகளும் முன்வந்ததில்லை.

இலங்கை ஒரே தேசம், ஒரே மக்கள் என்ற மஹிந்தவின் புராண படலத்தைப் புதிய அரசான மைத்திரி பால சிறிசேனவும் – ரணில் விக்கிரமசிங்க கூட்டு அரசும் போதிக்குமாக இருந்தால் தமிழில் தேசிய கீதம் பாடுவது அர்த்தமற்றதாகிவிடும். இருப்பினும் சம்பிரதாயத்துக்காகவே தமிழ் மக்கள் உதட்டளவில் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஒரு மொழியில் மட்டுமே தேசிய கீதம் இசைக்கப்படுவதில்லை. சுவிற்சர்லாந்தின் தேசிய கீதம் ஜேர்மன், பிரெஞ்சு, இத்தாலி, உரோமன் ஆகிய மொழிகளில் இசைக்கப்படுகின்றது. பெல்ஜியம் நாட்டில் தேசிய கீதம் பிரெஞ்சு, டச்சு, ஜேர்மன் மொழிகளில் இசைக்கப்படுகின்றது. கனடாவின் தேசிய கீதம் ஆங்கிலம்,பிரெஞ்சு மற்றும் பூர்வீக மொழியான இனுக்டிடட் ஆகியவற்றால் இசைக்கப்படுகின்றது. சிங்கப்பூரில் பெரும்பான்மையோர் பேசும் சீன மொழியில் தேசிய கீதம் பாடப்படுவதில்லை. மாறாக மலாய் மொழியிலேயே தேசிய கீதம் பாடப்படுகின்றது. மலாயர் சிங்கப்பூரில் இருபது வீதத்துக்கும் குறைவானவர்களே வாழுகின்றனர். இந்தியாவில் சிறுபான்மை மக்களின் வங்காள மொழியில்தான் இந்தியாவின் தேசிய கீதம் இசைக்கப்பட்டு வருகின்றது. அருகிலுள்ள நட்பு நாடான இந்தியா பெரும்பான்மையின மக்கள் கடைப்பிடிக்கின்ற இந்தியில் தேசிய கீதத்தை இசைக்கவில்லை. தென் ஆபிரிக்காவில் கூட கோட, சுலு, செசத்தோ, ஆபிரிக்கன், ஆங்கில மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுகின்றது. நியூஸிலாந்தில் ஆங்கிலம், மாவோன் ஆகிய மொழிகளில் தேசிய கீதம் பாடப்படுகின்றது.

1956இல் சிங்கள மொழிச் சட்டத்தால் இலங்கை நாடு பிரச்சினைகளை எதிர்கொண்டது. சிங்கள தேசமாக இலங்கையின் தலைவிதி மாறியது. தமிழர்க்குரிய உரிமைகள், சமஅந்தஸ்து தமிழ்மொழிக்கான சமவுரிமை எதுவுமே சிங்கள தேசத்தில் வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் தமிழில் இவ்வாறான நிலையில் தமிழிர் தேசிய கீதம் இசைக்கப்படுவதற்கு இருந்த தடை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வினால் நீக்கப்பட்டு விட்டது. இதில் மாற்றம் ஏதாவது நிகழுமா என்பதை எதிர்காலம் தான் கூற முடியும்.

"சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்று வரையில் தமிழினத்தின் எந்தவிதமான பிரச்சினையும் தீர்ந்தபாடில்லை. தீர்த்து வைப்பதற்கு எந்த வொரு சிங்கள அரசுகளும் முன்வந்ததில்லை.
இலங்கை ஒரே தேசம், ஒரே மக்கள் என்ற மஹிந்தவின் புராண படலத்தைப் புதிய அரசான மைத்திரிபால சிறிசேனவும் – ரணில் விக்கிரமசிங்க கூட்டு அரசும் போதிக்குமாக இருந்தால் தமிழில் தேசிய கீதம் பாடுவது அர்த்தமற்றதாகிவிடும். இருப்பினும் சம்பிரதாயத்துக்காகவே தமிழ் மக்கள் உதட்டளவில் இதனை ஏற்றுக்கொண்டுள்ளனர்.




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800 | 700 | 500 |
| நண்டு | 350 | 300 | 400 | 200 | – |
| கணவாய் | 500 | 450 | 600 | 500 | – |
| பாரை | 500 | 400 | 500 | 450 | 360 |
| சுறா | 550 | 500 | 650 | 600 | – |
| சீலா | 450 | 400 | 500 | 400 | 300 |
| விளை | 400 | 400 | 500 | 350 | 300 |
| முரல் | 350 | 300 | 400 | 300 | – |
| கும்பிளா | 350 | 250 | 450 | 450 | 250 |
| கிழாக்கன் | 400 | 500 | 400 | 400 | 300 |
| ஓரா | 350 | 250 | 450 | 350 | – |
| திரளி | 300 | 250 | 350 | 200 | – |
| நகரை | 300 | 200 | 300 | 300 | 250 |
| சூடை | 150 | 150 | 150 | 100 | 50 |
| ஒட்டி | 180 | 150 | 200 | 200 | – |
| திருக்கை | 180 | 250 | 150 | 200 | 130 |
| பாலை | 150 | 250 | 350 | 500 | – |
| வாழை | 250 | 100 | 250 | 250 | 200 |
| கொய் | 100 | 150 | 80 | 100 | – |
| மதனம் | 150 | 200 | 150 | 200 | 200 |

## உடலைக் காக்கும் கவசங்கள்

இன்றைக்கு மக்களை அதிகம் பயமுறுத்தும் உடல்நலப் பாதிப்புகளாக நீரிழிவும், இரத்த அழுத்தமும் இருக்கின்றன. ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கம், உடல் உழைப்பற்ற வாழ்க்கை முறை, துரித உணவுகள் என இதயத்தை பாதிக்கும் காரணிகள் இப்போது ஏராளம். நிம்மதியான வாழ்க்கைக்கு இரத்த அழுத்தம் அதிகரிக்காமலும், குறையாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இரத்த அழுத்தமானது இதயத்தைப் பாதித்து இதயம் சம்பந்தப்பட்ட நோய்களை உருவாக்குகிறது. இவற்றில் இருந்து விடுபட, சீரான வாழ்க்கை வாழ இயற்கை நமக்கு அளித்த கொடைகள்தான் பழங்களும், காய்கறிகளும். இதயம், உடல் உறுப்புகளைக் காக்க இயற்கை கொடுத்த சில கொடைகளைப் பற்றிப் பார்ப்போம்...

விளாம்பழத்தில் இருந்து கல்லீரல் மற்றும் இதயக் கோளாறுக்கான டானிக்குகள் தயாரிக்கப்படுகின்றன. விளாம்பழம் வயிற்றுபோக்கையும், வயிற்றுக்கடுப்பையும் நிறுத்தும் குணம் கொண்டது. வெயில் காலத்தில் அடிக்கடி தாகம் எடுக்கும்போது விளாம்பழம் சாப்பிடலாம். அடிக்கடி நெஞ்சுவலி ஏற்படும் நபர்கள் விளாம்பழத்தைச் சாப்பிட்டுவர அது சரியாகும்.

அடிக்கடி நெஞ்சுவலி ஏற்பட்டால், மாத்திரை மருந்து சாப்பிடுவதைவிட உளுந்து மாவைக் களியாகக் கிண்டி சாப்பிட்டு வந்தால் உடலுக்கும் பலம், நெஞ்சு வலியும் போகும். மாரடைப்பு, இதயநோய் வராமலிருக்க அடிக்கடி உணவில் வெங்காயம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நெஞ்சுவலி வந்தால் பேரீச்சம்பழத்தை அப்படியே கொட்டையுடன் இடித்துப் பிசைந்து, கொஞ்சம் கொஞ்சமாக நன்றாக மென்று விழுங்குங்கள். அதில் இரும்புச் சத்து நிறைந்துள்ள தால், நெஞ்சுவலியை எளிதில் குணப்படுத்தும். குப்பைமேனி இலையை உலர்த்தி இடித்து மெல்லிய துணியில் சலித்துக் கொண்டு, சமமாகச் சீனி சேர்த்து, 200 மி.லி. பசுவின் பாலில் கலந்து, காலையில் மட்டும் சாப்பிட்டு வரவும். இவ்வாறு 15 நாள்கள் சாப்பிட்டால் மார்பு வலி நீங்கி தேகத்துக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும். அப்பிள், அன்னாசி, தோடம் பழம் மற்றும் சீத்தாப்பழம் போன்ற பழங்களும் இதயத்துக்குப் பலம் சேர்க்கும். ஒரு நெல்லிக்கனியில் நான்கு அப்பிள்களுக்கு இணையான சத்துகள் உள்ளன, இதனை 'ஜாம்' ஆகவும், லேகியமாகவும் செய்து சாப்பிடலாம்.

## தவக்காலச் சிந்தனை

### நேர்வழி உழைப்பு இறைவழியின் அழைப்பு

உயர்ந்த வாழ்வு என்பது உழைப்பின் ஊக்கத்திலும் தன்மையிலும் தங்கியுள்ளது. வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நேரிய வழியில் கடின உழைப்பின் மூலம் சம்பாதிக்கும் செல்வமே நிலைத்து நின்று உதவும். அதேபோன்று ஆன்மிக வளத்தை மேம்படுத்த சீரிய நெறி முறையைக் கைக்கொண்டு ஒழுகும் வழிகள் பலம் சேர்க்கின்றன.

இன்று திருட்டு , மோசடி, லஞ்சம்,கொள்ளை, வழிப்பறி , ஏமாற்று உத்திகள் வழியாக உழைத்துவாழும் மக்களை உறிஞ்சி உயரும் குறுக்குவழிச் சம்பாத்தியம் பெருகிவிட்டன. இவ்வை இறைவனுக்கு ஏற்புடைய வழிகளா?

வியர்வை சிந்தி உழைத்து உருவாக்கிய இல்லங்கள் சொத்துக்கள் நாட்டின் அசாதாரண சூழலில் அழிவுற்றன. அபகரிக்கப்பட்டன. தற்போதும் நடைபெறுகின்ற போலிப்பொருள்கள் விற்பனை, இயற்கை வளங்களின் துஷ்பிரயோகம் என குறுக்கு வழி உழைப்புகளில் நாட்டம் அதிகரித்துள்ளது. உடலை வருத்தி உழைக்காது பிறர்பொருளில் நாட்டம் கொள்வதை விடுத்து தத்தமது முயற்சியால் முன்னேறும் வழிகளே மகிழ்ச்சி மிக்கதாகும். அத்துடன் உழைப்புக்கேற்ற ஊதியத்தை வழங்குவதன் மூலம் தொழில் முறைகேடுகளைத் தவிர்த்துக் கொள்வோம்.

அட்டைகள்போன்ற ஒட்டுண்ணிகள் வாழ்வை மாற்றி நெற்றிவியர்வை சிந்தி உழைப்பாயாக என்று இறைவன் ஆதி மனிதன் ஆதாமுக்கு இட்ட கட்டளையை மனதில்கொண்டு சோம்பலைத் தவிர்த்து நீதி,நேர்மை,நாயணம் என்பவற்றைக் கடைப்பிடித்து உழைத்து உயர்வோம். அதைப் பிறருடன் பகிர்ந்து மகிழ்வோம்.

எஸ்.யேசுதாஸ்,
கொழும்புத்துறை.

**நாளை**

பங்குனி–08
ஞாயிற்றுக்கிழமை 22.03.2015
திதி: துதிஎய மு.ப.11.47 வரை
நட்சத்திரம்: ரேவதி மு.ப.09.35 வரை
சுபநேரம்:09.17–10.47 வரை
இராகுகாலம்: 04.47–06.17 வரை
செல்லப்பாசுவாமி குருபூஜை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### புன்னகையோடு திகழுங்கள்



மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரையும் வழிபடுங்கள், பகவானை அனைத்து வடிவத்திலும் வழிபடுவதே நன்மை பெற நல்ல வழி.

உடல் மற்றும் மனதிலுள்ள குறைகளை நினைத்து துயரப்படுவதால் எமக்கு பயன் எதுவும் கிடைக்காது, அவற்றை ஒரு பொருட்டாக எண்ணாமல் ஊக்கத்தோடு இருப்பதே நன்மை தரும். எதிலும் பரபரப்பு தேவையில்லை, ஆனால், சுறுசுறுப்பு எப்போதும் தேவை. இந்த இரண்டையும் படைக்கலனாகக் கொள்பவர்கள் எந்த தடையையும் எதிர்த்து வெற்றி பெறுவர்.

மனித வடிவம் கொண்ட ஒவ்வொரு உயிரையும் வழிபடுங்கள், பகவானை அனைத்து வடிவத்திலும் வழிபடுவ்தே நன்மை பெற நல்ல வழி. இனிமையோடும், புன்னகையோடும் இருப்பது ஒருவனைக் கடவுள் அருகில் கொண்டு செல்லும்.

வாழ்வில் ஒருவன் விருப்பங்களையும், கோபத்தையும் அடக்கி ஆண்டால் உண்மையான சுதந்திரத்தையும், இன்பத்தையும் அவனால் உணர முடியும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 8 | 4 | 3 | 2 | 9 | 6 | 7 |
| 7 | 9 | 2 | 8 | 1 | 6 | 4 | 5 | 3 |
| 3 | 6 | 4 | 5 | 9 | 7 | 2 | 1 | 8 |
| 9 | 8 | 7 | 2 | 5 | 4 | 6 | 3 | 1 |
| 4 | 5 | 1 | 7 | 6 | 3 | 8 | 2 | 9 |
| 6 | 2 | 3 | 1 | 8 | 9 | 7 | 4 | 5 |
| 1 | 7 | 9 | 6 | 2 | 5 | 3 | 8 | 4 |
| 2 | 4 | 5 | 3 | 7 | 8 | 1 | 9 | 6 |
| 8 | 3 | 6 | 9 | 4 | 1 | 5 | 7 | 2 |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | | | | | 4 | | 5 |
| 5 | | 9 | | | | | | |
| 1 | | 2 | 4 | | 9 | | | |
| | | | 8 | 4 | | 6 | | 2 |
| 8 | 3 | | 5 | | 2 | | 4 | 7 |
| 4 | | 5 | | 1 | 6 | | | |
| | | | | | | 7 | | 3 |
| | | | | | | 5 | | 1 |
| 2 | | 8 | | | | | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற் படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல் களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள். கட்டங் கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்), இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலிலும் 1-9 வரையான எண்கள். இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படா மல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 20–30 | 40 | 30–40 | 40 | 20–30 | 40 | 40 | 20–40 |
| கத்தரி | 50–60 | 50 | 50–70 | 60 | 60–80 | 80 | 100 | 40–60 |
| கரட் | 100–120 | 100 | 100–120 | 120 | 80–100 | 140 | 100 | 80 |
| மரவள்ளி | 40–50 | 50 | 60 | 50 | 30–40 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 60–80 | 70 | 40 | 80 | 70–80 | 120 | 100 | 50–80 |
| பாகல் | 60–80 | 80 | 70 | 120 | 80–100 | 120 | 120 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 60 | 50 | 50 | 30–40 | 120 | 80 | 40–80 |
| பெ.வெங்காயம் | 70 | 90 | 100 | 80 | 80 | 70 | 80 | 40–80 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 50–80 | 70 | 60–80 | 70 | 80 | 40–80 |
| பூசணி | 50–70 | 50 | 50 | 60 | 40–50 | 60 | 100 | 70 |
| தக்காளி | 40–50 | 40 | 30 | 40 | 25–30 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 60–70 | 60 | 50–70 | 60 | 60–80 | 60 | 80 | 30 |
| கீரை | 25 –30 | 20 | 30 | 15 | 20–30 | 20 | 40 | 10 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 | 30 | 20 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 50–60 | 60 | 50–70 | 60 | 60–50 | 120 | 100 | 80 |
| புடோல் | 40–60 | 40 | 30 | 40 | 30–40 | 50 | 60 | 40 |
| கோவா | 40–50 | 40 | 30–50 | 40 | 20–30 | 50 | 80 | 40 |
| வெண்டி | 50–60 | 50 | 30 | 60 | 30–40 | 80 | 60 | 70 |
| போஞ்சி | 100–120 | 100 | 120 | 120 | 80–100 | 140 | 140 | 100–130 |
| லீக்ஸ் | 140–150 | 160 | 100 | 140 | 130 | 200 | 120 | 120–170 |
| தேங்காய் | 60–70 | 55 | 60 | 50 | 35–60 | 60 | 35–50 | 40–60 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 | 90 | 80–90 | 90 | 70–80 | 90 |
| தேசிக்காய் | 40 –50 | 40 | 60 | 35–60 | 30–40 | 40 | 50 | 40–50 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 30 | 10 |
| கறிமிளகாய் | 90– 100 | 100 | 120 | 120 | 120 | 160 | 140 | 100–130 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 120 | 80–100 | 120 | 140 | 80 |
| பனங்கிழங்கு | 04 | 02.50 | 05 | 04 | 03 | 05 | 03 | 04 |

# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவம்



"கலாபூஷணம்" இராசையா ஸ்ரீதரன்.

> யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதியில் காங்கேசன்துறை வீதியில் வானளாவ உயர்ந்த கம்பீரமான இராஜகோபுரத்துடன் காட்சியளிக்கும் இந்த வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் கடந்த 16ஆம் திகதி முதல் தொடர்ந்து 19 நாள்கள் திருவிழா இடம்பெறவுள்ளது. சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பிரசங்கம் செய்த இந்தக் கோயில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஒரு புகழ் பெற்ற தலமாகும். இதன் மஹோற்சவத்தைக் காண்பதற்காக யாழ்.குடாநாட்டின் பல பகுதி களிலிருந்தும் அடியார் கூட்டம் இந்த ஆலயத்தை நோக்கி வந்த வண்ண மிருப்பது பக்தி பூர்வமானது.

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமான். தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் இன்னல்களையும் இடுக்கண்களையும் நீக்கும் பொருட்டு வைத்தீஸ்வரனாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கும் தலம் தான் யாழ்ப்பாணம் பெரிய சிவன் கோயிலாகும்.

ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் கடந்த 16 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு இடம்பெற்ற கொடியேற்றத்துடன் இந்த வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதியில் காங்கேசன்துறை வீதியில் வானளாவ உயர்ந்த கம்பீரமான இராஜகோபுரத்துடன் காட்சியளிக்கும் இந்த வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் கடந்த 16ஆம் திகதி முதல் தொடர்ந்து 19 நாள்கள் திருவிழா இடம்பெறவுள்ளது.

சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பிரசங்கம் செய்த இந்தக் கோயில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ஒரு புகழ் பெற்ற தலமாகும். இதன் மஹோற்சவத்தைக் காண்பதற்காக யாழ்.குடா நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அடியார் கூட்டம் இந்த ஆலயத்தை நோக்கி வந்த வண்ணமிருப்பது பக்திபூர்வமானது.

க.வைத்திலிங்கச் செட்டியாரின் மேற்பார்வையில் பரிபாலனம் செய்யப்படுகின்ற இந்த ஆலயத்தில் தினமும் ஒவ்வொரு விதமான அலங்கார சாத்துப்படியுடன் வைத்தீஸ்வரப் பெருமான் வாலாம்பிகை அம்மை மற்றும் கணபதி, முருகனுடன் திருவீதி வலம் வருகின்ற காட்சியைக் காண்பதற்கு புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

இந்த ஆலய மஹோற்சவ நாள்களில் 10ஆம் திருவிழா அன்று சிவபெருமானுக்கு சந்திரசேகரப் பெருமான் என்னும் பட்டங்கட்டி அழகாக அலங்காரத்துடன் வீதி வலம் வரும் போது பக்தர் புடைசூழ மங்கல இசை முழங்க நடைபெறுகின்ற ஆனந்த கோலாகலம் சொல்லில் அடங்காது.

தொடர்ந்து தினமும் வெவ்வேறு வாகனங்களில் எம்பெருமான் திருவீதி வலம் வருகின்ற அற்புதக் காட்சி அழகே உருவானது. அது மாத்திரமன்றி, இந்தக் கோயிலின் சப்பரத் திருவிழாவும் பஞ்சரத பவனியும் தீர்த்தோற்சவமும் பூங்காவனமும் மிகச் சிறந்த திருவிழாக்களாகும்.

தேர்த்திருவிழாவின் போது ஸ்ரீ வைத்தீஸ்வரப்பெருமான்சோமாஸ்கந்தராக எழுந்தருளி சித்திரத் தேரில் ஆரோகணிப்பார். முதலில் விக்கினம் தீர்க்கும் விநாயகப் பெருமானின் தேர்வரும். அதற்கு அடுத்தாற்போல ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேதராக முருகப் பெருமான் தேர்வரும். பிறகு நடு நாயகமாக வைத்தீஸ்வரனுடைய சோமாஸ்கந்தர் எழுந்தருளி ஆரோகணிக்கும் அழகுத் தேர் அசைந்து அசைந்து ஆடிவரும்.

பின்னர் அம்பிகை தையல்நாயகி அம்பாளின் தேரும் இறுதியில் சண்டேஸ்வரப் பெருமானுடைய தேரும் அசைந்தாடி வரும் அழகு கண்களைப் பறிக்கும் கண் கொள்ளாக் காட்சியாகும்.

பஞ்சரதங்களும் பவனிவந்து திருவீதி வலம் முடிந்ததும் பச்சை சாத்தி பஞ்சமூர்த்திகளும் ரதத்திலிருந்து அவரோகணமாகி திருமடை, விசேட பூசை வழிபாடுகளுடன் ஆராதனை இடம்பெற்று ஆலயம் சேரும் ஆனந்த கோலாகல அற்புதக் காட்சி காண்பதற்குப் பூர்வஜென்ம புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

அடுத்தநாள் நிகழ்கின்ற தீர்த்தோற்சவ நாளன்று கோயிலில் இரண்டாம் வீதியிலுள்ள புஷ்கரணி தீர்த்தக்கேணியில் நடைபெறுகின்ற தீர்த்தவாரி அற்புதமான சந்தோஷ நிகழ்வாகும். தீர்த்தம் உற்சவத்தின் அருளலைக் குறிப்பதாகும். எம்பெருமான் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரனின் திவ்ய பேரருளுக்குப் பாத்திரமாகும் திவ்ய திருவிழா இதுவாகும்.

மஹோற்சவப் பூர்த்தி நாள் அன்று பூங்காவனத் திருவிழா மிகக் கோலாகலமாக நடைபெறும். அலங்கார பூஜிதராக ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் மாப்பிள்ளைக் கோலத்தில் அற்புத ஆனந்தக் காட்சிதரும் அழகு பக்திபூர்வமானது. அருகே அழகே உருவாக வாலாம்பிகை அம்மை மணப்பெண் கோலத்தில் காட்சி தருவார். பூங்காவனம் பார்க்க வரும் அடியார்கள் காணத் திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி திருவீதிவலம் வரும் காட்சி ரம்மியமானது.

இப்படி இந்தக் கோயில் திருவிழாக்கள் அழகே உருவாக நிகழ்கின்ற ஆனந்த கோலாகலம் சொல்லில் அடக்க முடியாத அற்புத நிகழ்ச்சியாகும். எனவே திருவிழாக்களைக் கண்டுகளித்து ஸ்ரீ வைத்தீஸ்வரனின் திவ்ய பேரருட்கடாட்சம் பெற்று வாழ்வாங்கு வாழ அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைப்படுகின்றனர்.

இந்த வருடாந்த மஹோற்சவம் சிறப்புடன் நடந்து அனைவரும் ஆனந்தக் கண்ணீர் சொரிய அவனருளாலே அவன்தாள் பணிந்து வைத்தீஸ்வரனின் திவ்ய திருவருள் பெற்றுய்வோமாக.



## யாழ். மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துகிறது எல்.பி. பினான்ஸ்

யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களின் பொருளாதாரங்களில் சிறந்ததொரு பங்களிப்பை வழங்கி மக்களின் வாழ்வாதாரத்தையும் பொருளாதாரத்தையும் உயர்வடையச் செய்யும் நோக்கில் வங்கிகள் தொடர்ந்து செயற்பட வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் எல்.பி. பினான்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ இயக்குநர் சுமித் ஆதி ஹெட்டி.

எல்.பி.பினான்ஸ் நிறுவனத்தின் 100ஆவது கிளையை நேற்றைய தினம் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரத்தில் போதிய அளவு முன்னேற்றத்தை ஏற்படுத்துவதே எமது நிறுவனத்தின் பிரதான குறிக்கோள். கடனுதவிகள் மட்டுமல்ல எமது நிறுவனத்தின் மேலும் சில கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு இங்குள்ள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்' என்றார்.

குறித்த நிறுவனத்தின் ஆரம்ப நாள் நிகழ்விலேயே சில உதவித் திட்டங்கள் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## பிளக்பெரி பாஸ்போர்ட்



கொழும்பு இலங்கை – கையடக்கத் தொலைபேசிப் பாவனைத் தொழில்சார் நிபுணர்களுக்கு ஒரு சக்தியான ஆயுத கருவியை வழங்க வேண்டும் என்ற தொடர்ச்சியான மூலோபாயத்தின் கீழ், அவர்களின் திறனாற்றலை மேலும் மேம்படுத்தும் வகையில், நடமாடும் தொலைத் தொடர்புப் பிரிவில், உலகளாவிய தலைவர்களான வரையறுக்கப்பட்ட பிளக்பெரி நிறுவனம் , இன்று, இலங்கையில் பிளக்பெரி பாஸ்போர்ட்டை அறிமுகம் செய்துள்ளது. மிகப் பெரிய சதுர வடிவிலான தொடுகைத் திரை, புத்தம் புதிய குவார்ரி தொடுகை கீபோர்ட் என்பனவற்றுடன் கூடிய பிளக்பெரி பாஸ்போர்ட் வர்த்தகத்துறை துறைசார் நிபுணர்களின் திறனாற்றல் மேம்பாட்டை மையமாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டுள்ளது. கையடக்கக் கருவியோடு தங்களை வலிமைப்படுத்தி, நாகரிக வடிவம்; அல்லது கையடக்கத் தன்மை என்பனவற்றைத் தியாகம் செய்யாமல் ஸ்மார்ட் போன் ஒன்றைவேண்டிநிற்பவர்களுக்குஇதுமிகவும்பொருத்தமானதாகும்.


எமது உற்பத்தி திறனாற்றல் வரிசையை, தொடர்ந்து சக்திமிக்கதாகக் கட்டியெழுப்பும் நாம், இத்தகைய ஒரு கருவியை அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். பிளக்பெரி பாஸ்போர்ட்டுடன், பிளக்பெரி மீண்டும் ஒரு மைல்கல்லை தொட்டுள்ளது. இது தற்போதைய கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்கள் மத்தியில், புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும். அதன் மூலம் அவர்கள் மேலும் சாதனைகளை புரிவர் என்று கூறினார் பிளக்பெரி இந்தியா விநியோகப் பணிப்பாளர் சமீர் பாத்தியா. அதன் உன்னதமான வடிவமைப்பு மற்றும் பண்புகள் காரணமாக, புதிய கண்டுபிடிப்பு மற்றும் திறனாற்றல் விருத்தி எனபனவற்றில் நாம் செலுத்திவரும் தொடர்ச்சியான கவனத்துக்குச் சான்றாகவும் இது அமைந்துள்ளது. எமது தொழில் முயற்சிப் பிரிவை வலுவூட்டுவதே அதன் விஷேட நோக்கமாகும் என்றும் அவர் மேலும் கூறினார்.

கையடக்கத் தொலைபேசியின் உலகளாவிய அடையாளம் கொண்ட, பிளக்பெரி பாஸ்போர்ட்டின் அளவு மற்றும் வடிவம் என்பன, சிறந்த கையடக்கப் பண்பு கொண்டதாகவும், எந்த நேரத்திலும், எந்த இடத்துக்கும், கையில் எடுத்துக் கொண்டு செல்லக் கூடியதாகவும் அமைந்துள்ளன. வடிவமைப்புக்காகப் பாவிக்கப்பட்டுள்ள உன்னதமான மூலப் பொருள்கள், அதன் உறுதிக்கு உத்தரவாதமாக அமைந்துள்ளன. ஒரு கையடக்கத் தொலைபேசியில், வர்த்தகத் துறை தொழில்சார் நிபுணர்கள் வேண்டி நிற்கும் பாவனைக் காலத்தை இது முழுமையாக வழங்குகின்றது.

பெரிய அளவிலான திரை, பார்வை மற்றும் உள்ளடக்க உருவாக்கங்களை இலகுவாக்குகின்றது. மின்னஞ்சல் வாசித்தல், அனுப்புதல், இணையத் தளங்களை பார்வையிடல், தேசப்படங்களில் இடங்களைத் தேடும் நடவடிக்கைகள் போன்ற தினசரி நடவடிக்கைகள் இதனால் மிகவும் இலகுவாக்கப்பட்டுள்ளன. கையடக்கத் தொலைபேசி தொழிற்துறையில்முதற்தடவையாகடைப்செய்தல்,எடிட்செய்தல்மற்றும் தேடல்களைமேற்கொள்ளல்போன்றனவற்றைமிகத்துல்லியமாக மேற்கொள்ளக் கூடிய கீபோர்ட் முறை வடிவமைக் கப்பட்டுள்ளது. (த)

# வர்ணம் தீட்டலாம் வாங்க...





## உலகிலேயே வெண்மையான பொருள் எது?

ஒருசமயம், தெனாலிராமன் அரசவையில் இருந்தபோது, தூக்கம் கண்ணைச் செருகியது. அதைக் கண்டு உறுப்பினர்கள் சிரித்து விட்டனர். அப்போது அமைச்சர், 'அரசே! தெனாலிக்கு வயதாகி விட்டது. ஓய்வு கொடுங்கள்' என்றார். அரசரிடம் பதில் இல்லை. மறுநாள் அரசர், 'என் மனதில் ஒரு கேள்வி, உலகிலேயே வெண்மையான பொருள் எது? இதற்குச் சரியான பதிலை நீங்கள் சொல்லி விட்டால், தெனாலியை ஓய்வு கொடுத்து அனுப்பி விடுவேன்' என்றார்.

அமைச்சர், 'வெள்ளி நகை தான்...' என்றார். அரசகுரு, 'பால் தான்!" என்றார். சிலர், 'சம்பா மலர்!" என்றனர். வேறு சிலர், 'மல்லிகை தான்" என்றனர். இன்னும் சிலர், 'சுண்ணாம்பு தான்!' என்றனர். அரசர் திருப்தி அடையவில்லை. தெனாலியிடம் கேட்டார். 'நாளைக்குக் கூறுகிறேன்' என்றார் தெனாலி. மறுநாள் தெனாலி வெள்ளி நகை, கொஞ்சம் பால், சம்பா மலர், மல்லிகை மலர்கள் ஆகியவற்றை வரவழைத்தார். சுண்ணாம்பும் வந்தது. பிறகு ஒரு பெரிய அறையில் தரை விரிப்பின் மீது அவற்றை வைத்து, கதவு மற்றும் ஜன்னல்களைச் சாத்தித் திரையிட்டார்.

வெளியில் வந்து, 'அரசே! இவர்களிடம் உள்ளே போய் அவரவர்கள் வெண்மை என்று கருதும் பொருளை எடுத்து வரச் சொல்லுங்கள்...' என்றார். அனைவரும் உள்ளே போயினர். அவர்களுக்கு உள்ளே இருட்டில் எதுவும் தெரியவில்லை. ஒருவருக்குப் பால் பாத்திரம் காலில் இடறி, பால் தரையில் கொட்டியது. இன்னொருவர் காலில் நகைகள் இடறின. வேறொருவர் பூக்களை மிதித்து விட்டார். ஒரு பாத்திரத்தில் இருந்த சுண்ணாம்பு கவிழ்ந்தது. மூவரும் பதறி, ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டனர். அதே சமயம் தெனாலிராமன் அறையில் மேற்புறக் கதவைத்திறந்தார். அறையில் ஒளி பரவியது. அப்போது அங்கிருந்த பொருள்கள் பளிச்சென்று தெரிந்தன. அச்சமயம், அரசர் கிருஷ்ணதேவராயர் உள்ளே வந்தார்.

உடனே தெனாலிராமன், 'அரசே! என்னுடைய பதில் இப்போது உங்களுக்கு விளங்கியிருக்குமே! உலகில் எல்லாவற்றையும் விட வெண்மையான பொருள் பாலோ, வெள்ளி நகையோ, சுண்ணாம்போ அல்லது மலர்களோ அல்ல. அப்படியிருந்தால், இருட்டறையில் அவை பளிச்சிட்டிருக்க வேண்டுமே! ஏன் கண்ணுக்குத் தெரியவில்லை? எனவே, உலகில் வெண்மையான பொருள் சூரியனின் பிரகாசம் மட்டும்தான். அதனால்தான் உலகின் மற்ற எல்லாப் பொருள்களும் பிரகாசிக்கின்றன' என்றார். அதைக் கேட்ட அரசர், மகிழ்ச்சியடைந்து, தெனாலியை வாரி அணைத்துக் கொண்டார். சபையினரிடம் அரசர், 'தெனாலிராமன் நமக்கு ஏன் இத்தனை பிரியமானவனாக இருக்கிறான் என்பதை இப்போது நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்களே...?' என்றார். 'தெனாலிக்கு ஓய்வு கொடுத்து அனுப்புங்கள்' என்று யோசனை கூறியவர்கள் எல்லாம் வாயடைத்துப் போயினர்.

## செங்கால் நாரைகள்

செங்கால் நாரைகள் அல்லது வர்ண நாரைகள் நீர்நிலைகளிலும், குளங்களிலும், காயல்களிலும் (உப்புநீர்) காணப்படும் பறவை ஆகும். வெள்ளை நிற செங்கால்நாரையின் அலகு மஞ்சள் நிறத்தில் நீண்டும், நுனி சிறிது கீழ்நோக்கி வளைந்தும் காணப்படும். சிறகின் நுனியில் நீண்ட ஊதா நிற சிறகுகள் காணப்படும். இதன் நாக்கு பனங்கிழங்கின் உள்குருத்துப் போன்றிருக்கும். இதன் முகமும், தலையின் முன்பகுதியும் இறகுகளற்றுக் காணப்படும். தூரப்பார்வையில் இது கறுப்பாகத் தெரிந்தாலும், இது அடர்ந்த ஊதா நிறமே. இரண்டு தோள்பட்டைகளின் நடுவிலும், முதுகின் பின்பகுதியில் வாலுக்கருகிலும் பளிச்சென்ற சிவப்புநிற இழை இறகுகள் சிதறியதுபோல் காணப்படும். மார்பில் இரண்டு சிறகுகளுக்கிடையில் ஊதாநிறப் பட்டை காணப்படும். வயிற்றின் பிறப் பகுதிகள் வெண்மை நிறத்தில் காணப்படும். வால் முக்கோண வடிவத்தில் ஊதா நிறத்தில் காணப்படும். கால்கள் சிவப்பு நிறத்திலும், சில சமயங்களில் இளம் ஊதா நிறத்திலும் காணப்படும். எங்கெல்லாம் வாழும் சூழ்நிலை காணப்படுகிறதோ அங்கு சென்று இரைதேடும். நீரில் நடந்துசெல்ல வசதியாக இறகுகளற்ற நீண்ட கால்கள், முன்னால் மூன்று விரல்களுடனும், பின்னால் ஒரு விரலுடனும் காணப்படும். விரலிடைச் சவ்வு தேய்ந்து காணப்படும். இவற்றின் சிறகுகள் மிகவும் அகலமானவை. பூமியின் வெப்பத்தால் மேலெழும் வெப்பக்காற்றில் பறப்பதால், எளிதாக பறந்துசெல்லும். எனவே, நாரைகள் பகலில்தான் இடம்பெயர பறந்துசெல்லும். பறக்கும்போது கழுத்தைச் சுருக்காது நீட்டி வைத்திருக்கும். கூட்டமாக, நேராக பறக்கும். நீர்நிலைகளில் இறங்கும்போது படிப்படியாக உயரத்தைக் குறைத்து வட்டமிட்டவாறே இறங்கும். மேலெழும்பும் போதும் வட்டமிட்டவாறே மேலெழும்பும். இவற்றின் ஆபத்தை உணரும் ஆற்றல் வியப்பிற்குரியது. யாரால் ஆபத்துவரும்? யார் பாதுகாப்பு தருவார்கள் என்பதை நாரைகள் எளிதில் உணர்ந்து கொள்ளும். நீரில் கூட்டமாக இரைதேடிச் செல்லும். அப்போது அலகைப் பிளந்தவாறே நீரில் தலையை நுழைத்து, இரு பக்கமும் அசைத்து மீனைப் பிடித்து அலகால் நசுக்கி கொன்று விழுங்கும். இதன் உணவுகள் மீன்கள், தவளைகள், பாம்புகள், பெரிய வெட்டுக்கிளிகள் முதலியனவாகும். குஞ்சுகளின் வெப்பத்தைத் தணிக்க சிறகுகளில் நீரை ஈர்த்து, கூடுகளின் மீது உதறும். சூரிய வெப்பம் குஞ்சுகளைத் தாக்காதவாறு காலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கியும், மாலையில் அதற்கு எதிராகவும், நண்பகலில் கூட்டிற்கு மேலேயும் நின்று பாதுகாக்கும்



## கிளி

பச்சை கிளி பேசுது
பறந்து செல்ல
அழைக்குது.
சிவந்த நிறச்
சொண்டினால்
சின்னப் பழம்
தின்னுது,
அவனி யெல்லாம்
தனதென்று
ஆடிப் பாடிச்
சொல்லுது.
சிற கடிக்க
நினைக்குது
சீறும் பூனை பார்க்குது
இறங்கி ஓடநினைக்குது
இரும்புக் கூடு தடுக்குது.
சிந்தை நொந்து
கலங்குது
சிறுமை கண்டு
சிரிக்குது
விந்தையான
மனிதனின்
விருப்பம் கண்டு
ஒதுங்குது.



# வெளிநாடுகளில் தஞ்சம் கோரியுள்ள ஊடகவியலாளர்கள் நாடு திரும்புவர்

## பேச்சுக்கள் இடம்பெறுவதாக ஊடக அமைச்சர் தகவல்

கொழும்பு, மார்ச் 21
கடந்த காலங்களில் அரசியல் அழுத்தம் மற்றும் உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக வெளிநாடுகளில் தஞ்சமடைந்த ஊடகவியலாளர்கள் மீண்டும் நாடு திரும்பத் தயாராக உள்ளனர் என்றும், அவர்களை இலங்கைக்கு கொண்டுவருவதற்கான பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன என்றும் வெகுஜன ஊடக மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் கயந்த கருணாதிலக சபையில் தெரிவித்தார்.
நாடாளுமன்றில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
முன்னதாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தனது கேள்வியில், கடந்த காலத்தில் காணாமற்போன அல்லது அழுத்தம் காரணமாக வெளிநாடு சென்ற ஊடகவியலாளர்கள் உள்ளனரா என்பதையும், அந்த ஊடகவியலாளர் களைக் கண்டுபிடிப்பதற்கு அல்லது இந்நாட்டுக்கு வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றும் கேட்டார்.
இதற்குப் பதிலளித்த அமைச்சர் கயந்த கருணாதிலக,
ஜனநாயக நாட்டில் ஊடக சுதந்திரம் இருக்கவேண்டும். கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் தமது கருத்துகளை வெளிப்படையாக முன்வைத்ததால் ஏற்பட்ட அரசியல் அழுத்தம், உயிர் அச்சுறுத்தல்கள் காரணமாக வெளிநாடுகளில் தஞ்சம்புகுந்துள்ளனர்.
–இவ்வாறு வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளவர்களை மீண்டும் நாட்டுக்கு வருமாறு நாம் அழைப்பு விடுத்துள்ளோம். அவர்களை நாட்டுக்கு கொண்டுவருவதற்கு நாம் முயற்சித்து வருகின்றோம். அதற்கான பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.
ஊடகவியலாளர் பிரதீப் எக்னெலிகொட தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம். அது மட்டுமன்றி, அவரது குடும்பத்துக்கான வருமான வழிமுறையொன்றைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துவருகின்றோம். மேலும், ஊடகவியலாளர் ரிச்சர்ட் சொய்ஸா கொலை தொடர்பில் விசாரிக்க நாம் தயாராக உள்ளோம் – என்றார். (த)

## சஜின் எம்.பிக்கு எதிராக குற்றப்பத்திரம்

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்திலேயே சொத்து மற்றும் கடன் சட்டம் பிரகடனம் சட்டத்தின் கீழே இந்தக் குற்றப்பத்திரம் நேற்று வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (த)


**முகாமையாளர் தேவை**

**தராசு விற்பனை நிலையத்துக்கு முகாமையாளர் தேவை.**

தொடர்பு: சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்
இல.55,57, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி.17165)
(45.3.7)

**அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலயப் பொதுக்குளிர்த்தி விழா**

**பங்குனிமாதம் 2ஆம் திங்கள் பொதுக்குளிர்த்தி விழா மேற்படி ஆலயத்தில் (23.03.2015) திங்கட்கிழமை பகல் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. அத்தருணம் அம்பிகையின் அடியார்கள் அனைவரும் பங்குபற்றி அம்பிகையின் அருட் கடாட்சத்தைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.**

ஆலய பரிபாலன சபை,
தொண்டர் சபை.

(57981)
(45.3.7)

**பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்-2015**

**யா/வயாவிளான் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் கல்லூரியின் முதல்வரும் பழைய மாணவர் சங்கத் தலைவருமான வே.த.ஜயந்தன் அவர்களது தலைமையில் கல்லூரி யின் ஆ.சி.நடராஜா அரங்கில் எதிர்வரும் 2015. 04.03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும். அன்றைய தினம் அனைத்து "வயவர்" களையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

யா/வயாவிளான் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்.
(57987)(4.3.7)


# தமிழ் மாணவர் எதிர்நோக்கும் குறைபாடுகள் களையப்படும்

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 21
எமது இனத்தின் பிரச்சினைகளை வெளியே கொண்டுவர வேண்டியது எமது கடமை. அதுவும் எல்லா வழிகளாலும் அடக்குமுறைக்குள்ளான எமது சமூகத்தின் கல்வியிலும் நிறையவே குறைபாடுகள் இருப்பதை பார்த்து கொண்டு இனியும் நாம் மௌனமாக இருந்துவிட முடியாது என கிழக்கு மாகாணசபைஉறுப்பினர்தவராசா கலையரசன் தெரிவித்தார்.
கல்வியால் உலகை வெல்வோம் எனும் குறிக்கோளுடன் அம்பாறை மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கி வரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசனின் தொடர் நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மறுவாழ்வு கனடா நிவாரணப் பணி அமைப்பின் அனுசரணையுடன் மத்தியமுகாம் கண்ணகி வித்தியாலயத்தில் அதன் அதிபர் செல்வசிகாமணி தலைமையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் த.கலையரசன், நாவிதன்வெளி பிரதேசசபை தவிசாளர் குணரெட்ணம், கல்முனை மாநகரசபை உறுப்பினர் சி.ஜெயக்குமார் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.
இந் நிகழ்வில் கருத்து தெரிவித்த கலையரசன்,
கடந்த அரச ஆட்சிக்காலத்தில் கூட்டமைப்பினராகிய நாங்கள் இப்படியான பாடசாலைகளுக்கு எமது இனத்திற்கு உதவி வழங்குவதற்கு கூட வர முடியாத நிலை இருந்தது. ஒரு வேளை நாங்கள் அவ்வாறு வந்து உதவிகள் வழங்க முன்வந்திருந்தோமானால் மறு நிமிடமே தொலைபேசி மூலமோ அல்லது தரகர்கள் மூலமோ பாடசாலை அதிபர்களை மிரட்டுவது அச்சுறுத்துவதுமான செயல்களே கடந்த ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் நடந்தது –
ஆனால், தற்போது புதிய அரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்றதன் பிற்பாடு நிலைமை ஓரளவு மாறி இருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசின் பங்காளிக் கட்சியாக மாறியுள்ளது. கிழக்கு மாகாணசபையிலும் இரண்டு அமைச்சர்களை ஏற்று இருக்கின்றது.
எமது இனத்தின் பிரச்சினைகளை வெளியே கொண்டுவர வேண்டியது எமது கடமை. அதுவும் எல்லா வழிகளாலும் அடக்கு முறைக்குள்ளான எமது சமூகத்தின் கல்வியிலும் நிறையவே குறைபாடுகள் இருப்பதை பார்த்து கொண்டு இனியும் நாம் மௌனமாக இருந்துவிட முடியாது.
தற்போது கிழக்கு மாகாண சபையில் கல்வி அமைச்சராக எமது கட்சியைச் சார்ந்தவர் ஒருவர் இருக்கின்றார். அவரிடம் எமது மாவட்டப் பாடசாலைகளிலுள்ள குறைபாடுகளைக் கொண்டு செல்வோம் என்பதை மட்டும் இந்த இடத்தில் உறுதியுடன் தெரிவித்து கொள்கின்றேன்.
எமது புலம்பெயர் உறவுகள் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கான உதவிகளை செய்து வருவதுடன் எமது மாணவச் செல்வங்களை கல்வியிலும் கலை, கலாசாரங்களிலும் முன்னேற்ற வேண்டுமென்ற நோக்குடன் தொடர்ந்தும் உதவிக் கரம் நீட்டிக்கொண்டு இருக்கின்றனர். இதன் ஒரு கட்டமாக இன்று மறுவாழ்வு கனடா நிவாரணப்பணி அமைப்பினூடாக இந்த கற்றல் உபகரணங்களை உங்களுக்கு வழங்குகின்றேன்–என்றார்.(த-30)


**1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....**

**யாழ் கலாலயா பயிற்சியகம்**

**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)**

**மகளிருக்கான குறுகிய கால பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling
(கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)





- Nail art
- முக அழகுக் கலை
(Facials)
- Pedicure, Manicure
(கைகள், கால்கள்,
விரல்கள்,
நகங்கள் அழகு படுத்துதல்)
மெஹந்தி போடுதல்



- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம்
முறைகளில் மணப்பெண் அலங்காரம்,
வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- (B) பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற
**தையல் பயிற்சிகள்.** (கிழமை நாட்களில் மட்டும்)





**புதிய பிரிவுகள் ஆரம்பம் 25.03.2015**
**புதன்கிழமை காலை 9.30 மணி**
**மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.**
-இயக்குநர்-


# பெரும் முட்டாள்தனமாக செயற்படுகிறதாம் இந்தியா

## நாலக்க தேரர் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 21.
ஈழம் உருவாகினால் அது இந்தியாவுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடுமெனவும், இதனைப் புரிந்து கொள்ளாமல் இந்தியா முட்டாள்தனமாகச் செயற்படுகிறது எனவும், தேசப்பற்றுடைய பிக்குகள் முன்னணியின் பொதுச் செயலாளர் பெங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
13ஆவது திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்று வழங்கப்பட வேண்டுமென வடமாகாண முதலமைச்சர் கோருகின்றார், 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி கூறுகின்றார், ஈழம் வேண்டுமென வட மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரி வருகிறார் என– இங்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியுள்ளார்.
தற்போதைய அரசு ஆட்சி அமைக்க, இந்திய உளவுப் பிரிவான 'றோ' விசேட வேலைகள் சிலவற்றை செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
இந்த நாடு ஐக்கியமான நாடு எனவும், அதிகாரப் பகிர்வு என்ற பேரில் நாட்டைப் பிளவடையச் செய்ய அனுமதிக்க முடியாது எனவும் தேரர் இதன்போது மேலும் கூறியுள்ளார். (த)

## கண்ணீர் அஞ்சலி



கலட்டி கற்பக விநாயகர் ஆலயத்தின் நித்திய பூசகர் பாலமுரளி ஐயா அவர்களின் அன்புத் தந்தையார்

**விஸ்வநாதக் குருக்கள் வேதமணவாள பண்டார சன்னிதிக் குருக்கள்**

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபையினர்
கலட்டி ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயம்

## துயர்பகிர்கின்றோம்



இரணைமடு 5ஆம் வாய்க்கால்
இடது கரை திட்ட உபகுழுத்தலைவர்

**சுப்பையா மனோகரன்**

அவர்களின் அன்புத் தந்தை

**முருகப்பர் சுப்பையா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கமநல சேவை நிலைய
இயக்குநர் சபை சார்பாக
கிளிநொச்சி (57984) (45.3.7) செ. சிவப்பிரகாசம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




மண்ணின் மடியில்
22.02.1927
ஆண்டவன் அடியில்
18.02.2015

**அமரர் சின்னத்தம்பி இராசையா (பேரன்)**

கடந்த (18.02.2015) வியாழக்கிழமை கனடாவில் சிவபதமடைந்த எமது குடும்ப தலைவர் அமரர் சின்னத்தம்பி இராசையா அவர்களினது வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (21.03.2015) சனிக்கிழமை அவரது மகளின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய பொலிஸ் நிலையவீதி,
சுன்னாகம் தெற்கு சுன்னாகம்.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**பொன்னையா சக்திவடிவேல் (சக்திவேல்)**

சங்குவேலி வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சக்திவடிவேல் (சக்திவேல்) 18.03.2015 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், கிரிசாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம், இரத்தினபூபதி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் பூபாலசிங்கம், திருபாலசிங்கம், மங்கையர்க்கரசி, கமலாதேவி, புஸ்பலீலாதேவி, மாணிக்க தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கிருபாகரன், முரளிதரன் மற்றும் பிரபாகரன், மனோகரன், சிறிதரன், பிரபாவதி, சந்திரவதனி, உமாராணி, கௌரி ஆகியோரின் மைத்துனரும், கவிதா, கீதா, சுவர்ணா (ஜேர்மனி), பிரதீபன் (ஆசிரியர்-கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்), சத்தியதீபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச செயலகம்-சங்கானை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜமோகன், சுரேஷ், தவசீலன், பவானி ஆகியோரின் மாமனும், நிருஷன், யனுஷன், கெவின், யொனார்த்தன், லிசான், சதுர்சி, சகிஸ்னன், சகின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்குவேலி, சங்கம்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

ச.பிரதீபன் (ஆசிரியர்-கிளி/பரந்தன் இந்து மகாவித்தியாலயம்)
ச.சத்தியதீபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம்-சங்கானை)

# 100 நாள் முடிவடையும்போது இந்தோனேஷியாவில் மைத்திரி

கொழும்பு, மார்ச் 21

புதிய அரசின் 100 நாள் செயற்றிட்டம் முடிவுறும் நாளான எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் இருக்கமாட்டார் என்றும், அவர் இந்தோனேஷியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான அரசு 100 நாள் செயற்றிட்டத்தின் முடிவில், நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்துவதாக ஏற்கனவே வாக்குறுதி அளித்திருந்தது. இதன்படி, எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, தேர்தல் அறிவிக்கப்பட வேண்டும். இதற்கான உத்தரவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே சிறப்பு வர்த்தமானி அறிவிப்பின் மூலம் வெளியிட வேண்டும்.

அதேவேளை, 100 நாள் செயற்றிட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் பலவற்றை தற்போதைய அரசு இன்னமும் நிறைவேற்றாத நிலையில், ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைப்பதா என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கலைப்பது பற்றிய முடிவுக்கு எதிர்ப்பும், ஆதரவும் தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், அந்த நாளில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டில் இருக்கமாட்டார் என்றும், வெளிநாடு செல்வார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் 22ஆம் திகதி தொடக்கம், 24ஆம் திகதி வரை இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில், ஆசிய ஆபிரிக்க மாநாட்டின் 60ஆவது ஆண்டு நிறைவையும், புதிய ஆசிய-ஆபிரிக்க மூலோபாய ஒத்துழைப்பு அமைப்பின் 10ஆவது ஆண்டு நிறைவையும், கொண்டாடும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் ஆரம்பகால உறுப்பு நாடான இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, இந்த நிகழ்வில் பங்கேற்குமாறு இந்தோனேஷிய அரசின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்தோனேசிய பிரதி வெளிவிவகார அமைச்சர், ஏ.எம்.பசீர், கடந்த 16ஆம் திகதி கொழும்பில் ஜனாதிபதியைச் சந்தித்து, இந்த அழைப்பிதழைக் கையளித்திருந்தார்.

இந்தோனேஷிய அதிபரின் சிறப்பு தூதுவராக வந்திருந்த, இந்தோனேசியப் பிரதி வெளிவிவகார அமைச்சரிடம், தாம் இந்த மாநாட்டில் பங்கேற்பதாக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி அளித்துள்ளதாக, இந்தோனேஷிய அரசு அறிவித்துள்ளது.

இதன்படி, ஏப்ரல் 22ஆம் திகதி தொடக்கம், 24ஆம் திகதி வரையும், இந்தோனேஷியாவில் நடைபெறும் மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்றால், எதிர்வரும் ஏப்ரல் 23ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படாது என்பது உறுதியாகிவிடும். (த)

# இரண்டு பில்லியன் டொலர் டுபாய் வங்கியில் பதுக்கல்

## மஹிந்த அரசில் இருந்த நால்வரால்

மஹிந்த ராஜபக்ஷ அரசில் இருந்தவர்களால், 2 பில்லியன் டொலருக்கும் அதிகமான கறுப்புப் பணம், டுபாயில் உள்ள வங்கிக் கணக்குகளில் இரகசியமாக வைப்பிலிடப்பட்டுள்ளதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

புதிய அரசு பதவிக்கு வந்த பின்னர், மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இருந்தே இது கண்டறியப் பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச் சாளர் ராஜித சேனாரத்ன தெரிவித் துள்ளார்.

இலங்கையின் முன்னணி அரசியல் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரின் பெயரில், டுபாய் வங்கியில் 1.064 பில்லியன் டொலர் வைப்பிலிடப் பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப் பினர் ஒருவரின் பெயரில் உள்ள இன்னொரு வங்கிக் கணக்கில் 500 மில்லியன் டொலர் வைப்பிலிடப் பட்டுள்ளது. மிக முக்கியமான பிரமு கரின் செயலர் 500 மில்லியன் டொலரை, ஊழலில் பெயர் போன மற்றொருவருடன் இணைந்து டுபாய் வங்கியில், வைப்பில் இட்டுள்ளார் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

எனினும் டுபாய் வங்கியில் பெரு மளவு பணத்தை வைப்பிலிட்டுள்ள முன்னைய அரசில் இருந்தவர்களின் பெயர்களை அமைச்சர் ராஜித சேனா ரத்ன வெளியிடவில்லை.

இது தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. 600 மில்லியன் டொலர் பணம் மீளப்பெறப்பட்டுள்ளதும், விசார ணைகளில் கண்டறியப்பட்டுள்ளது. இதுதொடர்பான விவரங்களை அமெரிக்க மற்றும் இந்தியநிதிப் புலனாய்வு முகவர் அமைப்புகளுக்கும் வழங்கியுள்ளோம். அவர்களும் எமது விசாரணைகளுக்கு உதவி வருகின்றனர்.

அதேவேளை, முன்னைய அரசில் இருந்தவர்களுக்கு நெருக்க மானவர்களால், வெளிநாடுகளில் 10 பில்லியன் டொலர் வரை பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள் ளார். (த)

## மரண அறிவித்தல்

**ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாதக் குருக்கள்**
**வேதமணவாள பண்டார சன்னிதிக்குருக்கள்**

தோற்றம் : 23.05.1926 மறைவு: 20.03.2015



தென் இந்தியா தமிழ்நாடு வேதாரணியம், வரணி ஆதீனத்தின் முன்னாள் ஆதீன கர்த்தாவும், தற்போது வரணி குருக்கள் குடியிருப்பைச் சேர்ந்தவருமான ஸ்ரீலஸ்ரீ விஸ்வநாதக்குருக்கள் வேத மணவாளபண்டார சன்னிதி குருக்கள் நேற்று (20.03.2015) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.03.2015) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு சரளப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரம்பக்குறிச்சி மேற்கு,
குருக்கள் குடியிருப்பு, வரணி.
தகவல்:
குடும்பத்தினர்.

# நான் போட்டியிடுவதை புளொட் தீர்மானிக்கும்

## சிலர் விஷமப் பரப்புரை என்கிறார் சித்தார்த்தன்

கொழும்பு, மார்ச் 21

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தான் எந்த மாவட்டத்தில் போட்டியிட வேண்டும் என்பது, மக்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு புளொட் அமைப்பு தீர்மானிக்குமே தவிர, மற்றவர்கள் தீர்மானிக்க முடியாது என கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் புளொட் அமைப்பின் தலைவருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் சித்தார்த்தனை வன்னி மாவட்டத்தில் போட்டியிடுமாறு கூட்டமைப்பில் உள்ள தனிநபர்கள் தரப்புக்க ளால் வலியுறுத்தப்படுவதாக வெளியாகி வருகின்ற செய்திகள் தொடர்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுத் தேர்தல் தொடர்பில் எந்தவிதமான கலந்துரையாடல்களோ, தீர்மானங்களோ கூட்டமைப்பில் உள்ள கட்சிகளுக்குள் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதுபோன்ற வதந்திகள் கூட்டமைப்பில் போட்டியிட விரும்பும் சில தனிப்பட்ட நபர்களினால் மேற்கொள்ளப்படும் தந்திரோபாய நடவடிக்கை என்றே நான் கருதுகிறேன்.

பொதுத் தேர்தல் தொடர்பில் தேசிய கட்சிகளே பல்வேறு அபிப்பிராயங்களை வெளியிட்டு வருகின்றன. ஆகையால் பொதுத்தேர்தல் எப்போது நடைபெறும் என்பதே தெளிவாக வில்லை.

ஆனால் பொதுத்தேர்தலில் போட்டியிட விரும்புகின்ற சில கூட்டமைப்பு சார்ந்த சிலரினால் இவ்வாறான கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார்.

மேலும், மாகாணசபை உறுப்பினர்களுக்கு இம்முறை பொதுதேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் அளிக்கப்படமாட்டாது என்று சில ஊடகங்களில் வெளியாகிய செய்தி தொடர்பில் கருத்து தெரிவித்த சித்தார்த்தன், இவ்வாறான செய்திகள் வெளியாகின்ற போதிலும், கூட்டமைப்பு தலைவர் சம்பந்தன், மாவை சேனாதிராசா ஆகியோர் இதனைத் தெரிவிக்கவில்லை. மாறாக ஒரு சிலர் தங்களது தேவைகளுக்காக இவ்வாறு பேசி வருகின்றனர். இது கூட்டமைப்பின் ஒற்றுமைக்கும், எதிர்காலத்திற்கும் ஆரோக்கியமானதாக இருக்காது என்றும் தெரிவித்தார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

# ராஜிதவின் குடும்பத்துக்கு நீதிமன்று அழைப்பாணை

கொழும்பு, மார்ச் 21

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன, அவரது மனைவி மற்றும் அவர்களுடைய இரண்டு மகன்மார் ஆகியோரை ஏப்ரல் 2ஆம் திகதி நீதி மன்றத்தில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம், நேற்று வெள்ளிக்கிழமை அழைப்பாணை பிறப்பித்துள்ளது.

வயது குறைந்த பெண்ணைக் கடத்திச் சென்று தடுத்து வைத்திருந்தார் என்று அமைச்சர் ராஜித சேனாரத்னவின் மகன்களில் ஒருவர் மீது குற்றஞ்சாட்டப் பட்டிருந்தது.

வயது குறைந்த பெண்ணை முன்னிலைப் படுத் துமாறு அந்தப் பெண்ணின் தந்தை, ஆட் கொணர்வுக் கட்டளை பிறப்பிக்குமாறு மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். ஒரு வருடத்துக்கு முன்னரே, அந்தப் பெண் கடத்தப்பட்டதாக அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## அத்துமீறிய

அவசர கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மீனவ பிரதிநிதிகள், இந்திய மீனவர்களது அத்துமீறிய மீன்பிடி தொடர்பில் கருத்துக்களை முன்வைத்ததுடன், இரு நாட்டு மீனவர் பேச்சில் தம்மால் முன்வைக்க வேண்டிய கோரிக்கை தொடர்பிலும் அமைச்சரிடம் ஆலோசனை கேட்டனர்.

இலங்கையின் இறையாண்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், இலங்கையின் மீன்வளம் பாதிக்கப்படுவதுடன், கடல் வளம் அழிக்கப்படுவது தொடர்பில் இந்திய மீனவர்களுக்கு எடுத்துக் கூறு மாறு அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையில் தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை அவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறி, இலங்கைக் கடற்பரப்பில் எல்லைதாண்டி மீன் பிடிப்பதை இலங்கை மீனவர்கள் ஒருபோதும் சம்மதிக்கப் போவதில்லை என்பதை உறுதியுடன் தெரிவிக்குமாறும் அவர் தெரிவித்தார். (ற-14)

## ஜனாதிபதி

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமார துங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர், வலி. வடக்கு மீள்குடியமர்வை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைப்பதற்கு யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர். அந்த நிகழ்வில் வளலாய் மக்கள் மற்றும் வயாவிளான் மக்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஆனால் அதைப் புறக்கணிக்கப் போவதாக அருட் தந்தையர்களும், பொதுமக்களும் கூறுகின்றனர்.

"இன்று ஏமாற்றப்பட்டு விட்டோம். எமது காணிகளை விடுவிப்பதாக அழைத்து காணிகளை விடுவிக்கவில்லை. இந்த நிலையில் ஜனாதிபதி பங்கு பெறும் நிகழ்வில் கலந்து கொள்வதில் அர்த்தமில்லை. சர்வதேச சமூகத்திற்கு இந்த அரசு முன்னெடுக்கும் நாடகத்தில் பங்கெடுக்க நாங்கள் தயாரில்லை"– என்று அருட்தந்தையர் ஒருவர் குறிப்பிட்டார்.

பொதுமக்களும், தாமும் இதில் பங்கெடுக்கப் போவதில்லை என்று தெரிவித்தனர். (ற-5)

## வயாவிளானில்

இராணுவத்தினர் பெரும் தோட்டங்களை அமைத்து விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். நிரந்தர தூண்கள் அமைத்து முள்ளுக்கம்பிகளால், நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பாதுகாப்பு வேலியிலிருந்து மூன்று மீற்றர் இடைவெளியில், இராணுவத்தினர் சென்று வருவதற்கு ஏற்ற உள்ளக வீதி அமைக்கப்பட்டுள்ளது.

வீதிக்கு அப்பால், மரத்தடிகளால் ஆன வேலி அமைக்கப்பட்டு அதனுள் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது வாழை மரங்கள் நடப்பட்டு அவை செழித்து வளர்ந்துள்ளன. மரவள்ளித் தடி இப்போது புதிதாக நடப்பட்டுள்ளது. அத்துடன் சோளனும் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவற்றுக்கு அந்தப் பகுதியிலுள்ள கிணறுகளிலிருந்து நீர் பெறப்படுகின்றது. அதற்கான நீர்இறைக்கும் இயந்திரமும் அதிலேயே நிரந்தரமாகப் பொருத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தினர் இவ்வாறு பயிர் செய்வதற் காகத் தான், மக்கள் பாவனைக்கு அந்தப் பகுதியில் அனுமதிக்கவில்லை – என்று வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் குறிப்பிட்டார். (ற-5)

## குடிதண்ணீரில்

தூய நீருக்கான செயலணியின் ஏற் பாட்டில் நடத்தப்பட்ட கண்டனப் பேரணி, ஏழாலை மயிலங்காடு ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தில இருந்து ஆரம்பமாகி சுன்னாகம் புன்னாலைக்கட்டுவன் வீதி வழியாக சுன்னாகம் நகரத்தை அடைந்தது.

பேரணியில் கலந்துகொண்டோர் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும்தாங்கி இருந்தனர். அதில் பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், ஊரவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பல தரப்பினருடன் வட மாகாண சபை உறுப்பினர்களான த.சித்தார்த்தன், பா.கஜதீபன் ஆகியோரும் வலி. தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ் எதிர்க்கட்சி உறுப்பினர் அரிகரன் மற்றும் உறுப்பினர்கள், தமிழ் தேசிய முன்னணியின் செயலாளர் கஜேந்திரன், இடது சாரி கட்சிகளைச் சேர்ந்த செந்திவேல் தமிழ் அழகன் எனப் பலர் கலந்துகொண்டனர். (ற-86)

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா வைத்தியநாதன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், ''கைலாசவாசம்'', முத்துக் கிருஷ்ணர் வீதி, சுன்னாகத்தை வாழ்விடமாகவும், தற்போது சுவிஸில் வசித்தவருமாகிய கந்தையா வைத்தியநாதன் 18.03.2015 புதன்கிழமை சுவிஸில் காலமானார்.

அன்னார் சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்திய கலாநிதி சின்னத்தம்பி கந்தையா-நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், இந்திராணியின் அன்புக் கணவரும், நந்தகோபனின் அன்பு தந்தையும், திருமதி அன்னலட்சுமி சேனாதிராயர், கைலாயர், திருமதி தவலட்சுமி சோமசேகரம், விசுவநாதன், திருமதி ஜெயலட்சுமி நடேசபாத இருதயன், நாகநாதன், காலஞ்சென்ற யோகலட்சுமி ஆகி யோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 22.03.2015 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் சுவிஸில் நடைபெறும். அன்றைய தினம் அன்னாரின் தாய்மனையான ''கைலாசவாசம்'' முத்துக்கிருஷ்ணர் வீதி, சுன்னாகத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"கைலாசவாசம்",
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.
தொ.பே: 0771298159, 0768394310

தகவல்:
சகோதரர்கள் சார்பில்
க. விசுவநாதன்

### திருமதி மகேஸ்வரி குமாரசாமி

(முன்னாள் ஆசிரியை யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்)



வண்ணார்பண்ணை ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி குமாரசாமி (முன்னாள் ஆசிரியை யா/பெரிய புலம் மகாவித்தியாலயம்) 19.03.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் களபூமி காரை நகரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-சுந்தரம்மா தம்பதியரின் ஏக புதல்வியும், களபூமி காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் மருமகளும், குமாரசாமியின் (முன்னாள் பிரபல வர்த்தகர் குருநாகல்) அன்பு மனைவியும், திருமதி சத்தியவதி வெற்றிவேலுப்பிள்ளை (கனடா), திருமதி மாலதி திருக்கேதீஸ்வரன் (தாவடி) திருமதி கலாவதி தேவன் (ஆசிரியர் யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை), இராசகுமார் (கனடா), சூரியகுமார் (கனடா), காலஞ்சென்ற ரமேஷ்குமார் மற்றும் கணேஷ்குமார் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19/1, ஐயனார் கோவிலடி,
வண்-மேற்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 6207

தகவல்:
குடும்பத்தினர்.

### பழனித்துரை மகேந்திரன்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ர சாலைப் பரிசோதகர்)



ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பழனித்துரை மகேந்திரன் (ஓய்வுபெற்ற சிரேஷ்ர சாலைப் பரிசோதகர்) நேற்று (20.03.2015) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பழனித்துரை-சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், செல்வியின் (வவா) அன்புக் கணவரும், கஜேந்திரன் (இ.போ. சபை பிராந்திய பரிசோதகர்), செல்வேந்திரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-கோப்பாய் பிரதேச செயலகம்), செல்வச்சந்திரன் (ஜேர்மனி), செல்வகாந் (அபிவிருத்தி உத்தியோகத்தர்-யாழ்ப்பாண மாவட்ட செயலகம்), பிரபாகினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரன், நடேஸ்வரன், காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் அமராவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சிவஞானம், தம்பிஐயா, முத்தையா, பரமராசா ஆகியோரின் சகலனும், காலஞ்சென்றவர்களான இராசமணி, தங்கம்மா மற்றும் பாக்கியம், பொன்னம்மா ஆகியோரின் மைத்துனரும், தர்சினி, நாதரூபினி (பிரதேச செயலகம்-கோப்பாய்), பானுகா (ஜேர்மனி), ஜெயதர்சன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்-கட்டடத்திணைக்களம் கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனும், கபிசன், கர்சயன், சாத்விகா, ரக்சியா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2015) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணிக்கு அவாது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சிறுப்பிட்டி கிந்துசிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன்-கஜேந்திரன்
(077 4128115)

## மரண அறிவித்தல்கள்



### செல்வி உதயகுமார் பவித்திரா (பவி)

அரியாலையைச் சேர்ந்த செல்வி உதயகுமார் பவித்திரா நேற்று (20.03.2015) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் உதயகுமார்-மாலதி (மாலா) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புப் பேர்த்தியும், பிரபாகரன் (யா/தபால் ஊழியர்)-நந்தினி, ஸ்ரீகரன்-சிவகௌரி ஆகியோரின் மருமகளும், மஞ்சுளா-சுரேஷ் (ஜேர்மனி), கௌசல்யா-யோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பெறா மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2015) சனிக் கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

539/4, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

### வசந்தகுமார் சங்கீர்த்தன் (பப்பி)

தோற்றம் : 09.08.2005 மறைவு : 20.03.2015



கட்டுக்காணி வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தகுமார் சங்கீர்த்தன் (பப்பி) நேற்று (20.03.2015) வெள்ளிக்கிழமை அகால மரண மடைந்தார்.

அன்னார் வசந்தகுமார்-திருவதனா தம்பதியரின் பாசமிகு மகனும், சஜிகரன், லக்ஷசுயந்தன், கேமலக்சன், டனுஷ், தனக்சியா ஆகியோரின் அன்புச் சகோதரனும், தங்கராசா காலஞ்சென்ற அமுதவல்லி, திருநாவுகரசு, சித்திராதேவி ஆகியோரின் அன்புப் பேரனும், தயாபரன், ரஞ்சன் (ரஞ்சன் ஜூவலரிஸ்), காலஞ்சென்றவர்களான மனோகரன், சயந்தகுமார் ஆகியோரின் பெறா மகனும், குகதர்சினி, நந்தினி, சாந்தினி ஆகியோரின் மருமகனும், வனஜா (ஜேர்மனி), கஜந்தினி ஆகியோரின் பெறா மகனும், திருக்குமார், காலஞ்சென்ற திலீப்குமார் ஆகியோரின் அன்பு மருமகனும், சஜிந்திகா (ஜேர்மனி), கேதுயன் (ஜேர்மனி), ஜியக்ஷியா ஆகியோரின் உடன் பிறவா சகோதரனும், கியுன்ஷிக்கா, கியூட்சன் ஆகியோரின் மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுக்காணி வீதி, சாவகச்சேரி.
077 3287539

தகவல்:
குடும்பத்தினர்.

### S.K. பொன்னுத்துரை (பொறியியலாளர் R.V.D.B)



மீசாலை வடக்கு, வயல்கரை சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பொன்னுத்துரை நேற்று (18.03.2015) புதன்கிழமை அதிகாலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற இளையதம்பி சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், நரேன் (லண்டன்), ரேகா (பிரான்ஸ்), சுரேன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், வேணி, பரமலிங்கம், ஆர்த்திகா ஆகியோரின் மாமனும், சின்னத்துரை, இராசதுரை, யோகநாதன் (ஓய்வு நிலைப் பீடாதிபதி, யாழ். தேசிய கல்வியற் கல்லூரி), கந்தசாமி, குமாரசாமி (சுவிஸ்), தவ யோகம் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற ஞானாமிர்தம் (இந்தியா), காலஞ்சென்ற தேவராசா (ஜேர்மனி) மற்றும் செகராஜா (RVDB), சந்திரலீலா (கனடா), காலஞ்சென்ற யோகராசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், துரைசிங்கம் (RVDB- இந்தியா), காலஞ் சென்ற வசந்தாதேவி (ஜேர்மனி) மற்றும் பரமேஸ்வரி (இளைப் பாறிய கால்நடை உத்தியோகத்தர் - வவுனியா), சிதம்பரநாதன் (தாசன் ஸ்ருடியோ-கனடா), திலகேஸ்வரி (கனடா) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2015) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
வயல்கரை, சாவகச்சேரி.

தகவல்.
மனைவி, பிள்ளைகள்.
021 3208587

### ஆபத்தை

எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த நிபுணர் குழு தெரிவித்தது.

தூயகுடிதண்ணீருக்கான செயலணியின் அமர்வு வடமாகாண அமைச்சர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் பண்ணையிலுள்ள வடக்கு மாகாண சுகா தார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதன் பின்னர் செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது.

நிபுணர் குழுவைச் சேர்ந்த, கிழக்குப் பல்கலைக்கழக கலாநிதி த.ஜெயசிங்கம், யாழ்.பல்கலைக்கழக இரசாயனவியல் துறைக் கலாநிதி கு.வேலாயுதமூர்த்தி, விவசாய பீடத்தைச் சேர்ந்த கலாநிதி நளினா ஞானவேல்ராஜா, பொறியியல் பீடத் தலைவர் கலாநிதி அ.அற்புதராஜா ஆகியோர் சந்திப்பை நடத்தினர்.

"9 பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்று வடமாகாண சபையினால் உருவாக்கப்பட்டது. முதலில் வெளிநாடுகளிலுள்ள வல்லுநர்களுடன் இணைந்து பணியாற்றினோம். சுன்னாகம் மின்நிலையத்தை மையப்படுத்தி 8 திசைகளிலும் 200 மீற்றர் இடைவெளியில் 2 கிலோ மீற்றர் தூரத்துக்கான மாதிரி வலையமைப்பு உருவாக்கப்பட்டது. அதில் முதல் ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டத்துக்குள் முதல் ஆய்வு நடத்தப்பட்டது. ஒவ்வொரு திசையிலும் தலா 5 கிணறுகள் வீதம் 40 கிணறுகளில் மாதிரி எடுக்கப்பட்டது."– என்று அவர்கள் கூறினார்கள்.

"கொழும்பு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் யாழ்.பல்கலைக்கழகம் என்பன தனித்தனியே மாதிரிகளை எடுத்து ஆய்வுக்குட்படுத்தின. கொழும்பு நிறுவன ஆய்வுகளின் 10 கிணறுகளிலும், யாழ்.பல்கலை ஆய்வின்படி 17 கிணறுகளிலும் எண்ணெய் காணப்பட்டது. கொழும்பு ஆய்வில் நியம அளவிலும் பார்க்க எண்ணெய் மற்றும் கிறீஸ் என்பன அதிகளவில் காணப்பட்டன. ஆனால் மொத்த எண்ணெய் மற்றும் கிறீஸ் என்பனவற்றை அளவிடும் பரிசோதனையின் போது, எண்ணெய், கிறீஸுக்குச் சமமாக மேலும் சில பதார்த்தங்களைக் காட்டிவிடும். அதாவது, ஆவிப்பதமற்ற பெற்றோலியம், ஐதரோ காபன்கள், மெழுகுகள், விலங்குப் பொருள் புர தங்கள், கனிம மற்றும் தாவர எண்ணெய்கள், சதக்காபன், கந்தக சேர்வைகள், சேதன சாயங்கள், குளோரோபின் போன்றவற்றைக் காட்டிவிடும். இந்தப் பதார்த்தங்கள் அனைத்தும் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்கள் எனக் கருத முடியாது."– என்றும் தெரிவிக்கப்பட்டது.

"உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய பதார்த்தங்களாகிய பென்சீன், தொலுயீன், ஈதையில் பென்சீன், ஓதோ சைலின், பரா சைலின் மற்றும் மெற்றா சைலின் போன்ற பதார்த்தங்களின சேதனப் பதார்த்தங்களை அளவிட வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் குறித்த ஒரு கிலோ மீற்றர் பரப்புப் பிரதேசம் பரிசோதிக்கப்பட்டது.

அதன் முடிவுகளின்படி எந்த ஒரு தண்ணீர் மாதிரியிலும் உள்ள பதார்த்த அளவுகள் சர்வதேச அளவுகளைவிட மேற்பட்டு இருக்கவில்லை. அதாவது 40 கிணறுகளில் 85 வீதமான கிணறுகளில் முற்றாக இல்லாமலும் 15 வீதமான கிணறுகளில் நியம அளவிலும் பார்க்க 200 மடங்கு குறைவாகவும் காணப்பட்டன. கொழும்பு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவன முடிவுகளின்படி பார உலோகங்களான லென், இரும்பு, கற்னியம், வனேரியம், ஆசனிக், நிக்கல், ரிங், கந்தலியப் படிவுகள் இல்லை என்று கூறுமளவுக்கு மிக மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டன."– என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"இதனொரு கட்டமாக 12 கிணற்று நீர் மாதிரிகள் சிங்கப்பூரிலுள்ள ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. தொடர்ச்சியான மேலதிக ஆய்வுக்குத் தேவையான உபகரணங்களை வெளிநாட்டிலிருந்து கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவின் ஆதரவுடன் ஜி.பி.ஆர். தொழில்நுட்பத்தைப் பாவித்து 90 அடி ஆழம் வரை ஸ்கான் மூலமாக மண்ணின் தன்மையை ஆய்வு செய்யும் பணி எதிர்வரும் 25 ஆம் 27 ஆம் திகதிகளில் ஆரம்பிக்கப்படும். இவைதவிர தடைத் திறன் ஆய்வு மூலமாக 120 அடி ஆழத்துக்கு ஆய்வு நடைபெறவுள்ளது. எரிபொருள் கணக்காய்வு நிலத்தடி நீரோட்டம் தொடர்பான ஆய்வுகளும் மேற் கொள்ளப்படவுள்ளன."– என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

"கொழும்பு கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவன ஆய்வறிக்கையின்படி முன்னர் மேற்கொண்ட ஆய்வில் 10 கிணறுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் 11 கிணறுகளில் சர்வதேச அளவிலும் பார்க்க அதிகமாகக் காணப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னர் ஒரு லீற்றருக்கு ஒரு மில்லிகிராம் எண்ணெய்த் தன்மை இருக்கலாம் என்று சுகாதார அமைச்சு அறிவித்தது. அதன்பிறகு இலங்கையில் கடந்த வருட இறுதியில் லீற்றருக்கு 2 மில்லிகிராம் எண்ணெய் இருக்க முடியும் என்று இலங்கைச் சுகாதார அமைச்சு மாற்றி அமைத்துள்ளது. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் வரும் 25 ஆம் திகதி தரையை ஊடுருவும் ராடர் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படவுள்ளது. இரண்டாம் கட்ட நீர் மாதிரிகளின் ஆய்வுகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும்."– என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ற–4)

### ஏமாற்றம்

பிரிவு மக்களிடம் கையளிக்கப்பட்டது. இந்த நிலையில் வலி.வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வயாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவு (ஜே/244) நேற்று விடுவிக்கப்படும் என்று கடந்த புதன்கிழமை மீள்குடியேற்ற அதிகார சபையின் தலைவர் ஹரிம் பீரிஸ் தெரிவித்திருந்தார்.

இந்த அறிவிப்புக்கு அமைய மக்கள், வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தின் எல்லைப் பகுதியாக விளங்கும் ஒட்டகப்புலத்திற்குச் சென்றிருந்தனர். அங்கு வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில் ஏற்கனவே பதிவு செய்தவர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டன. அத்துடன் புதிய பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

வல்லை – அராலி பிரதான வீதியில், ஒட்டகப்புலத்தில் வைக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டதும், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் கே.ஸ்ரீமோகனன், வலி.வடக்குப் பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம், அருட்தந்தையர்கள் எல்லோரும் விடுவிக்கப்பட்ட பிரதேசத்துக்குள் சென்றனர்.

பிரதான வீதியின் இருபுறமும் இராணுவ முகாம்கள் அப்படியே இருந்தன. பொதுமக்களின் வீடுகளில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களும் அப்படியே இருந்ததுடன், அவற்றுக்கு முன்பாக புதிதாக நிரந்தர பாதுகாப்பு வேலி அமைக்கும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். மீள்குடியமர்வுக்கான எந்த அறிகுறியும் காணப்படவில்லை.

விடுவிக்கப்பட்ட இடத்திலிருந்து 100 மீற்றர் தூரத்தில் இருந்த, ஒட்டகப்புலம் அமல உற்பவ அன்னை ஆலயத்துக்குச் சென்று வணங்கிய பின்னர் மீண்டும் பிரதான வீதியால் நடந்து சென்றனர். இதுவரை தடுத்து வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து, சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் பிரதான வீதியிலேயே இராணுவத்தினர் மக்கள் – அருட்தந்தையர்கள் – பிரதேச செயலாளர் எனச் சகலரையும் தடுத்து நிறுத்தினர். அதையடுத்து பொதுமக்களும், அருட்தந்தையர்களும், ஜே/244 கிராம சேவையாளர் பிரிவு முழுமையாக விடுவிக்கப்படும் என்று தெரிவிக் கப்பட்டிருந்தது. எஞ்சிய தோலகட்டி பிரதேசமும், வயாவிளான் கிழக்குப் பகுதிக்குள்ளேயே வருகின்றது. அதனைச் சென்று பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்று கோரினர். இதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கவில்லை. இந்த எல்லையைத் தாண்டிச் செல்ல முடியாது என்று தெரிவித்து அதில் உறுதியாக இருந்தனர்.

இதனால் கொதிப்படைந்த பொதுமக்கள், இராணுவத்தினரை கடுமையான வார்த்தைகளால் வாக்குவாதப் பட்டனர். பிரதான வீதியால் நடந்து வருவதற்காக எங்களை அழைத்தீர்கள் என்று பொதுமக்கள் இராணுவத்தினர் மீது சீறிச் சினந்தனர். இராணுவத்தினருடைய பதில்களைக் கேட்க தயாரில்லாத பொதுமக்கள், கடுமையாகப் பேசினர். எங்களது காணிகள் உள்ளேதான் இருக்கின்றது. விட்டே ஆக வேண்டும் என்று விடாப்பிடியாக நின்றனர்.

25 வருடங்களின் பின்னர் காணியைப் பார்க்கலாம் என்ற ஆவலோடு வந்தால், இவ்வாறு வீதியைக் காட்டி ஏமாற்றுகின்றீர்களா? வயாவிளான் கிழக்கில் எஞ்சிய பகுதிகளை ஏன் பார்வையிட அனுமதிக்க மறுக்கின்றீர்கள். நாங்கள் இன்று எவ்வளவோ வேலைகளை விட்டு, வவுனியா – மன்னார் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருக்கின்றோம். எங்களது காணிகளையாவது பார்வையிட விடுங்கள் என்று கெஞ்சினர். இராணுவத்தினர் எதற்கும் மசியவில்லை.

வயாவிளான் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளான ஒட்டகப்புலம், தோலகட்டி, வடமூலை ஆகிய பகுதிகளுக்குள் மக்கள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்தப் பகுதிகளை விட மறுக்கும் நீங்கள், ஏன் எங்களை மீள்குடியமர்வுக்கு வரச் சொல்லி அழைத்தீர்கள் என்று கடும் தொனியில் இராணுவத்தினருடன் தர்க்கப்பட்டனர்.

இராணுவத்தினர் மக்களை அனுமதிப்பதில்லை என்ற முடிவில் இறுதி வரையில் உறுதியாக இருந்ததால், பொதுமக்கள் ஏமாற்றத்துடனும் – விரக்தியுடனும், இராணுவத்தினரையும் புதிய அரசையும் திட்டித் தீர்த்தவாறே சோகமாகத் திரும்பினர்.

இதேவேளை– இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தை நேற்று மாலை தொடர்பு கொண்டு கேட்ட போது, இவ்வாறு இராணுவத்தினர் மக்களை அனுமதிக்காமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்றும், தெரியப்படுத்தப்பட்டால் இது தொடர்பில் மீள்குடியேற்ற அதிகார சபைத் தலைவருடன் பேசுவதாகக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன், மீள்குடியமர்வுச் செயற்பாட்டில் அரசு தமிழ் மக்களை ஏமாற்றுகின்றதா என்று கேள்வி எழுப்பியதுடன் கொழும்பில் இருக்கும் ஜனாதிபதிக்கும் – பிரதமருக்கும் இங்குள்ள நிலைமைகள் தெரியாது. அவர்கள் நேரடியாக மீள்குடியமர்வுப் பகுதிகளையும் மக்களையும் சந்திக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

"மக்கள் வந்து ஏமாற்றத்துடன் செல்கின்ற நிலைமைதான் இருக்கின்றது. விடுவிக்கப்பட்ட காணிகள் தோட்டக் காணிகளாகவோ அல்லது கலட்டிக் காணிகளாகவோ இருக்கின்றன. மக்கள் குடியிருப்புக்களை அண்டிய காணிகள் விடுவிக்கப்படவில்லை. பல எதிர்பார்ப்புக்களுடன் வந்த மக்கள் அழுகுரல்களுடன் வீடு திரும்பும் நிலைமைதான் ஏற்பட்டிருக்கின்றது.

அரசு ஆயிரத்து நூறு ஏக்கர் காணியை விடுவிப்பதாகச் சொன்னது. இந்த அறிவிப்பு எங்களும், சர்வதேச சமூகத்திற்கும் சொல்லப்பட்டது. வளலாயில் 233 ஏக்கரும், வயாவிளானில் 197 ஏக்கரும் விடுவிக்கப்படுவதாகச் சொல்லப்பட்ட போதும், சொல்லப்பட்ட அளவு காணிகள் விடப்பட்டனவா என்பது சந்தேகமே ?"– என்றும் தெரிவித்தார். (ற–5)

### மோடிக்கு

இதன் போது அவர் நிகழ்வு முடித்து வெளியேறுகையில், ராஜரட்டைப் பல்கலைக்கழக மூன்றாம் வருட மாணவனான திரவியச்செல்வம் ஸ்ரீரஜீவன் (வயது–26) பிரதமர் மோடியுடன் கைலாகு கொடுத்திருந்தார். இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு வலயத்தை மீறி குறித்த மாணவன் உள்நுழைந்து கைலாகு தொடர்பிலேயே தற்போது விசா ரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமருடன் கைலாகுவின் பின்னர், இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் குறித்த இளைஞனைக் கைது செய்து, இளவாலைப் பொலிஸாரிடம் கையளித்திருந்தனர். குறித்த இளைஞன் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு இடம் பெற்று வருகின்றது.

இந்த நிலையில், மேற்படி சம்பவத்தை மோசமான பாதுகாப்புக் குறைபாடாக எடுத்துக் கொண்டுள்ள, இந்தியப் பிரதமர் செயலகம், உடனடியாக உயர் மட்ட விசாரணைக்கும் உத்தரவிட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும் இந்த விசாரணையை, இந்திய புலனாய்வுப் பிரிவான 'றோ', வெளிவிவகார அமைச்சு, உள்துறை அமைச்சு ஆகியன இணைந்து மேற்கொண்டு வருகிறது. (ற–5)

### பொறுப்பற்ற

விபத்து நடந்துள்ளது. அதில் சாவகச்சேரி, கட்டுகாணி வீதியைச் சேர்ந்த வசந்தகுமார் சங்கீதன் (வயது–10) என்ற சிறுவனே உயிரிழந்துள்ளான்.

குறித்த சிறுவனும் அவனது 4 சகோதரர்களும் கிராயில் உள்ள தமது பேர்த்தியார் வீட்டுக்குச் சென்றுவிட்டு திங்கட்கிழமை வீடு திரும்பியிருந்தனர். அதற்காக கிராய் சந்தியில் பஸ்ஸுக்காகக் காத்திருந்தனர். அந்தநேரம் மோட்டார் சைக்கிளில் தலைக்கவசமின்றி இருவர் வந்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் பின்னிருக்கையில் இருந்தவர் பலகைகளை வைத்திருந்துள்ளார். செலுத்தியவர் காதில் கைத்தொலைபேசியின் 'ஹெட் போன்' மாட்டியிருந்துள்ளார். அவர்களின் முன்னால் பஸ் ஒன்று பயணித்துக் கொண்டிருந்தது. பின்புறமும் பஸ் ஒன்று சென்றுகொண்டிருந்தது. மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் முன்னால் சென்ற பஸ்ஸை வலப்புறமாக முந்திச் செல்லாது இடப்புறமாக முந்திச் சென்றனர். அப்போது மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்தவர் வைத்திருந்த பலகை வீதியோரமாக நின்றிருந்த சங்கீதனைத் தாக்கியது. அதில் அவன் தூக்கி வீசப்பட்டு, பள்ளம் ஒன்றில் விழுந்து படுகாயமடைந்தான்.

உடனடியாக சங்கீதன் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான். ஆயினும் சிகிச்சைகள் பயனளிக்காது நேற்று அவன் உயிரிழந்தான்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவருக்கு வாகனம் செலுத்துவதற்குரிய ஆவணங்கள் எவையும் இருக்கவில்லை என்று விசாரணையில் தெரியவந்துள்ளது. விபத்து இடம்பெற்று 5 நாள்களாகியும் பூநகரிப் பொலிஸார் விசாரணை நடத்தவில்லை என்றும் சிறுவன் இறந்த பின்னர்கூட விசாரணை நடத்தப் பொலிஸார் பின்னடித்தனர் என்றும் கூறப்படுகின்றது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி விசாரணை மேற்கொண்ட பின்னர் உடல் உறவினர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (ற–4)

### விபூசிகா

அவரது தாயான ஜெயக்குமாரியிடம் சட்ட ரீதியாக ஒப்படைக்குமாறு கோரி கிளி நொச்சி மாவட்ட சிறுவர் நன்னடத்தை அதிகாரியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம்.ஐ வஹாப்தீன் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, விபூசிகா மற்றும் ஜெயக்குமாரி ஆகியோர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அதனால் பயங்கரவாதக் குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் இருந்து அறிக்கை கிடைத்த பின்னரே இது குறித்துத் தீர்மானிக்கப்படும் என்று தெரிவித்து எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கில் வழக்காளர்கள் சார்பாக எஸ் விஜயராணி, சுந்தரேசசர்மா, ம.கிறேசியன், துஷ்யந்தி, றைக்காந்த் ஆகிய சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

விடுதலைப்புலிகள் அமைப்பை மீளுருவாக்கும் முயற்சிகளுக்கு உதவினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு ஜெயக்குமாரியும் அவரது மகளான விபூசிகாவும் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தனர். ஜெயக்குமாரி பூஸா சிறையில் அடைக்கப்பட, சிறுமி விபூசிகா சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்டு சிறுவர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தார். இந்தநிலையில் கடந்த 10ஆம் திகதி ஜெயக்குமாரி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ற–21)

### வயாவிளான் கிழக்கில்

சென்றிருந்தனர்.

ஆனால் இராணுவத்தினர், 2012 ஆம் ஆண்டு ஒட்டகப்புலத்தில் அமைத்த நிரந்தர பாதுகாப்பு வேலிகளைப் பின்நகர்த்தாமல் அப்படியே வைத்திருந்தனர்.

வல்லை – அராலி பிரதான வீதியை மாத்திரம் திறந்து விட்டிருந்தனர். அதனூடாக மக்கள் சுமார் 2 கிலோ மீற்றர் தூரம் மாத்திரம் சென்றனர். வீதியின் இரு பக்கமும் நிரந்தர பாதுகாப்பு வேலி அமைப்பதற்கான நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

தோலகட்டிச் சந்திக்கு நூறு மீற்றர் தூரத்துக்கு முன்பாக, வீதியை ஊடறுத்தும் நிரந்தரப் பாதுகாப்பு வேலியை அமைக்குப் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர். பைக்கோ இயந்திரத்தின் உதவியுடன், மக்கள் கண்முன்பாகவே அவர்களது காணிகளையும் வீடுகளையும், வளர்ந்துள்ள காட்டு மரங்களையும் வெட்டிச் சரித்து, உள்ளகப் பாதை மற்றும் நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணியில் இராணுவத்தினர் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இந்த நடவடிக்கைகள் கடந்த வெள்ளிக்கிழமைக்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் குறித்த பகுதிக்கு அரச அதிகாரிகள் சிலர் வந்து பார்வையிட்டுள்ளனர். அப்போது இவ்வாறான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மக்களை மீள்குடியமர்வுக்கு அனுமதித்த பின்னரே, இந்த நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று மக்கள் கண்முன்பாகவே, அவர்களது காணிகளுக்குச் செல்வதைத் தடுத்த இராணுவத்தினர், நிரந்தர பாதுகாப்பு வேலியை, பிரதான வீதியின் இரு மருங்கிலும், வீதிக்குச் சமாந் தரமாக அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். (ற–5)

### உங்களில்

வரையான காலப் பகுதியில் காசநோய் ஒழிப்புக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க இந்த நிதியுதவி கிடைக்கப் பெற்றுள்ளது.

காசம் ஒரு தொற்று நோயாகும். இந்நோய்க் காரணி சுவாசத்தின் ஊடாகவே தொற்றுகின்றது. அந்த வகையில் உலகில் வருட மொன்றுக்கு சுமார் 8–10 மில்லியன் பேர் இந்த நோய்க்கு உள்ளாகின்றனர். இவர்களில் சுமார் 1.5 மில்லியன் பேர் உயிரிழக்கின்றனர்."– என்று அவர் தெரிவித்தார்.

"இலங்கையில் வருடமொன்றுக்கு 8 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் பேர் வரையானோர் காசநோயாளர்களாக இனம் காணப்படுகின்றனர். ஆனால் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிவிப்பின்படி சுமார் 14 ஆயிரம் பேர் இந்நோயாளர்களாக இனம் காணப்பட வேண்டும்.

காச நோயானது முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய ஒரு தொற்று நோயே. ஏனைய தொற்று நோய்களைப் போன்று இதுவும் ஒரு நோய். என்றாலும் உலகில் இந்நோய்க்கு உள்ளாவோரில் 38 வீதமானோர் தென்னாசிய நாடுகளிலேயே பதிவாகின்றனர். இவர்களில் 23 வீதமானோர் எமது அயல் நாடான இந்தியாவைச் சேர்ந்தவர்கள். அதனால் நாம் மிகுந்த விழிப்புடன் செயற்பட வேண்டும்."– என்றும் அவர் தெரிவித்தார்.

"உலக வங்கி, உலக சுகாதார ஸ்தாபனம், சார்க் அமைப்பின் காசம், எயிட்ஸ் மத்திய நிலையம், இலங்கை தேசிய சங்கம் ஆகியனவும் காசநோய் ஒழிப்புக்காக உதவி, ஒத்துழைப்புக்களை நல்கி வருகின்றன."– என்றும் அவர் குறிப்பிட்டார். (ற–4)

# சம்பளம் கோரி தொடர்கின்றது பட்டினிப் போர்

*வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலை ஊழியர்களின்*

மட்டக்களப்பு, மார்ச் 21

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை ஊழியர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்கின்றது. ஊழியர்களது சம்பள நிலுவை முற்றாக வழங்கப்படும் என்று கடதாசி ஆலையின் தவிசாளரால் எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்டும் வரை, உணவு தவிர்ப்புப் போராட்டம் கைவிடப்பட மாட்டாது என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோர் தெரிவித்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை தங்களது நான்கு மாத சம்பள நிலுவையை வழங்கக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கடதாசித் தொழிற்சாலை ஊழியர்கள், கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் உணவு தவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், பிரதி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியின் பிரத்தியேக செயலாளர்



மற்றும் ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் அடங்கலான குழுவினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டக்காரர்களைச் சந்தித்து, சம்பள நிலுவை பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் இரண்டு தினங்களுக்குள் சம்பளம் வழங்கப்படும் என்றும் தெரிவித்தனர்.

மேலும், பிரதியமைச்சர் அமீர் அலி அலைபேசி வாயிலாக அழைப்பினை ஏற்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களுடன் உரையாடியுள்ளார். ஆனால், தமது சம்பள நிலுவை வழங்கப்படும் என கடதாசி ஆலையின் தவிசாளரால் எழுத்து மூலம் உறுதியளிக்கப்படுமானால் மாத்திரமே தங்களது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை கைவிடுவதாகவும் போராட்டத்தை ஊடகம் வாயிலாக வெளிக்கொண்டு வந்த ஊடகங்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கடதாசித் தொழிற்சாலை ஊழியர்கள் தெரிவித்தனர். (வ)

## மீண்டும் கொட்டப்படும் கழிவுகள்

தென்மராட்சி, மார்ச் 21

கைதடி - கோப்பாய் வீதியின் வெளியான பகுதிகளில் மீண்டும் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் அந்தப் பகுதியில் பயணிப்போர் அசௌகரியத்தின் மத்தியில் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

முன்னர் இந்த வீதியில் உள்ள வெளியான பகுதிகளில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசுவதாக உதயனில் செய்தி வெளியானதை அடுத்து சிறிது காலம் கழிவுகள் கொட்டப்படுவது நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் அந்த இடத்தில் மீண்டும் கழிவுகள் கொட்டப்பட்டு அண்மையில் பெய்த மழையை அடுத்து துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவித்த பொதுமக்கள் உரிய அதிகாரிகள் கழிவுகளை அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

இதேவேளை தென்மராட்சி - வலிகாமம் இணைப்பு வீதியாக குறித்த வீதி உள்ளதால் தினமும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயணித்து வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)



*திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட நல்லூர் ப.நோ. கூ. சங்கத்தின் கூட்டுறவுக் கிராமிய வங்கிக்கு யாழ்.-கிளிநொச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தமது சொந்த நிதியிலிருந்து 59 ஆயிரம் ரூபா பெறுமதியான கணினித் தொகுதி ஒன்றை வழங்கினார். குறித்த இடத்துக்குச் சென்று பணியாளர்களுடன் கலந்துரையாடிய பின்னர் அதனை வழங்கியுள்ளார். (வ)*

# மக்கி வீதிகளால் சறுக்கி விழும் நிலை

தென்மராட்சி, மார்ச் 21

சேதமடைந்த தார் வீதிகளை பிரதேச சபையினர் மக்கி வீதிகளாக மாற்றியதில் அதில் பயணிப்போரில் சில்லு சறுக்கி வீழ்ந்து இதுவரை 18 பேர் காயமடைந்துள்ளதாக அந்தப் பகுதி பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மட்டுவில் வடக்கு, வில்சன் சனசமூக நிலைய வீதி அதனுடன் இணைந்த ஆலடி ஒழுங்கை ஆகியவை சாவகச்சேரி கிராம சபை இருந்த காலத்தில் தார் வீதிகளாக அமைக்கப்பட்டன.

கனகன்புளியடிச் சந்தியை அண்மித்த பகுதியில் குறித்த வீதிகள் அமைந்திருந்ததால் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த காலத்தில் கனரக வாகனங்களின் பாவனையால் பல இடங்களில் சேத மேற்பட்டிருந்தது.

இந்த வீதிகளை புனரமைத்துத் தருமாறு கோரி அந்தப் பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து கடந்த 2012 ஆம் ஆண்டு மக்கி போடப்பட்டு புனரமைக்கப்பட்டது. இதனால் அந்த வீதிகளில் செல்வோர் குறிப்பாக மோட்டார் சைக்கிளில் செல்வோர் வீழ்ந்து காயமடையும் சம்பவங்கள் வீதியில் வழமையான நிகழ்வாகிவிட்டதாகவும் தெரிவித்தனர்.

குறித்த வீதிகளைத் தார் வீதிகளாக மாற்றித் தருமாறு பிரதேச சபை, மாகாண சபை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உரிய அதிகாரிகளுக்கு பல தடவைகள் நேரிலும் தபாலிலும் பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் இதுவரை பயன் கிடைக்க வில்லை என்றும் தெரிவித்தனர். இனியாவது அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்துவார்களா என்று கேள்வி எழுப்பு கின்றனர். (வ-9)

# பள்ளமடு-மகிழங்குளம் வீதி புனரமைப்பு ஆரம்பம்

மன்னார், மார்ச் 21

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பள்ளமடு-மகிழங்குளம் பிரதான வீதி புனரமைப்புப் பணிகள் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடக்கு வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வடமாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக குறித்த வீதி அமைப்பதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விடத்தல்தீவு,பள்ளமடு சந்தியில் இருந்து-மகிழங்குளம் வரையிலான 12 கிலோ மீற்றர் தூரம் கொண்ட வீதியே புனரமைப்புச் செய்யப்படுகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய 457 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் குறித்த வீதி புனரமைக்கப்படவுள்ளது.

வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கைத்தொழில் வர்த்தக வாணிப அமைச்சர் ரிஸாத் பதியுதீன், சிறப்பு விருந்தினர்களாக தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன், கௌரவ விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் சிறிஸ்கந்தராஜா, மாந்தை மேற்கு பிரதேச சபையின் தலைவர் வரப்பிரகாசம் உட்பட பலர் கலந்து கொண்டு குறித்த வீதியின் அபிவிருத்தி நடவடிக்கைகளை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தனர். (வ-56)



# அரச ஊழியரைச் சந்திக்கிறார் சுகாதார அமைச்சர்

வவுனியா, மார்ச் 21

வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் அரச ஊழியர் வீட்டுத் திட்ட அரச ஊழியர்களை வடமாகாணசுகாதார அமைச்சர் சந்திக்கிறார்.

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட பகுதியில் உள்ள அரச ஊழியர்களுக்கு சீரான பாதை, போக்குவரத்து வசதி, வர்த்தக நிலையங்கள், முன்பள்ளி, ஆலயங்கள் உட்பட பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்ய குறித்த அரச ஊழியர்களுக்கான காணிகளுக்கு இன்னமும் உறுதிவழங்கப்படாமை மற்றும் பொது இடங்களில் பொதுக்கட்டடம் அமைப்பதற்குரிய அதிகாரம் வீடமைப்பு அதிகார சபைக்கு உத்தியோக பூர்வமாக அரசு கையளிக்காமையால் அவை நடைபெறவில்லை. வீதி புனரமைக்க பிரதேசசபைக்கு உரிய அதிகாரம் வழங்காமை போன்ற பல்வேறு பிரச்சினைகளை வட மாகாண முதலமைச்சரிடம் ஓமந்தை அரசஊழியர்வீட்டுத்திட்ட கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அண்மையில் தெரியப்படுத்தினர்.

இதுதொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டது.

இதன்பிரகாரம் அந்தப் பிரதேச அரச ஊழியர்கள் நாளை ஞாயிற்றுக் கிழமை 3 மணிக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கு.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர். இதன்போது வடக்கு மாகாண அமைச்சரை அரச ஊழியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள் ளார். (வ-402)



எமது பாரம்பரிய உணவு மரபை ஞாபகப்படுத்தலின் ஊடாக கடந்த காலத்தின் நீண்ட ஆரோக்கியமுள்ள மனிதர்களையும், அவர்கள் இயற்கையுடன் கொள்ளும் உறவையும் நினைவூட்டுதலின் மூலம் அந்நிய உணவாதிக்கம், கலாசார ஆதிக்கம் என்பவற்றுக்கு எதிரான மாற்று ஞாபகம் ஒன்றை உருவாக்கல்."– என்ற தொனிப் பொருளில் விதை குழுமத்தால் நேற்று யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய உணவுகளுள் ஒன்றான இலைக்கஞ்சி மக்களுக்கு வழங்கப்பட்டது. நல்லூர் பின்வீதியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்கள் இலைக் கஞ்சியைப் பருகினர். (ற)

# உரிய அனுமதி பெற்றபின்பே மாலா பாக்கு விற்க முடியும்

## யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

மாலா பாக்கு விற்பனை செய்பவர்கள் அதில் கலந்து விற்பனை செய்யும் பொருள்களின் அளவுகள் குறித்து மாநகரசபைக்குத் தெரியப்படுத்தி சபையின் அனுமதி பெற்ற பின்னரே அவற்றை விற்பனை செய்யமுடியும். அதுவரை நிக்கொட்டின் போன்ற போதைப்பொருள்களைக் கலந்த பாக்குகள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது– இவ்வாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.

போதைப் பாக்குகள் விற்பனை செய்யும் வியாபாரிகள் தமக்கு அதற்கான அனுமதி தரும்படி கேட்டு சபைக்கு விண்ணப்பித்திருந்தனர். இந்தப் பாக்குகள் விற்பனையால் சமூகக்கேடுகள் நிலவுவதாகக் கருதும் ஆணையாளர் இது தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களைத் தெரிந்து கொள்வதற்காக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை யாழ். மாநகரசபையில் பொதுமக்கள் பாக்கு வியாபாரிகளுடன் கலந்து ரையாடினர்.

"நாங்கள் அளவுக்கதிகமாக நிகொட்டின் போன்றவற்றை கலப்பதில்லை. 21 வயதுக்குக் குறைவானவர்களுக்கு அவற்றை விற்பனை செய்வதில்லை. தற்சமயம் எமது கடைகள் மூடப்பட்டுள்ளதால் பொருள்கள் பழுதடைகின்றன. நாங்கள் வியாபாரத்தைத் தொடரக்கூடியதாக மாநகரசபை உரிய அனுமதி தர வேண்டும்."– என்று அதன்போது வியாரிகள் கோரிக்கை விடுத்தனர்.

"நீங்கள் கடைகளில் உள்ள பாக்குடன் கலக்கப்படும் போதைப் பொருள்களின் விவரங்கள், அளவுகள் குறித்து தனித்தனியாகத் தமது விண்ணப்பங்களை சபைக்கு வழங்கினால் இது தொடர்பாக பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் ஆலோசிக்கப்பட்டு அவர்கள் அனுமதிக்கும் பட்சத்தில் சபை உரிய அனுமதியைத் தரும். சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் அனுமதி உடனடியாகக் கிடைக்கும் என்பது சொல்ல முடியாததால் அவர்களின் அனுமதி கிடைக்கும்வரை மாநகரசபை எதுவும் செய்யமுடியாது. நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். அதுவரை கடைகளைத் திறக்கமுடியாது"– என்று ஆணையாளர் எஸ்.பிரணவநாதன் தெரிவித்தார்.

அதன்போது, பொலிஸார் லஞ்சம் பெற்றுக்கொண்டு வியாபாரம் செய்ய அனுமதிக்கிறார்கள் எனவும் வியாபாரிகள் குற்றம் சாட்டினார்கள். இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இல்லை எனக் கூட்டத்தில் கலந்து கொண்ட உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன் தெரிவித்தார்.

நகரப்பகுதியில் உள்ள பெரிய கடைகளிலும் கூட இவை சிறிய அளவில் விற்பனை செய்யப்படுவதாகவும் அது தடைசெய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி உட்பட எழுபத்தி ஏழு பாக்கு வியாபாரிகள், மாநகரசபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் இதில் கலந்து கொண்டனர். (ற-7)

# வவுனியா அரச அதிபருக்கு எதிராக சபையில் தீர்மானம்

## மக்கள் பிரதிநிதிகளை அவமானப்படுத்திய அவரை இடமாற்றுமாறும் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 21

வவுனியா மாவட்ட மக்கள் பிரதிநிதிகளை, வவுனியா மாவட்ட அரச அதிபர் பந்துல ஹரிச்சந்திர அவமானப்படுத்தியமை தொடர்பில், வடக்கு மாகாண சபையில் கண்டனத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் ஊடாக ஜனாதிபதிக்கு இதனைத் தெரியப்படுத்தி அரச அதிபரை இடமாற்றம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

வடமாகாண சபையின் 26 ஆவது அமர்வு கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், விசேட கவனவீர்ப்புப் பிரேரணையை சபையில் முன்வைத்தார்.

கடந்த 2 ஆம் திகதி வவுனியா சிதம்பரபுரம் மக்கள் தமது வீட்டுத் திட்டம் தொடர்பில் மாவட்ட அரச அதிபருக்கு மனு கையளிப்பதற்காக ஊர்வலமாக மாவட்டச் செயலகத்திற்குச் சென்றனர். அவர்களை மாவட்டச் செயலகத்துக்குள் உள்நுழைய விடாது பொலிஸார் தடுத்தனர். 5 பேரை மாத்திரமே அரச அதிபர் சந்திக்க முடியும் என்று கூறுகின்றார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். அதையடுத்து பொது மக்களும் – பொலிஸாருக்கும் இடையில் முரண்பாடு தோன்றியுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பகுதியால் சென்ற வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதனை, வவுனியா மாவட்ட பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரி இடைமறித்ததுடன், மக்களுடனான முரண்பாட்டைத் தீர்த்து வைக்குமாறும் கோரியுள்ளார். மாகாணசபை உறுப்பினர் மக்களுடன் பேசி, 5 பொது மக்களை அழைத்துக்கொண்டு, அவரும் அரச அதிபரிடம் சென்றுள்ளார்.

அதன்போது அரச அதிபர், நீங்களா இந்தப் பேரணியை ஒழுங்கு செய்தது என்று மாகாணசபை உறுப்பினரைப் பார்த்துக் கேள்வி எழுப்பியுள்ளார். இதற்கு அவர் இல்லை என்று பதிலளித்துள்ளார். அதையடுத்து அரச அதிபர், லிங்கநாதனை அங்கிருந்து வெளியேறுமாறு தெரிவித்துள்ளார். அங்கிருந்து வெளியேறிய அவர் வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினர்களுக்கும், வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரியப்படுத்தினார். இதுகுறித்து மாகாண மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச அதிபரிடம் சென்று வினவியபோது, அவ்வாறு நான் செய்வேன் அது என்னுடைய ஒழுங்கு. இதனை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் முறையிடுங்கள் என்று பதிலளித்துள்ளார்.

அதையடுத்து வவுனியா மாவட்ட சகல மக்கள் பிரதிநிதிகளும் இணைந்து கையெழுத்திட்டு, ஜனாதிபதிக்கு மனு அனுப்பியுள்ளனர்.

மக்கள் பிரதிநிதிகளை அவமானப்படுத்திய சம்பவம் தொடர்பில் கண்டனத் தீர்மானத்தை முன்மொழிவதாக, சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவிக்க, எதிர்க்கட்சி உறுப்பினர் ஜெயதிலக வழிமொழிந்தார். (ற-5)

# சமுர்த்தி உத்தியோகத்தரை கடித்தவர் கைதானார்

வவுனியா, மார்ச் 21

வவுனியா பிரதேச செயலகத்தில் கடமையில் இருந்த உதவிப் பிரதேச செயலரைத் தகாத வார்த்தைகளால் திட்டியதுடன், பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரைக் கடித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

காணிப் பிரச்சினை தொடர்பாக வவுனியா சமளங்குளம் பகுதி யைச் சேர்ந்த ஒருவர் வவுனியா பிரதேச செயலகத்துக்குச் சென்றிருந் தார். பிரச்சினை தொடர்பில் உதவிப் பிரதேச செயலருடன் அவர் உரையாடியுள்ளார். உதவிப் பிரதேச செயலர் அவருக்குச் சார்பாகப் பேசாததை அடுத்து தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

திட்டிவிட்டு அங்கிருந்து வெளியேற முற்பட்டபோது, அங்கு நின்றிருந்த சமுர்த்தி உத்தியோகத்தர் குறித்த நபரைத் தடுத்துள்ளார். அந்த நபர் அவரைக் கடித்து விட்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்டுள்ளார். இதுகுறித்துப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட, அவர்கள் குறித்த நபரைக் கைது செய்துள்ளனர். (ற-402)

# இம்முறை அதிகளவு புழுக்கொடியல் கொள்வனவு

யாழ்ப்பாணம், மார்ச் 21

பனை அபிவிருத்தி சபை இம்முறை கூடுதலான புளுக்கொடியலை கொள்வனவு செய்யவுள்ளது என்று பனை அபிவிருத்தி சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நெடுந்தீவு, பூநகரி பிரதேசங்களில் இருந்து கூடுதலான புளுக்கொடியல் பயனாளிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்படவுள்ளது.

கொள்வனவு செய்யப்படும் புளுக்கொடியல் உரிய முறையில் பதப்படுத்தப்பட்டு, பொதிகளாக்கப்பட்டு நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும். நாடு பூராகவும் உள்ள பனம்பொருள் உற்பத்தி விற்பனை நிலையங்கள் ஊடாக இந்த புளுக்கொடியல் நுகர்வோருக்கு விநியோகிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-17)

# பளை முதல் காங்கேசன்துறைவரை தன்னியக்க ரயில் கடவை வேண்டும்

## சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தில் தனிநபர் பிரேரணை

தென்மராட்சி, மார்ச் 21

பளை முதல் காங்கேசன்துறை வரை காணப்படும் ரயில் கடவைகளுக்கு தன்னியக்க பாதுகாப்புக் கடவைகள் அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கடவைக்கும் ஊழியர்களை நியமித்து எதிர்காலத்தில் கடவைகளில் ஏற்படும் விபத்துக்களைத் தவிக்க வேண்டும். இது தொடர்பாக உரிய திணைக்களத்துக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். – இவ்வாறு சாவகச்சேரி நகரசபைக் கூட்டத்தில் தனிநபர் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

நகர சபை உறுப்பினர் த.சுதர்சன் இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்தார். அதன்பின்னர் அவர் உரையாற்றும்போதும்,

"பளை முதல் நாவற்குளி வரையிலான பகுதியில் 25 ரயில் கடவைகள் காணப்படுகின்றபோதும், மிகக் குறைந்த அளவிலான தன்னியக்க கடவைகளே அமைக்கப்பட்டுள்ளன. சிலவற்றில் சிலவற்றில் அபாய சமிக்ஞை மட்டும் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் அதில் ஊழியர்கள் காணப்படுவதில்லை."– என்று குறிப்பிட்டார்.

"ரயில் வருவது தெரியாமல் வீதியைக் கடக்க முற்படுவோர் விபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளனர். நீண்டகாலமாக இருந்து வந்த பல கடவைகள் ரயில் பாதை அமைக்கப்பட்டபோது கடவையாக மாற்றப்படவில்லை. யாழ்ப்பாணம் – கொழும்பு ரயில் சேவைகளில் அதிக வருமானம் கிடைப்பதால் பளை தொடக்கம் காங்கேசன்துறை வரையான புகையிரதப் பாதையில் உள்ள கடவைகளுக்கு தன்னியக்க கடவைகளை அமைப்பதுடன் அதற்கு நிரந்தர ஊழியர்களையும் நியமிக்க வேண்டும்."– என்றும் தெரிவித்தார்.

இந்தப் பிரேரணையை ஏனைய உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர். இது தொடர்பாக ரயில்வே திணைக்களத்துடன் தொடர்பு கொள்வதாக தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை தெரிவித்தார். (ற-9)

# நின்ற ரயிலில் இருந்து விழுந்து மூதாட்டி காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். புகையிரத நிலையத்தில் தரித்து நின்ற ரயிலில் ஏற முற்பட்ட போது தவறி விழுந்ததில் மூதாட்டியொருவர் காயங்களுக்குள்ளாயுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

காயமடைந்த மூதாட்டி யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியைச் சேர்ந்த கோ.சரோஜாதேவி (வயது–66) என்பவரே காயமடைந்தவராவார்.

கொழும்புக்குச் செல்வதற்காக புகையிரத நிலையத்துக்குச் சென்ற இவர், ரயிலில் ஏறுவதற்கு முற்பட்டபோது தவறி வீழ்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## புதிய நெல்வகை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21
சேற்று நில விளைச்சலுக்கு ஒப் ...ன விளைச்சல் தரக்கூடிய புதிய வகை நெற்செய்கை ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஹரோபிக் என்று அழைக்கப்படும் இந்தவகை நெல், தண்ணீர் இன்றியும் களைகளை கட்டுப்படுத்தி வளரும் தன்மை உடையது. உயரமாக வளரும் இந்த வகை நெல் 3 மாதங்களில் விளைச்சலைத் தரும்."– என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## 13 பேருக்கு இடர் நிவாரண கொடுப்பனவு

யாழ்ப்பாணம், மார்ச் 21
வடமாகாண சமூக சேவைகள் ...ணைக்களத்தால் கிளிநொச்சி, ...ரைச்சி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 13பேருக்கு இடர் நிவாரணக் கொடுப்பனவாக வீடுகள் புனரமைக்க தலா 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலாளர் கோபாலப்பிள்ளை நாகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

"சமூக சேவைகள் உத்தியோகத்தர், வெளிக்கள மேற்பார்வை செய்து தகுதியான பயனாளிகளை தெரிவு செய்தனர். உரிய பிரிவின் கிராம அலுவலர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் இவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். எதிர்பாராத தீ விபத்து, கடுங்காற்று என்பவற்றால் பாதிக்கப்பட்டவர்களே இந்த நிதி உதவியைப் பெறவுள்ளனர். இவர்கள் வீடு புனரமைப்பை உரிய முறையில் செய்தால் அவர்களுக்கு இரண்டாம் கட்ட நிதி தலா 10 ஆயிரம் ரூபா நன்கொடை வழங்கப்படும்."– என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

## சிறுநீர் கழிக்கவெனக் கூறி தப்பியவர் மீள சிக்கினார்

யாழ்ப்பாணம், மார்ச் 21
சிறுநீர் கழிக்கச் செல்வதாக் கூறி பொலிஸ் நிலையத்திலிருந்து தப்பியோடிய திருட்டுச் சந்தேகநபர் சில மாதங்களின் பின்னர் கடந்த புதன் கிழமை இரவு யாழ்.நகர பஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


வட்டுக்கோட்டையில் சில மாதங்களுக்கு முன்னர் வீடு ஒன்றில் கூலி வேலை செய்வதற்காகச் சென்றிருந்தபோது அங்கிருந்த பெறுமதி ...க்க 2 கைத்தொலைபேசிகளை வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த குறித்தத சந்தேகநபர் திருடியுள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் குறித்த சந்தேகநபரை வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைக்கு அழைத்திருந்தனர். அங்கு சென்ற குறித்த சந்தேகநபர் சிறுநீர் கழிக்கச் செல்வதாகக் கூறி வெளியேறி அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார்.

இந்நிலையில் குறித்த சந்தேக நபர் யா...ப.பஸ் நிலையத்தை அண்மித்து ...வு 10 மணியளவில் சந்தேக...ன முறையில் நடமாடியுள்ளார். ...தனால் யாழ்.பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் அவரைக் கைது செய்து சென்றனர். விசாரணையில் அவர் வட்டுக்கோட்டையில் திருட்டுடன் தொடர்புடையவர் என்று தெரியவந்தது. வட்டுக்கோட்டைப் பொலிஸார் குறித்த சந்தேகநபரை பொறுப்பேற்றுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ற-4)

# விசேட தேவை உடையோருக்கு விசேட சேவை

### வவுனியா வைத்தியசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது



வவுனியா, மார்ச் 21
வவுனியா வைத்தியசாலையில் விசேட தேவைக்குரியோருக்கான விசேட சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய. கலாநிதி கு.அகிலேந்திரன் தெரிவித்துள்ளார்.

"வாய்பேச முடியாது, காது கேட்காதவர்கள் மற்றும் கண் பார்வையற்றவர்கள் வைத்தியசாலையில் தமது தேவைகளை தாமாகவே பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் சைன் மொழியிலான வழிகாட்டிகள் காட்சிப்படுத் தப்பட்டுள்ளன. பொது வைத்தியசாலையின் வரவேற்பாளர் இடத்தில் தொலைக்காட்சி பெட்டி நிறுவப்பட்டு, இதனூடாக இவ் வழிகாட்டல்கள் இடம்பெற்று வருகின்றன."– என்று அவர் தெரிவித்துள்ளார்.

"இவ்வாறான தகவல் அவர்களுக்கு போதுமானதாக இல்லாவிட்டால் வரவேற்பாளருக்கு தெரியப்படுத்தும் பட்சத்தில் விசேட தேவைக்குரியோருக்கான மேலதிக வழிகாட்டல் மற்றும் தேவைகளை நிறைவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்."– என்றும் அவர் கூறியுள்ளார்.

"வைத்தியசாலையில் 12 இற்கும் மேற்பட்ட அபிப்பிராயப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. வைத்தியசாலையில் நோயாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரடியாக கூற முடியாத பட்சத்தில் அதில் எழுத்திப் போட முடியும். அதேவேளை வைத்தியசாலையின் நல்ல விடயங்களையும் சுட்டிக்காட்டுவதுடன் மேலும் வைத்தியசாலையின் மேம்பாட்டுக்கு தேவையான கருத்துக்களையும் வழங்க முடியும்"– எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

## மூளைக்கட்டி அகற்றும் சத்திரசிகிச்சை வெற்றி





யாழ்ப்பாணம், மார்ச் 21
யாழ். போதனா வைத்தியசாலையில் மூளையில் ஏற்பட்ட கட்டி அகற்றும் சத்திரசிகிச்சை முதன்முதலாக கடந்த புதன் கிழமை நடத்தப்பட்டது. சத்திரசிகிச்சை வெற்றியளித்துள்ளது என்று நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் சஞ்சீவ கருசிங்க தெரிவித்தார்.

"மூளைக்கட்டியால் அவதியுற்ற பெண் நோயாளி ஒருவருக்கு இந்தச் சத்திரசிகிச்சை நடத்தப்பட்டது. சுமார் 6 மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட ஆழ்ந்த சத்திரசிகிச்சையின் பின்னர் குறித்த பெண் நோயாளி நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கின்றார்."– என்று அவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சால் மிகக்குறுகிய காலத்தில் 200 மில்லியன் ரூபா பெறுமதியான சத்திரசிகிச்சை உபகரணங்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டு இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. இந்த சத்திரசிகிச்சையானது, யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பவானி பசுபதிராஜாவின் ஆலோசனைக்கு அமைவாக நரம்பியல் வைத்திய நிபுணர் சஞ்சீவ கருசிங்கவாலும், வைத்தியர்கள் குழாமாலும் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

மூளைக்கட்டி சத்திரசிகிச்சை எதிர்காலத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படுமென்றும், எதிர்வரும் ஒவ்வொரு வாரத்திலும் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-106)



வாய் சுகாதார சர்வதேசதினம், மன்னாரில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் வாய் சுகாதார விழிர்ப்புணர்வு கருத்தரங்கும் ஊர்வலமும் இடம்பெற்றது. காலை 8 மணயளவில் குறித்த ஊர்வலம் மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்னால் ஆரம்பமாகி, பிரதான வீதியூடாக மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்து, மீண்டும் மன்னார் பொது விளையாட்டு மைதான வீதியூடாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையை சென்றடைந்தது. ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள், விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன் வாய் சுகாதாரம் தொடர்பில் பொதுமக்களுக்கு விளக்கமளித்தனர். (ற)

# வீட்டுத்தோட்ட செய்கைக்கு மரக்கறி நாற்றுக்கள்

### விவசாயத் திணைக்களம், கமநல அபிவிருத்தி திணைக்களம் இணைந்து நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 21
மத்திய விவசாய அமைச்சின் வழிகாட்டலின் கீழ் விவசாயத் திணைக்களம் மற்றும் கமநல அபிவிருத்தி திணைக்களம் ஆகியன இணைந்து யாழ்.மாவட்டத்திலுள்ள 5 ஆயிரத்து 575 வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையாளர்களுக்கு மரக்கறி நாற்றுக்களை வழங்கவுள்ளதாக வடமாகாண விவசாயத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் கி.ஸ்ரீ பாலசுந்தரம் தெரிவித்தார்.

"ஏப்ரல், மே, நவம்பர் மற்றும் மார்கழி மாதங்களில் மரக்கறிகளில் விலை யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு இந்த திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது. இதற்காக 22 முன்னோடி நாற்று மேடையாளர்களை தெரிவு செய்து அவர்களுக்கு மரக்கறி விதைகளை வழங்கி நாற்று உற்பத்தி செய்கின்றோம்."– என்று அவர் தெரிவித்தார்.

"ஒரு வீட்டுத் தோட்டத்துக்கு 30 நாற்றுக்கள் என்ற வீதம் எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து உற்பத்தி செய்த நாற்றுக்கள் வழங்கவுள்ளோம். இதன்மூலம் எதிர்வரும் மே மற்றும் ஜுன் மாதங்களில் 5,575 சிறந்த முறை வீட்டுத்திட்டங்களை உருவாக்க எதிர்பார்க்கின்றோம். மரக்கறி விலை அதிகரிப்பு காலங்களில் அனைத்து வகையான மரக்கறிகளையும் மக்கள் பெற்றுக்கொள்ள இது சிறந்த நடவடிக்கையாக இருக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். இந்த நடவடிக்கை வடமாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்."– என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# ஓமந்தையில் அரச ஊழியரின் பொதுக் காணியில் வீடுகள் கட்டப்படுவதை அனுமதிக்க முடியாது

### வவுனியா மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21
ஓமந்தை வேப்பம்குளம் அரச ஊழியர்களின் பொதுத் தேவைக்காக ஒதுக்கப்பட்ட காணிகளை அரச ஊழியர்களுக்குவழங்குவதைநிறுத்துமாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் பொது தேவைகளுக்காக ஒதுக்கபட்ட காணிகளை அரச ஊழியர்களுக்கு பிரதேச செயலாளர் வழங்கியமை தொடர்பாக வவுனியா மாவட்ட அரச அதிப ருக்கு ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்ட கிராம அபிவிருத்திச் சங்கம் முறைப்பாடு செய்திருந்தது.

"அரச ஊழியர்கள் நலன்கருதி அவர்கள் வீடு கட்ட காணிகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு பொது விளையாட்டு மைதானம், சந்தை, வர்த்தக நிலையம், கோயில், பஸ் தரிப்பிடம், முன்பள்ளி, கிராம அபிவிருத்திச் சங்கம் போன்றன அவசியமானவை. அவற்றை தனிப்பட அரச ஊழியர்கள் வீடுகட்ட பங்கிடமுடியாது. இக்காணிகள் அரச ஊழியர்களுக்கு அண்மையில் பங்கிடப்பட்டுள்ளன. அதனை நான் எதிர்க்கின்றேன். உடனடியாக இந்தப் பொது தேவைக்காக வழங்கப்பட்ட காணிகளை அரசஊழியர்களுக்கு வழங்க முடியாது. இவ்வாறு வழங்கப்பட்ட காணிகளை இரத்துச் செய்யுமாறு வவுனியா பிரதேசசெயலாளர் கா.உதயராசாவுக்கு அறிவிக்கவுள்ளேன்."– என்று அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ற-402)

## தாலிக்கொடி களவு

வவுனியா, மார்ச் 21
யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த பெண் ஒருவரிடம் இருந்து தாலிக்கொடி களவாடப்பட்டுள்ளது. பஸ்ஸில் குறித்த பெண் பயணமாகியுள்ளார். முறிகண்டியில் தேநீர் அருந்துவதற்காக பஸ் நிறுத்தப்பட்டது. அப்போது அருகி லிருந்த வயோதிபரிடம் தனது கைப்பையை அந்தப் பெண் கொடுத்துள்ளார். அதன் பின்னர் வவுனியா வந்து பார்த்த போது கைப்பைக்குள் இருந்த தாலிக்கொடியைக் காணவில்லை. அருகில்இருந்த பயணியிடம்கைப்பையைக் கொடுத்த சமயமே தாலிக் கொடி களவாடப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-402)

# அதிரடி காட்டினார் நிரோஷன் சென். ஹென்றிஸ் திரில் வெற்றி



யாழ்ப்பாணம்,மார்ச் 21
வலிகாமம் வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த புதன்கிழமை வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணியை எதிர்த்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலய அணி மோதிக்கொண்டது. ஆரம்பம் முதலே இரண்டு அணியினரும் தமது அணிக்கான கோல்களைப் பெறுவதற்காகக் கடுமையாகப் போரிட்டுக் கொண்டனர். இருந்தும் எவ்வித பயனும் கிட்டவில்லை. ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது இரு அணியினரும் எந்தவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

சமநிலைத்தன்மை எப்படியாவது தகர்க்கப்படும் என்ற பரபரப்பான தருணத்தில் ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாம்பாதி. நிமிடங்களுடன் இணைந்த முறையில் பந்தும் அங்கும் இங்குமாக உருண் டோடிக் கொண்டிருந்தது. ஆனால் கோல்களோ பதிவு செய்யப்பட்டபாடில்லை. ஆட்டம் சமநிலையில் தான் செல்லப் போகின்றது என்று கணித்து விட்டார்கள் ரசிகர்கள். ஆனால் ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் ஹென்றியரசர் கல்லூரி வீரன் நிரேஷன் எதிர் அணி வீரர்களுக்கு மின்னல் வேக வித்தையைக் காட்டி வாய்ப்பைக் கோலாக மாற்ற இளவாலை புனித ஹென் றியரசர் கல்லூரி அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியன் ஆனது.

மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அராலி கிழக்கு அ.த.க. பாடசாலை அணி மோதிக் கொண்டது. இதில் மானிப்பாய் இந்தக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் மிடத்தைத் தனதாக்கிக் கொண் டது. (த–ரி,23)

## ஞானம்ஸ் தொடர் இன்று ஆரம்பம்

கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்து கிரிக்கெட் தொடரின் ஆட்டங்கள் இன்றும்,நாளையும், ஞானம்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் போட்டிக் குழு தலைவர்,செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த–ரி,23)

## இலகு வெற்றியை பதிவு செய்தது பாரதி

மூளாய் விக்டோரி விளையாட்டுக் கழகத்தின் 15ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் நடத்தப்படும் ராகவன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகம் மற்றும் சங்கானை ஐக்கிய விளையாட்டுக் கழகம் அணிகள் பலப் பரீட்சை நடத்தின.

இந்த ஆட்டத்தில் நாயன்மார்கட்டு பாரதி அணி 25:05, 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (த–ரி)

## யாழ்.கூடைப்பந்து அணி இறுதியாட்டத்துக்கு தகுதி

இலங்கைக் கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் தேசிய மட்ட ரீதியிலான சிரேஷ்ட பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டச் தொடரின் 'பி' பிரிவு அணிகளுக்கான அரையிறுதியாட்டத்தில் யாழ். மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

கடந்த வாரம் பேராதனைப் பல்கலைக்கழகக் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த அரையிறுதியாட்டத்தில் யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணியை எதிர்த்து மட்டக்களப்பு மாவட்ட கூடைப்பந்தாட்ட அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்ட அணி 51:49 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (த–23,ரி)

## இந்துவின் கிண்ணம் யாருக்கு?

யாழ்.இந்துக்கல்லூரியின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19வயதுப் பிரிவு ஆண், பெண் கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலில் இடம் பெற்றவுள்ளன.

இதில் மாலை 4மணிக்கு இடம் பெறும் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் இராமநாதன் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மட அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி மோதவுள்ளது. இன்றைய நிகழ்வுக்குப் பிரதம விருந்தினாராக மற்றிக்ஸ் கோம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் ராஜ்குமார் கலந்துகொள்ளவுள்ளார். (த–ரி,23)

## நட்புறவுக் கிண்ணத்துக்காக கண்டி-யாழ். பலப் பரீட்சை



கண்டி உதைபந்தாட்ட லீக் அணி



யாழ்.உதைபந்தாட்ட லீக் அணி

யாழ்ப்பாணம்,மார்ச்21
தென் கொரியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு வெற்றிக்கிண்ணத்திற்கான 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் பி.ப.3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் யாழ்.உதைபந்தாட்ட லீக் அணியை எதிர்த்து கண்டி உதைபந்தாட்ட லீக் அணி மோதவுள்ளது. இன்றைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜாவும், கௌரவ விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் றஞ்சித் றொட்றிக்கோவும் கலந்துகொள்ளவுள்ளனர். கிண் ணத்தைத் தனதாக்கும் அணிக்கு கிண்ணத்துடன் இணைந்த முறையில் ஒரு லட்சம் ரூபா பணப் பரிசும், பதக்கங்களும், இரண்டாம் பெறும் அணிக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசும் பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன. (த–ரி,23)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

வேலை ஆள் தேவை
Editing, Photoshop
தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை. சம்பளம் நேரில் கதைத்துத் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: Vishta Video Vision
K.K.S. Road, Kondavil.
077 747 4498/ 021 222 3300

புதிய பிரிவுகள் ஆரம்பம் 28-03-2015
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
வங்கியியல் கற்கைநெறிகள்
IBSL
Banking courses
IABF & DABF
(Tamil & English Medium)
ualification: GCE O/L 6 passes with 5 credits
கணக்காய்வாளர் கற்கைநெறிகள்
Chartered Accounting Courses
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification: GCE A/L 3 passes
CA
பதிவுகளை உடன் மேற்கொள்ளவும்
Further Details:
JAFFNA COLLEGE
Undergraduate Dept
464, Hospital Road, Jaffna.
Tp. 0212223382
0212229149

கோணேஸ்வரனின் ஜேர்மன் கல்லூரி
German Language Academy
ஜேர்மன், சுவிஸ், டொச் மொழிகள் ஜேர்மன் தூதரகத்தால் கேட்கும் A1 சான்றிதழுக்கு ஏற்றவாறு இலகுவான வழியில் கோணேஸ்வரன் ஆசிரியர் அவர்களால் கற்பிக்கப்படும்.
இந்த ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட புத்தகங்களும் வழங்கப்படும்
புதிய பிரிவுகள் 23.03.2015 திங்கள் ஆரம்பம்
0779707322
ஆரியகுளம், யாழ்ப்பாணம்.

இவ் வருடம் BIT பட்டப்படிப்பினை ஆரம்பிக்கும் நோக்கம் கொண்டுள்ளீர்களா.....?
இலவச கருத்தரங்கு
BIT
Bachelor of Information Technology
(University of Colombo)
வரலாற்றின் சிறந்த பெறுபேறுகளை ESOFT உருவாக்கியுள்ளது.
5 முதல் வகுப்புத் தேர்ச்சிகள், மற்றும் பல சிறப்புத் தேர்ச்சிகள்
ஆதாரம் : 2015 பெறுபேறுகள்
" HOW TO BECOME A SUCCESSFUL BIT GRADUATE "
- கல்வித்துறை நிபுணர் மற்றும் BIT விருது பெற்றவர்களை சந்தித்து அவர்களின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்
- இலகுவான கற்றல் உபாயங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்
ESOFT Shaping Lives, Creating Futures
NO . 01 for BIT
26.03.2015
TIME : 10:00 AM
உங்களது ஆசனப் பதிவுகளுக்கு உங்களது பெயர் விபரங்களை 077 309 9 308 இலக்கத்திற்கு "SBIT" என குறித்து SMS செய்யுங்கள்
ESOFT METRO CAMPUS
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142
இலங்கையின் மிகப்பெரிய உயர்கல்வி வலையமைப்பு

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.